# அகநானூற்றில் மகளிர் வாழ்வியல்

ஆய்வாளர்

**த.திலகவதி**

**(18MPTMF004)**

ஆய்வியல் நிறைஞர் தமிழ் இலக்கியப் பட்டத்திற்குரிய
பகுதித்தேவைக்காக அளிக்கப்படும் ஆய்வேடு

**தமிழ்த்துறை**

**அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்**

**கோயம்புத்தூர் - 641 043.**

**ஜூலை - 2019**

# அகநானூற்றில் மகளிர் வாழ்வியல்

த.திலகவதி

**18MPTMF004**

ஆய்வியல் நிறைஞர் பட்டத்திற்காக

அளிக்கப்படும் ஆய்வேடு

அவினாசிலிங்கம் மனையியல் மற்றும்

மகளிர் உயர்கல்வி நிறுவனம்

கோயம்புத்தூர் – 641 043.

ஆய்வுப் பணிக்காகச் சான்று அளிக்கப்படுகிறது

| | | |
|---|---|---|
| 31.07.19 | 31/7/19 | 31/07/19 |
| தமிழ்த்துறைத் தலைவர் கையொப்பம் | கலை மற்றும் சமூக அறிவியல் பள்ளி புல முதன்மையர் கையொப்பம் | ஆய்வு நெறியாளர் கையொப்பம் |

## ஆய்வு நெறியாளர் சான்றிதழ்

**முனைவர் மு.கவிதா**
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்,
கோயம்புத்தூர் – 641 043.

**'அகநானூற்றில் மகளிர் வாழ்வியல்'** என்னும் தலைப்பில் ஆய்வியல் நிறைஞர் பட்டத்திற்காக **செல்வி. த.திலகவதி** அவர்கள் செய்துள்ள இந்த ஆய்வு அவினாசிலிங்கம் மனையியல்மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், தமிழ்த்துறையில் என்னுடைய நெறிப்படுத்தலின் கீழ் அவரால் தன்னிச்சையாகச் செய்யப்பட்டதென்றும், இவ்வாய்வின் போது ஆய்வாளருக்கு வேறு எந்தப் பட்டமும் அளிக்கப்பெறவில்லை என்றும் நான் அறிந்தவரையில் இத்தலைப்பில் வேறுஎவரும் ஆய்வு செய்யவில்லை என்றும் சான்றளிக்கின்றேன்.

31.07.19 31/07/19

**தமிழ்த்துறைத்தலைவர்** **ஆய்வுநெறியாளர்**

**கலைமற்றும் சமூகஅறிவியல்**
**புலமுதன்மையர்**

இடம்: கோயம்புத்தூர்
நாள்: 31.07.2019

## ஆய்வாளர் உறுதிமொழி

**செல்வி. த.திலகவதி**
ஆய்வியல் நிறைஞர் (தமிழ்)
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்
கோயம்புத்தூர் - 641043.

**'அகநானூற்றில் மகளிர் வாழ்வியல்'** என்னும் தலைப்பில் ஆய்வியல் நிறைஞர் பட்டத்திற்காகச் செய்யப்பட்டுள்ள இந்த ஆய்வானது எனது சொந்த முயற்சியால் உருவானதாகும். இதற்குமுன் வேறு எந்த ஆராய்ச்சிப் பட்டத்திற்கும் இந்த ஆய்வேடு அளிக்கப்படவில்லை என உறுதியளிக்கிறேன்.

31/07/19
**ஆய்வுநெறியாளர்**

T. Thilagavathi
**ஆய்வாளர்**

இடம் : கோயம்புத்தூர்
நாள் : 31.07.2019

## நன்றியுரை

**நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க!**

**இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!**

என்னும் அடிகளுக்குக்கேற்ப எனது ஆய்வானதுநல்ல சூழ்நிலையில் உருவாகத் தேவையானஞானத்தையும், ஆற்றலையும் கொடுத்து எமக்கு அருள்புரிந்த எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றிகள்.

**'அகநானூற்றில் மகளிர் வாழ்வியல்'** என்னும் இவ்வாய்வேடு அமையக் காரணமாக இருந்தவேந்தர் **பத்மஸ்ரீ டாக்டர் ப.ரா.கிருஷ்ணகுமார்** அவர்களுக்குஎன் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இக்கல்வி நிறுவனத்தில் கல்விபயின்று இவ்வாய்வினை மேற்கொள்ள உதவிய துணைவேந்தர் **முனைவர். பிரேமாவதி விஜயன்** எம்.எஸ்சி.,எம்.எட்., எஸ்பிஎல்.எட்.,எம்.ஃ.பில்.,பிஎச்.டி.,அவர்களுக்கும், பதிவாளர் **முனைவர். ச.கௌசல்யா** எம்.எஸ்சி.,எம்.ஃ.பில்.,பிஎச்.டி., அவர்களுக்கும் மற்றும் கலைமற்றும் சமூக அறிவியல் புலமுதன்மையர் **முனைவர். கே.டி. கீதா**எம்.ஏ.,எம்.ஃ.பில்.,பிஎச்.டி., அவர்களுக்கும் என் இதயம் கனிந்த நன்றிகள்.

இவ்வாய்வேடு நல்ல முறையில் அமைவதற்காக என்னை நாள்தோறும் ஊக்கப்படுத்தி நற்கருத்துக்களைக் கூறி நல்வழி காட்டிய எமது தமிழ்த்துறைத் தலைவர் (பொறுப்பு) மற்றும் ஆய்வுநெறியாளர் **முனைவர் மு.கவிதா** எம்.ஏ.,எம்.எட்.,எம்.பில்.,பிஎச்டி.,அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாய்விற்கு துணை புரிந்த எமது **தமிழ்த்துறைப் பேராசிரியர்** அனைவருக்கும் எனதுநன்றி.

இவ்வாய்விற்கு தேவையான நூல்களைக் கொடுத்து அமைதியான சூழலை உருவாக்கிக் கொடுத்த அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனத்தின் **தலைமை நூலகர்,துணை நூலகர்,உதவியாளர்** அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் ஆய்வுசிறப்பாக அமைவதற்கு எல்லா சூழ்நிலையிலும் எனக்குத் துணையாக நின்றுஎன் உயர் படிப்பிற்கு ஊக்கமளித்த **என் தாய் தந்தையருக்கும்** எனது பாசமிகு நன்றியினை உரித்தாக்கிக் கொள்கிறேன். என் ஆய்விற்கு பலவகைகளில் உதவிபுரிந்த **சகதோழிகளுக்கும்** என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| அகம் | - | அகநானூறு |
| களவு | - | களவியல் |
| குறள் | - | திருக்குறள் |
| சிலம்பு | - | சிலப்பதிகாரம் |
| தொல் | - | தொல்காப்பியம் |
| நற்றி | - | நற்றிணை |
| நாலடி | - | நாலடியார் |
| நூ | - | நூற்பா |
| ப | - | பக்கம் |
| பா | - | பாடல் |
| புறம் | - | புறநானூறு |
| பொருள் | - | பொருளதிகாரம் |
| மணி | - | மணிமேகலை |
| மெய் | - | மெய்ப்பாட்டியல் |

பொருளடக்கம்


| இயல் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|
| | முன்னுரை | 1-3 |
| 1. | அகநானூற்றில் மகளிர் | 4-41 |
| 2. | மகளிர் உளவியல் | 42-53 |
| 3. | மகளிர் பண்பாடும் பழக்கவழக்கங்களும் | 54-81 |
| 4. | மகளிர் சார்ந்த நம்பிக்கைகள், சடங்குகள் | 82-104 |
| | முடிவுரை | 105-106 |
| | துணைநூற்பட்டியல் | 107-116 |
| | பின்னிணைப்பு | |

முன்னுரை

## முன்னுரை

சங்க இலக்கியம் எனப்படுவது தமிழில் கிறித்துவத்துக்கு முற்பட்ட காலப்பகுதியில் எழுதப்பட்ட செவ்வியல் இலக்கியங்கள் ஆகும். பல்லாயிரம் ஆண்டு காலப் பழமையான இலக்கிய இலக்கணங்களைக் கொண்ட மொழியாகத் தமிழ்

மொழி விளங்குகின்றது. அதனால் அம்மொழி நீண்டகால இலக்கிய வரலாற்றினைக் கொண்டிருக்கிறது. இதில் முதன்மையான இலக்கிய வரலாற்றுக் காலம் சங்க காலமாகும். தொன்மையான மொழிகளுள் மிகச்சிறந்த மொழி தமிழ்மொழி. இம்மொழி காலத்தால் முற்பட்டது. தமிழ் எம்மொழிக்கும் தாழ்ந்து வளையாது தலைநிமிர்ந்து நின்று தன் தனித்தன்மையைக் காத்து, தன்னை அணைத்து அழிக்க வந்த வடமொழியையும் வலுவிழக்கச் செய்து வாழ்ந்து வளர்ந்துவரும் மொழியாகும். சங்க இலக்கியம் நமது மூதாதையரின் அனுபவங்களையும், எண்ணங்களையும் வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளது. அவற்றைத் தொகுத்து எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என வரிசைப்படுத்தியுள்ளனர். சங்கத் தமிழர் இலக்கியத்தில் அகம், புறம் இரண்டையும் கண்ணெனப் போற்றினர். அகநானூறு சங்க காலத்தைச் சேர்ந்த எட்டுத்தொகை எனப்படும் தமிழ் நூல் தொகுப்பில் உள்ள ஒரு நூலாகும். இது ஓர் அகத்திணை சார்ந்த நூல் என்பதுடன் இதில் நானூறு பாடல்கள் அடங்கியுள்ளதால் இது அகநானூறு என வழங்கப்படுகிறது. அகம் என்னும் சொல்லால் குறிக்கப்படுவது அகநானூறு மட்டுமே. அகத் தொகையுள் நீண்ட பாடல்களைக் கொண்டமையால் இதனை 'நெடுந்தொகை' என்றும் கூறுவர். அவ்வகையில் **"அகநானூற்றில் மகளிர் வாழ்வியல்"**என்ற தலைப்பில் இவ்வாய்வேடு ஆராய முற்படுகிறது.

**ஆய்வத் தலைப்பு**

"அகநானூற்றில் மகளிர் வாழ்வியல்" என்பதே இவ்வாய்வின் தலைப்பாகும்.

**ஆய்வு நோக்கம்**

சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகை நூல்களான அகநானூற்றில் மகளிர், பெண்பாற்புலவர்கள், மகளிர் உளம் சார்ந்த நிலை, பண்பாடு மற்றும் பழக்கவழக்கம், நம்பிக்கை, சடங்குகள் ஆகியன குறித்து ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வு எல்லை**

அகநானூற்றில் கடவுள் வாழ்த்துப் பாடல் நீங்கலாக உள்ள நானூறு பாடல்களும் இவ்வாய்விற்கு எல்லையாக அமைந்துள்ளன.

**ஆய்வு ஆதாரங்கள்**

ஆய்விற்கான அடிப்படைச் சான்றுகள் முதன்மைச் சான்றுகள், துணைமைச் சான்றுகள் என இருவகைகளில் அமைகின்றன.

**முதன்மைச் சான்றாதாரம்**

அகநானூறு, என்ற நூல் இவ்வாய்விற்கு முதன்மைச் சான்றாதாரமாக அமைந்துள்ளது.

**துணைமை சான்றாதரங்கள்**

இவ்வாய்வினை ஒட்டியத் திறனாய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், அகராதிகள், ஆய்வேடுகள் முதலானவை துணைமைச் சான்றுகளாக அமைகின்றன.

**ஆய்வு அணுகுமுறை**

இவ்வாய்வில் பெண்ணிய ஆய்வு, விளக்கமுறை ஆய்வு, உளவியல் ஆய்வு, சமூகவியல் ஆய்வு ஆகிய அணுகுமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன.

**ஆய்வுப்பகுப்பு முறை**

இவ்வாய்வு முன்னுரை, முடிவுரையோடு நான்கு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளன

**முன்னுரை**

**இயல் ஒன்று** : அகநானூற்றில் மகளிர்

**இயல் இரண்டு** : மகளிர் உளவியல்

**இயல் மூன்று** : மகளிர் பண்பாடும் பழக்கவழக்கங்களும்

**இயல் நான்கு** : மகளிர் சார்ந்த நம்பிக்கைகள், சடங்குகள்

முடிவுரை

துணைநூற்பட்டியல்

பின்னிணைப்பு

**இயல் 1 : அகநானூற்றில் மகளிர்**

‘அகநானூற்றில் மகளிர்’ என்னும் முதல் இயலில் தலைவியின் பிறப்பும் வளர்ப்பும், பண்பு நலன்களும், பொறுமை, களவு, கற்பு என்ற நிலையில் தலைவியின் செயல்பாடுகள், தோழியின் நோக்கம், அறத்தோடு நிற்றல், காதல், கற்பிற்குத் துணை நிற்றல், செவிலியின் இயல்பு, நற்றாயின் சிறப்பு, சமூகத்தில் பரத்தையர் நிலைகள், பெண்பாற் புலவர்கள் போன்ற செய்திகள் இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளது.

**இயல் 2 : மகளிர் உளவியல்**

‘மகளிர் உளவியல்’ என்னும் இரண்டாம் இயலில் தலைவி தனிமை விரும்புதல், தோழி, செவிலி, நற்றாய், பரத்தை ஆகியோரின் உளம் சார்ந்த பண்புகள் குறித்து இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளன.

**இயல் 3 : மகளிர் பண்பாடும் பழக்கவழக்கங்களும்**

‘மகளிர் பண்பாடும் பழக்கவழக்கங்களும்’ என்னும் மூன்றாம் இயலில் விருந்தோம்பல் பண்பு, கலைகள், ஆடைகள், தொழில்கள், விளையாட்டு முதலியன குறித்து இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளன.

**இயல் 4 : மகளிர் சார்ந்த நம்பிக்கைகள், சடங்குகள்**

‘மகளிர் சார்ந்த நம்பிக்கைகள்’ சடங்குகள் என்னும் நான்காம் இயலில் இம்மை, மறுமை பற்றிய நம்பிக்கை, பல்லி சகுணம், புள் நிமித்தம், திருமணம் சார்ந்த நம்பிக்கை, சடங்குகள், சிலம்பு கழி நோன்பு போன்ற செய்திகள் குறித்து இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளது.

**முடிவுரை**

நான்கு இயல்களிலும் ஆராய்ந்து கொடுக்கப்பட்டுள்ள முடிவுகள் ஆய்வின் இறுதியில் முடிவுரையாகத் தொகுத்து தரப்பட்டுள்ளன.

**துணைநூற்பட்டியல்**

ஆய்விற்கு உறுதுணையாக இருந்த நூல்களின் விவரங்கள் துணைநூற்பட்டியலில் அகர வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

**பின்னினைப்பு**

அகநானூற்றிலுள்ள மொத்த பாடல்களில் பெண்பாற் புலவர்கள் பாடிய பாடல்கள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

## இயல் 1

## அகநானூற்றில் மகளிர்

இயல் 1

அகநானூற்றில் மகளிர்

**முன்னுரை**

மனிதன் அறிவு வளர்ச்சிப் பெற்ற காலம் முதல் இன்று வரை மாறாது நிலைப்பெற்றுள்ள ஒரு பாகுபாடு ஆடவர், மகளிர் என்ற பால் பாகுபாடாகும். இப்பாகுபாடு உடலமைப்பின் அடிப்படையில் தோன்றியது. பெண் என்பவள் இனப்பெருக்கி என்ற ஆற்றலைப் பெற்றவளாகவும் குழந்தை, கணவன் என்னும் குடும்பச் சூழலுக்குள் நம்மை ஈடுபடுத்திக் கொண்டும் வாழ்ந்தனர். மனிதன் ஆற்றும் செயல்களின் மூலம், அவரவர் சமூகத்தில் பெறும் மதிப்பு நிலையில் வேறுபட்டுள்ளனர். சங்க காலத்தில் பெண்கள் சமூகத்தில் இருந்து பல்வேறு இனக்குழுக்களிடமும்,பிறரிடமும் தங்களைக் காத்துக்கொள்ள சமூகக் கட்டுப்பாடுகளும், விதிமுறைகளும் பெண்கள் மேல் ஆடவர்களே விதித்தனர். குடும்பத்தில் பொருளாதாரத்தைப் பெற்று தருவதில் ஆடவர்கள் முக்கியத்துவம் பெற்றிருந்தமையால் பெண்கள் ஆடவர்களைச் சார்ந்து தங்கியிருக்கும் நிலையில் இருந்தனர். அவ்வகையில் அகநானூற்றில் அகமாந்தர்களில் மகளிர், பெண்பாற் புலவர்கள் குறித்து ஆராயும் விதமாக இவ்வியல் அமைகிறது.

## அகநானூற்றின் சிறப்பு

அகநானூறு 13 அடிச் சிற்றெல்லையும் 31 அடிப்பேரெல்லையும் உடைய 400 பாடல்களைக் கொண்டது. ஆசிரியப்பா யாப்புடையது. பாரதம் பாடிய பெருந்தேவனார் இதற்கு வாழத்துப் பாடியள்ளார். அது சிவ வணக்கப் பாடலாகும். இதற்கு **நெடுந்தொகை** என்ற பெயரும் உண்டு. இது களிற்றியானை நிரை(1-120), மணிமிடை பவளம்(121-300), நித்திலக்கோவை(301-400) என்று மூன்று தொகுதிகளாக உள்ளது. இந்நூலைத் தொகுத்தவர் மதுரை உப்பூரிகுடி கிழார் தொகுப்பித்தவன் உக்கிரப்பெருவழுதி ஆவார். அகநானூறு பண்டைத் தமிழரின் அரசியல் வரலாற்றையும், சமூக வரலாற்றையும் அறிய உதவுகிறது. பல புலவர்களால் பல திணைகளில் பாடிய பாடல்கள் கொண்ட நூல் அகநானூறு ஆகும். நெடுந்தொகை என்ற சிறப்பு பெயரும் இந்நூலுக்கு உண்டு. இவை அகநானூற்றின் சிறப்பு செய்திகளாகும்.

## அகநானூற்றில் இடம்பெறும் மகளிர்

அ. தலைவி ஆ.தோழி இ. செவிலி ஈ. நற்றாய் உ. பரத்தை ஊ. விறலி

### அ. தலைவி

சங்க இலக்கியங்களில் பெரும்பான்மையான அகம் சார்ந்தவைகளாகும். அக மாந்தர்களில் தலைமை பாத்திரமாகத் தலைவி விளங்குகிறாள். அகம் சார்ந்த சங்கப் பாக்களில் தலைவன் தலைவி இருவரும் சிறப்பிடம் பெற்றுள்ளவராயினும்,பாடுபொருள் அனைத்தும் தலைவியை மையமாகக் கொண்டு அமைந்துள்ளன. தலைவியானவள் களவு, கற்பு வாழ்வில் பல பண்பினைப் பெற்றுத் திகழ்கிறாள்.

### தலைவியின் பிறப்பும் வளர்ச்சியும்

தலைவியின் பிறப்பைப் பற்றி தெளிவாகக் குறிப்பிடும் சங்கப் பாடல் எதுவும் இல்லை. தலைவியின் இளமைப் பருவத்தில் அவள் உடல் நலத்தை பேணுபவளாக செவிலியும், உள நலத்தைப் போற்றிக் காக்கின்றவள் தோழியுமாகத் திகழ்கின்றனர்.

தலைவி மிகவும் சிறுமியாக இருந்த போது செல்லமாக வளர்க்கப் பெற்றாள். தலைவியின் தந்தை வீட்டில் செல்வ வளமும், ஆடம்பரமான வசதியும், செல்வச் செழிப்பும் உடையவளாகக் காணப்படுவதனை பாடல்கள் மூலம் அறிய முடிகின்றது. தலைவி, குழந்தைப் பருவத்தில் தன்னுடன் பிறந்த சகோதரன், சகோதரியுடன் விளையாடியதாக ஒரு குறிப்பும் காணப்படவில்லை. ''தலைவியைத் தன்னிகரற்றவளாகச் சிறப்பிக்க வேண்டும்'' என்னும் கருத்தால் இவ்வாறு புலவர்கள் குறிப்பிடாமையை ''புலநெறி இருந்திருப்பர்''[1] என்று க.திலகவதி அவர்கள் குறிப்பிடுகிறார்.

தலைவியினை வயது குறித்து ''பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும் குறிஞ்சி மலரைப் போன்றவள் தலைவி என்னும் குறிப்பினால் பன்னிரண்டு ஆண்டு என்பது தலைவியின் வயதைக் குறிப்பதாகலாம்''[2] என்று ஈகோ பாய்கரதாய் அவர்கள் குறிப்பிடுகிறார்.

**தலைவிக்குரிய பண்பு**

சங்க காலத்தில் தலைவிக்குரிய பண்புகளான அச்சம், நாணம், மடம் என்ற மூன்றினை எல்லாக் காலத்திலும், எல்லாப் பருவத்திலும் பெண்கள் பின்பற்றியுள்ளனர்.

**அச்சமும் நாணமும் மடனும் முந்துறத்த**

**நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப**[3]

என்றும், இதனைத் தவறாது பெண் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை,

**''நாணமும் மடனும் பெண்மைய ஆதலின்''**[4]

என்னும் நூற்பாவின் மூலம் அறியலாம்.

**பொறுமை**

சங்க காலப் பெண்கள் பொறுமையுடையவர்களாக விளங்கினர். ''பொறை எனப்படுவது மென்மையான மனத்துடன் பொறுத்துப் போகும் பண்பாகும்''[5] என்கிறார். பிறர் நமக்கு ஏதாவது ஒரு, காரணத்தினால் அல்லது அறிய அல்லது அறியாமையால் தீங்கு செய்தால் நாம் அவருக்குத் திரும்பத் தீங்கு செய்யாமல்,பிறர் செய்யும் தவறுகளைப் பொறுத்துக் கொள்ளுதல் வலிமைக்கு மேல் வலிமையைச் சேர்க்கும்,'தீமை செய்தாரைத் தண்டித்தாருக்கு ஒரு நாளைய இன்பமே என்று அதனைப் பொறுத்துக் கொள்பவர்களுக்கு உலகம் உள்ளவும் புகழ் உண்டு' என்ற பொறையுடைமையும் இங்கு குறிப்பிடத்தக்கவையாகும்.

**களவு**

அன்பு, அருள், அறிவு, குடிப்பிறப்பு முதலியவற்றால் ஒத்து விளங்குகின்ற தலைவனும், தலைவியும் ஒருவரையொருவர் எதிர்ப்பட்டு உலகத்தார் அறியாதபடி மறைந்து சேர்வது களவாகும். உலகத்தார் எண்ணப்படி களவானது, பிறர் பொருளை வஞ்சனையால் கவர்ந்து கொள்ளுதல் குற்றமாகும். ஆனால் இது அதுவன்று, ஒத்த அன்புடைய தலைவன் தலைவியும் தூய அன்பினால் தம்முடைய உள்ளம் கலப்பதை மற்றவர்கள் பார்க்காதவாறு மறைந்து வாழ்வதால் களவென்ற சொல்லால் அது வழங்கப்படுகின்றது. இக்களவினை காமக்கூட்டம் என்ற சொல்லாலும் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். இதனை,

**இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**

**காமக் கூட்டங் காணுங் காலை**[6]

என்னும் நூற்பா வெளிப்படுத்துகிறது.

**களவு குறித்து உரையாசிரியர்கள் கருத்து**

களவு என்பதனைக் குறித்து உரையாசிரியர்கள் விளக்கம் தருகின்றனர். சங்க இலக்கியங்களில் வெளிப்படுத்துகின்ற களவானது எவ்வாறு நிகழ்ந்துள்ளன என்பதனை ‘‘களவு என்னும் சொல் கண்டுழியெல்லாம் அறப்பாற்படாதென்றால் அமையாது, களவாவது பிறர்க்குரிய பொருள் மறையிற் கோடல், இன்னதன்றி,ஒத்தார்க்கு மிக்கார்க்கும் பொதுவாகிய கன்னியரைத் தமர் கொடுப்பக் கொள்ளாது. கன்னியர் தம் இச்சையினால் தமரை மறைத்துப் புணர்ந்த பின்னும் அறநிலை வழாமல் நிற்றலாம். இ∴து அறம் எனப்படும்’’[7] என்று இளம்பூரணனார் களவு குறித்துக் கூறுகிறார்.

‘‘பிறர்க்கு உரித்தென்று இருமுதுகுரவால் கொடையெதிர்ந்த தலைவியை அவர் கொடுப்பக் கொள்ளாது இருவரும் தரந்த (மறைந்த) உள்ளத்தோடு எதிர்ப்பட்டு புணர்ந்த களவாதலின் இது பிறர்க்குரிய பொருளை மறையில் (பிறர்க்குத் தெரியாமல்) கொள்ளும் களவென்றாயிற்று. இது வேதத்தை மறை நூல் என்றாற் போலக் கொள்க’’[8] என்று நச்சினார்க்கினியர் கூறுகிறார்.

**களவில் ஐவகை நிலத்தலைவி**

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலங்களில் வாழும் தலைவி, தலைவனுடன் இருக்கும் போது பெறப்படுகின்ற இன்ப நுகர்ச்சியும் இரவுக் குறியில் வரும் தலைவனுக்கு ஏற்படுகின்ற இடர்பாடுகளும், தன்னை விட்டுப் பொருள்வயின் காரணமாக பிரியும் போது ஏற்படுகின்ற ஆற்றாமையும் தலைவிக்கு ஏற்படுகிறது.

**குறிஞ்சி நிலத்தலைவி**

எம் தாய் தன் கண்களைக் காட்டிலும் இவள் பால் மிக்க அன்புடையவள்; எம் தந்தையும் நிலத்தே இவள் அடி பொருந்தி நடக்கப் பொறுக்காதவனாகி ஏடி இளையமகளே நின் சிறிய அடி சிவக்கும் வண்ணம் எங்கு என்ன செய்யச் செல்கின்றாய்? எனக் கடிந்து கூறுவர். யாங்களும், பிரிவின்றிக் கூடிய பிளவுபடாத நட்பினால் இருதலைகளையுடையதொரு பறவையின் உடலில் உறையும் ஒருயிர்போல் ஆனோம்! இதனை,

**யாயே, கண்ணினும் கடுங் காதலளே;**

**எந்தையும் நிலன் உறப் பொறாஅன்; 'சீறடி சிவப்ப,**

**எவன், இல! குறுமகள்!இயங்குதி?' என்னும்;**

**யாமே, பிரிவு இன்று இயைந்த துவரா நட்பின்,**

**இரு தலைப் புள்ளின் ஓர் உயிரம்மே;(அகம்.பா.12:1-5)**

என்ற பாடல் அடிகள் உணர்த்துகிறது.

களவொழுக்கத்தில் இடையூறு மிகுந்தமையால் தலைவி தன் உளங்கொண்ட தலைவனுடன் தோழியரும் தாயும் தனிமையில் வருந்துமாறு செறிந்த காப்பினைக் கடந்து உடன் போக்கிலே சென்றுவிட்டாள். இதனை,

**தோழிமாரும் யானும் புலம்ப**

**சூழி யானைச் சுடர்ப் பூண் நன்னன்**

**பாழி அன்ன கடியுடை வியல் நகர்ச்**

**செறிந்த காப்பு இகந்து, அவனொடு போகி, (அகம்.பா.15: 9-12)**

என்ற பாடல் மலையிடத்துப் பிறந்த மூங்கிலை ஒத்த திரண்ட மெல்லிய தோளினையுடைய என் அன்னை, தன் தோழியாரும் யானும் தனிமையில் வருந்துமாறு, முதுபடாம் அணிந்த யானையினையும் ஒளிரும் அணியினையும் உடைய நன்னது பாழி என்னும் நகரைப் போன்ற காவல் மிக்க தந்தையது பெரிய மாளிகையின் செறிந்த காவலைக் கடந்து தலைவனோடு புறப்பட்டுத் தன் மனதுக்கு இனிய துணைவனை நினைந்த நெறியோடு கூடிய நெஞ்சினாளாய் அவனுடன் ஒன்று கூடி உடன் போக்கிலே சென்று விட்டாள்.

அருவி நீர் இல்லையாதலால் பசிய தண்டுகள் தோறும் தினைக் கதிர்கள் முதிரப் பெற்றன; அவற்றைக் கொய்வதன் முன்னே அவற்றுட் பலவும் வெறுந் தட்டைகளாகத் தோன்றின; நீதான், வேறுபட்ட பல மணங்களும் கமழும் தேன் சிந்தும் மாலையினையுடையவனான விரைந்தோடும், வேட்டை நாய்களுடன் பற்பல

மலைகளையும் கடந்து செல்லும் வேட்டுவனைப் ‘பெறுதல்’ என்ற அளவோடு இருந்துவிட்டாய்.

**கொய்யா முன்னும், குரல் வார்பு, தினையே**

**அருவி ஆன்ற பைங் கால் தோறும்**

**இருவி தோன்றின பலவே நீயே,**

**முருகு முரண் கொள்ளும் தேம் பாய் கண்ணி,**

**பரியல் நாயொடு பல் மலைப் படரும்**

**வேட்டுவற் பெறலோடு அமைந்தன; (அகம்.பா.28: 3-8)**

என்ற பாடல் அடிகளின் மூலம் அறிய முடிகின்றது.தலைவன் சிறைப்புறத்தானாகத் தலைவி அவன் கேட்குமாறு, தான் அடைந்த துன்பங்களைத் தோழிக்குச் சொல்லியது. இதனை,

**நில்லா நெஞ்சத்து அவர் வாரலரே; அதனால்,**

**அரிபெய் புட்டில் ஆர்ப்பப் பரிசிறந்து,**

**ஆதி போகிய பாய்பரி நன்மா**

**நொச்சி வேலித் தித்தன் உறந்தைக்**

**கல்முதிர் புறங்காட்டு அன்ன**

**பல்முட் டின்றால் தோழி!நம்களவே. (அகம்.பா.122: 18-23)**

என்ற பாடல் யாம் மேற்கொண்டொழுகும் இந்தக் களவொழுக்கமானது, பரற்கற்கள் இடப்பட்ட சதங்கைகள் ஒலிக்கும் படி, வேகநடையில் சிறப்புற்று, ஆதி என்னும் நேரோட்டத்தில் தேர்ச்சி பெற்ற பாய்ந்து செல்லும் செலவினையுடைய நல்ல குதிரைகளையுடைய தித்தன் என்பானது மதிலாகிய காவல் வேலியுடைய உறையூரைச் சூழ்ந்துள்ள பாறைகள் நிறைந்த காவற்புறங்காடு போன்ற பல்வேறு இடையூறுகளையும் கொண்டது.தலைமகன் சிறைப்புறத் தானாக, தலைமகட்குச் சொல்லுவாளாய், சொல்லியது. இதனை,

**காண் இனி-வாழி, தோழி! பானாள்**

**மழைமுழங்கு அரவம் கேட்ட, கழைதின்,**

**மாஅல் யானை புலிசெத்து வெரீஇ,**

**இருங்கல் விடரகம் சிலம்பப் பெயரும்**

**பெருங்கல் நாடன் கேண்மை, இனியே, (அகம்.பா.232: 1-5)**

என்ற பாடல் மூங்கிலைத் தின்னுகின்ற பெரிய யானையானது, நள்ளிரவில், மேகம் முழங்கும் இடியொலியைக் கேட்டது; அவ்வொலியினைப் புலியின் முழக்கொழி எனக் கருதி அஞ்சி, மலைக்குகையெலாம் எதிரொலிக்குமாறு பேரொலி எழுப்பிப் பெயர்ந்தோடியது அத்தகைய பெரிய மலைகளையுடைய நாட்டினைத் தலைவன் சேர்ந்தவன் என்று கூறுகிறாள். தலைமகள் வெறியாடல் நிகழ்த்த இருப்பதனைத் தோழிக்குச் சொல்லியது. இதனை,

**கூறாய், செய்வது தோழி! வேறு உணர்ந்து,**

**அன்னையும் பொருள்உகுத்து அலமரும்; மென்முறிச்**

**சிறுகுளகு அருந்து, தாய்முலை பெறாஅ,**

**மறிகொலைப் படுத்தல் வேண்டி, வெறிபுரி**

**ஏதில் வேலன் கோதை துயல்வரத்**

**தூங்கும் ஆயின், அதூஉம் நாணுவல்**

**இலங்குவளை நெகிழ்ந்த செல்லல்; புலம்படர்ந்து, (அகம்.பா.292: 1-7)**

என்ற பாடலில் தோழி விளங்குகின்ற வளையல் கழன்று வீழ்வதற்குக் காரணமான நமது துன்பத்தை அன்னையும் அறிவாள்; அத்துன்பம் பிறிதொன்றால் ஆனது என எண்ணியவளாய்க் குறி கூறுவாரிடத்தே வீணே பொருளைச் சொரிந்து மனங்கலங்கி இருக்கின்றாள்; சிறதும் தொடர்பில்லாத வேலனோ, தாயின் முலைப்பால் கிடைக்கப்பெறாது மெல்லிய தளிராகிய தழையுணவை உண்ணக்கூடிய மிக்க இளமையையுடைய ஆட்டுக்குட்டியைப் பலிக்காகக் கொல்வதை விரும்பி, மாலை தன் மார்பிலே கிடந்தசைய, வெறியாடலைச் செய்வானாயினான்; அவ்வாறாயின், அவன் செயல் குறித்து நான் நாணம் கொள்வேன் என்று கூறுகிறாள்.

**முல்லை நிலத் தலைவி**

தலைவன் தான் மேற்கொண்ட வினை முடிந்தவுடன் தேரினை விரைவாகச் செலுத்துக எனத் தேர்ப்பாகனிடம் கூறியது. இதனை,

**நெடுங் கொடி நுடங்கும் வான்தோய் புரிசை,**

**யாமம் கொள்பவர் நாட்டிய நளி சுடர்**

**வானக மீனின் விளங்கித் தோன்றும்,**

**அருங் கடிக் காப்பின், அஞ்சு வரு, மூதூர்த்**

**திருநகர் அடங்கிய மாசு இல் கற்பின்,**

**அரி மதர் மழைக் கண், அமை புரை பணைத்தோள்,**

**அணங்குசால், அரிவைக் காண்குவம்(அகம்.பா.114: 9-15)**

என்ற பாடல் விண்ணைத் தீண்டி நிற்கும் மதிலிடத்து நெடிய கொடிகள் அசைந்தாடும்; அம்மதிலின்கண் இராப்பொழுதைக் காத்திருப்போர் ஏற்றி வைத்த நெருங்கிய விளக்குகள் விண்ணிடைத் தோன்றும் மீன்கள் போல விளங்கித் தோன்றும். அணுகுதற்கரிய காவல் மிகுந்த பகைவர்க்கு அச்சத்தினைத் தரும் முதுமையான ஊரிலுள்ள செல்வம் மிக்க மாளிகையிடத்து, நம்மை வெறுத்து வாழ்ந்து கொண்டிருக்கும் அடங்கிய குற்றமற்ற கற்பினையும், செவ்வரி படர்ந்து மதர்த்த குளிர்ச்சி பொருந்திய கண்ணினையும், மூங்கிலை ஒத்த பருத்த தோளினையும் உடைய தெய்வ மகள் போல் விளங்கும் நம் தலைவியை அவள் துன்பம் நீங்குமாறு காண்போம். தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது. இதனை,

**ததர்தழை முனைஇய தெறிநடை மடப்பிணை**

**ஏறுபுணர் உவகைய ஊறுஇல உகள,**

**அம்சிறை வண்டின் மென்பறைத் தொழுதி**

**முல்லை நறுமலர்த் தாதுநயந்து ஊத,**

**எல்லை போகிய புல்லென் மாலை,**

**புறவுஅடைந் திருந்த உறைவுஇன் நல்லூர்,**

**கழிபடர் உழந்த பனிவார் உண்கண்**

**நல்நிறம் பரந்த பசலையள்**

**மின்நேர் ஓதிப் பின்னுப்பிணி விடவே.(அகம்.பா.234: 10-18)**

என்ற பாடல் நெருங்கிய தழைகளை அதிகமாகத் தின்று வெறுத்த துள்ளியோடும் நடையினையுடைய இளைய பெண்மான், தன் ஆண்மானுடன் கூடியிருந்து இன்பம் துய்த்த மகிழ்ச்சியுடன் துன்பமின்றித் துள்ளித்திரியும்; ஆகிய சிறகினையுடைய மெல்லப் பறக்கும் வண்டின் கூட்டம் மணக்கும் முல்லை மலரில் உள்ள பூந்தாது வினை உண்டு மகிழும்.அத்தகைய பகற் பொழுது கழிந்த பொழிவற்ற மாலைப் பொழுதில், வாழ்வதற்கு இனிய முல்லை நிலத்து ஊரின்கண்ணே, பெருந்துன்பத்தால் வருந்திய நீர் பொழியும் மையுண்ட கண்களையும், நல்ல மேனியில் பரவிய பசலையையும் உடைய நம் தலைவி, மின்னலை ஒத்த தன் கூந்தலை விழுந்த பின்னலான சடையினை நீக்கிக் கூந்தலை அழகு செய்யும் பொருட்டுத் தேரினை விரைந்து செலுத்துவாயாக என்று கூறினார்.

**மருத நிலத் தலைவி**

வாயில் மறுத்த தோழிக்குத் தலைமகன் சொல்லியது. இதனை,

**கனை இருள் அகன்ற கவின்பெறு காலை;**

**கோள் கால் நீங்கிய கொடு வெண் திங்கள்**

**கேடு இல் விழுப் புகழ் நாள் தலைவந்தென,**

**உச்சிக் குடத்தர், புத்தகல் மண்டையர்,**

**பொது செய் கம்பலை முது செம் பெண்டிர்**

**முன்னவும் பின்னவும் முறை முறை தரத்தர, (அகம்.பா.86: 5-10)**

என்ற பாடல் மூலம் வாகை மரமானது மெல்லியப் பூவையும், புல்லிய புறத்தினையுடைய சுவடு பொருந்திய இலையையும் கொண்டது. அவ்விலையை, முதிய கன்றினால் கறிக்கப்பட்ட, பள்ளத்தில் வளர்ந்த அறுகினது, ஒலிக்கின்ற குரலை உடைய மழையின் முதற்பெயலால் ஈன்ற, கழுவிய நீலமணி போன்ற கருநில இதழ்கள் உடையதும், பாலை போல கிழங்கிடத்து உள்ளதுமான குளிர்ந்த நறுமணம் கமழும் மொட்டுடன் விரவிக் கட்டிய வெண்மையான காப்பு நூலை அவளுக்கு அணிவித்தனர். தூய ஆடையால் அவளை அழகுறச் செய்தனர். சுற்றத்தார் மகிழ்ச்சியுடன் ஒன்று கூடினர். மேகம் ஒலித்தாற் போல மணவொலி மிக்க பந்தரிலே அவளுக்குச் சிறப்பாக அணிகலன் அணிவித்தனர். தலைவியின் வியர்வைத் துடைத்தனர். இவ்வாறாக, முதல் நாள் இரவில் நம் தலைவியை நமக்கு இல்லக் கிழத்தியாகத் தந்தனர்.

**நெய்தல் நிலத்தலைவி**

இரவுக்குறியில் வந்த தலைமகனுக்குத் தோழி சொல்லியது. இதனை,

**கொடுந் தாள் முதலையொடு கோட்டு மீன் வழங்கும்**

**இருங் கழி இட்டுச் சுரம் நீந்தி, இரவின்**

**வந்தோய்மன்ற – தண் கடற் சேர்ப்ப! (அகம்.பா.80: 1-3)**

என்ற பாடலில் வளைந்த காலினை உடைய முதலையின் கொம்பினை உடைய சுறாமீன் உலவித் திரியும் உப்பங்கழிகளைக் கொண்ட வழி சிறிதாகிய சுரத்தினைக் கடந்து இரவு நேரத்தில் வந்துள்ளாய்.தலைமகள் குறிப்பறிந்த தோழி தலைவியின் துயரைத் துடைத்துப் போதல் என தலைனுக்குச் சொல்லியது.

**நிலாவின் இலங்கு மணல்மலி மறுகில்,**

**புலால்அம் சேரி புல்வேய் குரம்பை,**

**ஊர்என உணராச் சிறுமையொடு, நீர்உடுத்து,**

**இன்னா உறையுட்டு ஆயினும், இன்பம்**

**ஒரு நாள் உறைந்திசி னோர்க்கும், வழிநாள்**

**தம்பதி மறக்கும் பண்பின் எம்பதி**

**வந்தனை சென்மோ - வளைமேய் பரப்ப!(அகம்.பா.200: 1-7)**

என்ற பாடலில் எமது ஊர், நிலாப் போன்று காணப்படுகின்ற மணல் மிகுந்த தெருக்களில், புல்லால் வேயப்பட்ட குடிசைகளை உடைய புலால் நாறும் சேரி ஆகும். காண்போர் இ.ஃது ஓர் ஊர் என்று நினைப்பதற்கு இல்லாத சிறுமையுடையது. நீரால் சூழப்பட்டுத் துன்பத்தைத் தரும் தங்கும் இடத்தினைக் கொண்டது. இருப்பினும், எம் ஊரில் ஒரு நாள் தங்கியோர், மறுநாள் தம் ஊரினை மறக்கச் செய்யும் தன்மையினைப் பெற்று இன்பம் தருவதில் சிறந்து விளங்குவது. அத்தகைய பண்பினைப் பெற்ற எம்முடைய ஊருக்கு நீ வந்து செல்வாயாக என தலைவனிடம் தோழியானவள் கூறுகின்றாள்.

**பாலை நிலத் தலைவி**

தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது. இதனை,

**வியன் தலை நல் நாட்டு வேங்கடம் கழியினும்,**

**சேயர் என்னாது, அன்பு மிகக் கடைஇ,**

**எய்த வந்தனவால் தாமே நெய்தல்**

**கூம்பு விடு நிகர் மலர் அன்ன**

**ஏந்து எழில் மழைக் கண் எம் காதலி குணனே.(அகம்.பா.83: 10-14)**

என்ற பாடல் மூலம் வளஞ்சான்ற புல்லியின் வேங்கடம் எனும் மலையினைக் கடந்து சென்றாலும், மொட்டவிழ்ந்த ஒளி பொருந்திய நெய்தல் மலரைப் போன்று உயர்ந்து தோன்றுகின்ற அழகினை உடைய குளர்ச்சிப் பொருந்திய கண்களையுடைய நம் காதலியின் குணங்கள், தாம் நெடுந்தொலைவு சென்றவர் என்று கருதாமல் அன்பு மிகவும் செலுத்துதலாலே நாம் பெறுமாறு நம்மை வந்து அடைந்தன.மகள் காதலனுடன் உடன்போக்கிலே சென்றுவிட்ட செய்தியை தாய் சொல்லியது. இதனை,

**யாய்கு வல்லுநள்கொல் தானே தேம் பெய்து,**

**மணி செய் மண்டைத் தீம் பால் ஏந்தி,**

**ஈனாத் தாயர் மடுப்பவும் உண்ணாள்,**

**நிழற் கயத்தன்ன நீள் நகர் வரைப்பின்**

**எம்முடைச் செல்வமும் உள்ளாள், மொய்ம் மருண்டு, (அகம்.பா.105: 4-8)**

என்ற பாடலில் மணிகள் இழைத்துச் செய்த பொற்காலத்தில் இனிய பாலோடு தேன் கலந்து ஏந்தியவராய்ச் செவிலித்தாயார் ஊட்டவும் என் மகள் உண்ணவில்லை. நிழலிடத்து உள்ள குளத்தைப் போலக் குளிர்ச்சி பொருந்திய நெடிய மாளிகையின் கண் உள்ள எமது பெருஞ் செல்வத்தையும் அவள் கருத்தில் கொள்ளவில்லை என தாயானவள் வருந்திக் கூறியதாகும்.

**கற்பு**

சமூகம் என்பது மக்கள் பலர் ஒன்று சேர்ந்து வாழுகின்ற அமைப்பாகும். சமுதாயத்தின் ஓர் அங்கமாகத் திகழ்வது குடும்பமாகும். இக்குடும்பங்கள் உருவாவதற்கு அடிப்படைக் காரணமாகத் திகழ்வது அன்பின் ஐந்திணை அனைத்தும் சொல்லப்படும். களவியலில் கூறிய முறைப்படி ஊழின் ஆணையால் ஒத்த பண்புடையோர் கண்டு காதல் கொள்ளுவோர் நிலையாகும். காதலில் தனித்து வாழுகின்ற ஆண், பெண் இருவரையும் ஒன்றுபடுத்தி சமூகத்தில் கணவன் மனைவி என்று அடையாளப்படுத்துகின்ற ஓர் நிகழ்வுதான் இல்லறமாக அமைகின்றது. இல்லறம் தனி மனிதரை மட்டுமல்லாமல் சமுதாயத்தையே நல்ல நெறிக்கு கொண்டு செல்கின்ற பண்பாட்டின் களமாக அமைகின்றது. இவ்இல்லற வாழ்க்கையைத் தொல்காப்பியர் கற்பு வாழ்க்கை எனத் தனது பொருளதிகாரத்தில் கற்பியலில் தனி இயலாக அமைத்துள்ளார். களவின் வாழ்விலிருந்து கற்பின் தொடக்கமாக அமைகின்றது. இதன் வழியே மனித சமுதாயத்தை காக்கும் கருவாக கருதப்படுகின்றது.

**தொல்காப்பியர் கூறும் கற்பு**

உலகில் தலைசிறந்த இலக்கண நூலாகிய தொல்காப்பியப் பொருளதிகாரத்தில்,

**கற்பெனப் படுவது கரணமொடு புணரக்**

**கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்**

**கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே**[10]

என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

**கற்பின் வகைகள்**

தலையாய கற்பு, செய்தீர் கற்பு. நெஞ்சு புகா கற்பு, இடையாய கற்பு, கடையாய கற்பு என்னும் ஐந்து வகை கற்பு ஆகும்.

**தலையாய கற்பு**

இதனை அறக்கற்பு என்பர். கணவன் இன்னுயிர் செல்லுங்கால் தன்னுயிரும் தானே நீங்குவது (எ.கா) பூதப்பாண்டியன் இறந்த போது அவனது மனைவி தீக்குளிக்கச் சென்ற போது அமைச்சர் முதலானோர் தடுத்ததைக் கண்டித்து தமிழ்ப் பெண்களின் தலையாய கற்பைக் காட்டுகிறது.

**நெஞ்சு புகா கற்பு**

தலையாய கற்பை நெஞ்சுபுகா கற்பு எனப் பழந்தமிழர் நூல்கள் குறிப்பிடுவதனை அறிய முடிகின்றது. பிறரால் கண்டும் கேட்டும் அறிந்திடாத பெருமை சான்ற கற்பாகும். தன்னை மணந்தவன் நெஞ்சிலன்றி மற்றவர் நெஞ்சில் இடம் பெறாதவள் என்று கூறுமளவிற்கு ஒழுக்கமான வாழ்க்கை உடையவளாக வாழ்ந்தாள் என்றால் தமிழரின் தனிப்பெரும் தலையாய நாகரிகம் உடைய கற்பாகப் போற்றப்படுகிறது.

**இடையாய கற்பு**

இதனை மறக்கற்பு என்பர். தன் கணவன் இறந்ததைக் கண்டு தன்னுயிர் பிரியத் "தீக்குளித்தல் போன்றவற்றில் ஈடுபட்ட உயிர் நீங்குதலாகும். தீயுங்கொள்ளாத் தீ வினையாட்டி யானேன்" என்று ஆதிரை புலம்புவதை மணிமேகலை மூலம் அறிய முடிகிறது.

**கடையாய கற்பு**

கைம்பெண்ணாக உயிர் நீங்கும் வரை வருந்தி வாழ்வதும், போரில் விழுப்புண் பட்டு வீழும் தன் கணவனது உடலைத் தரை மகள் புணரக் கூடாதவாறு தன் உடலால் தாங்கிச் சொர்க்கத்தில் அவ்வுயிரை அறமகளிர் புணரா வண்ணம் உயிர் ஒத்து விடுகின்ற வீரமங்கையரை, கற்பு நங்கையைக் கலிங்கத்துப் பரணி பாடல் கூறுவதை,

**தரைமகள் தன் கொழுதன் தன்னுடலைத் தன்னைத்**

**ஆவியொக்க விடுவாளைக் காண்மின் காண்மின்**[11]

என்ற பாடல் அடிகள் வெளிப்படுகிறது.

**குறிஞ்சி நிலத் தலைவி**

தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்து செல்கிறான். பிரிவைத் தாங்காதவளாய் தலைவி தோழியிடம்,

**தொடுதோற் கானவன் சூடுறு வியன்புனம்,**

**கரிபுறம் கழீஇய பெரும்பாட்டு ஈரத்து,**

**தோடுவளர் பைந்தினை நீடுகுரல் காக்கும்**

**ஒண்தொடி மகளிர்க்கு ஊச லாக**

**ஆடுசினை ஒழித்த கோடுஇணர் கஞலிய**

**குறும்பொறை அயலது நெடுந்தாள் வேங்கை,**

**மடமயிற் குடுமியின், தோன்றும் நாடன்**

**உயர்வரை மருங்கின் காந்தள் அம்சோலைக்**

**குரங்குஅறி வாரா மரம்பியல் இறும்பில்,**

**கடிசுனைத் தெளிந்த மணிமருள் தீம்நீர்**

**பிடிபுணர் களிற்றின் எம்மோடு ஆடி,**

**பல்நாள் உம்பர்ப் பெயர்ந்து, சில்நாள்**

**கழியா மையே வழிவழிப் பெருகி, (அகம்.பா.368: 1-13)**

காலிலே நடையனை அணிந்த வேடன் சுட்டெரித்த அகன்ற கொல்லையில் பெய்த மழைநீர் கரித்த இடங்களைக் கழுவிச் சென்றது. அம்மழை ஈரத்தில் இதழ்கள் தழைத்து வளர்ந்த திணையின் விளைந்த கதிர்களை ஒளி பொருந்திய வளையல் அணிந்த மகளிர் காவல் காத்திருந்தனர். அம்மகளிர் ஊசல் ஆடும் பொருட்டுக் கிளைகள் வெட்டப்பட்ட வேங்கை மரத்தின் பூங்கொத்துக்கள் நிரம்பிய கொம்பு, மலையின் பக்கத்தில் ஆடுமயிலின் உச்சியில் உள்ள அழகிய குடுமி போலக் காணப்படும் நாட்டையுடையவன் நம் தலைவன்.

அம்மலைப் பக்கத்தே, காத்தளையுடைய அழகிய சோலைகளில் மலையேறும் தொழில் பயின்ற மந்திகளும் மரங்களின் நீட்டத்தால் ஏறியறியாத மரங்கள் நெருங்கிய கானகத்தில், பளிங்கினை ஒத்த தெளிந்த இனிய அனைநீரில் பிடியுடன் கூடிய களிறு போல நம் தலைவன் நம்முடன் பலநாளும் கூடி நீராடி மகிழ்ந்தான். இவ்வாறாக அவன் நம்பால் கொண்டொழுகிய களவொழுக்கம் நாளுக்கு நாள் பெருகி வளர்ந்தது, என இப்பாடல் வெளிப்படுத்துகிறது.

**முல்லை நிலத் தலைவி**

வினைவயிற் பிரிந்து சென்ற தலைவன் தான் குறித்துச் சொல்லிச் சென்ற பருவத்தே தட்டாது மீண்டு வந்தான். அதனால் மகிழ்ச்சியுற்ற தோழி தலைவனுடைய பண்புகளைப் பாராட்டிக் கூறியது,

**கடவுட்கற்பொடு குடிக்கு விளக்கு ஆகிய**

**புதல்வற் பயந்த புகழ்மிகு சிறப்பின்**

**நன்ன ராட்டிக்கு அன்றியும், எனக்கும்**

**இனிதுஆ கின்றால்; சிறக்க நின்ஆயுள்! (அகம்.பா.184: 1-4)**

சிறப்பு மிக்க தலைவனே நீ வந்து நின்ற தன்மை, தெய்வத் தன்மை பொருந்திய கற்புடன், குடிக்குச் சிறப்பினைத் தரும் மகனைப் பெற்ற தலைவிக்கு மட்டும் அன்றி, எனக்கும் இனிமையைத் தந்தது. நின் ஆயுள் சிறக்க என்று தோழியானவள் உரைக்கின்றாள்.

**மருத நிலத் தலைவி**

பரத்தையிற் பிரிந்த தலைமகற்கு வாயிலாய்ப் புக்க தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

**நிரை தார் மார்பன் நெருநல் ஒருத்தியொடு**

**வதுவை அயர்தல் வேண்டி, புதுவதின்**

**இயன்ற அணியன், இத் தெரு இறப்போன் (அகம்.பா.66:7-9)**

வரிசையாய்க் கட்டிய மலர் மாலையை அணிந்த மார்பனாகிய நம் தலைவன் நேற்று ஒருத்தியை மணம் செய்து கொள்ள விரும்பினான். புதிதாகச் செய்து கொண்ட மணக் கோலத்துடன் இத்தெருவினையும் கடந்து சென்றான் என தலைவியானவள் தோழியிடம் எடுத்துரைக்கின்றாள்.

**நெய்தல் நிலத் தலைவி**

களவொழுக்கத்தில் நின்ற தலைவன் வரைவொடு வந்து தலைவியை மணந்து கொண்டான். அதுவரை அலர் தூற்றிய அவ்வூர் மக்கள் வாயடங்கியது கண்டு தோழி மகிழ்ச்சியுடன் நகையாடித் தலைவிக்கு சொல்லியது.

**நூல்அமை பிறப்பின், நீல உத்தி,**

**கொய்ம்மயிர் எருத்தம் பிணர்ப்படப் பெருகி,**

**நெய்ம்மிதி முனைஇய கொழுஞ்சோற்று ஆர்கை**

**நிரல்இயைந்து ஒன்றிய செலவின், செந்தினைக்**

**குரல்வார்ந் தன்ன குவவுத்தலை, நல்நான்கு**

**வீங்குசுவல் மொசியத் தாங்குநுகம் தழீஇ,**

**பூம்பொறிப் பல்படை ஒலிப்பப் பூட்டி,**

**மதியுடை வலவன் ஏவலின், இகுதுறைப்**

**புனல்பாய்ந் தன்ன வாம்மான் திண்தேர்க்**

**கணைகழிந் தன்ன நோன்கால் வண்பரி**

**பால்கண் டன்ன ஊதை வெண்மணல்**

**கால்கண் டன்ன வழிபடதிப் போகி,**

**அயிர்சேற்று அள்ளல் அழுவத்து ஆங்கண்,**

**இருள்நீர் இட்டுச்சுரம் நீந்தி, துறைகேழு**

**மெல்லம் புலம்பன் வந்த ஞான்றை, (அகம்.பா.400: 5-19)**

தேரில் பூட்டப் பெற்ற குதிரைகள் நான்கும் புரலவி நூல் கூறும் இலக்கணப்படிப் பிறந்த பிறப்பினை உடையன, நீலமணியாலான நெற்றிச் சுட்டியையும், கொய்யப் பெற்ற மயிர் அடர்ந்த பிடரியினையும் உடையது. வரிசையாக ஒரே விதமாக ஓடும் ஓட்டத்தையும், சிவந்த நிறத் தினையின் கதிர்கள் நீண்டு வளைந்தாற் போன்ற கழுத்தினையும் உடையது. கொள்ளுடன் நெய் ஊற்றி மித்துச் செய்யப் சொற்றுக் கவளத்தை உண்ண மறுத்துக் கொழுவிய சோற்றை உண்ட அக்குதிரைகளைப் பருத்த கழுத்தில் பலவடங்கள் ஒலிக்கும்படி நுகத்தடியில் பூட்டி, அறிவுடைய பாகன் செலுத்த, அக்குதிரைகளும் தாழ்ந்த துறையின்கண் நீர் தாவிச் செல்வது போன்று அம்புபோற் பாய்ந்து தாவிச் சொன்றது எனத் தோழி மகிழ்ச்சியுடன் தலைவியிடம் சொல்லியது ஆகும்.

**பாலை நிலத் தலைவி**

தலைமகன் பொருள்வயிற் பிரிய, வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது, இதனை,

**நோற்றோர் மன்ற தாமே கூற்றம்**

**கோளுற விளியார், பிறர் கொள விளந்தோர், எனத்**

**தாள் வலம்படுப்பச் சேட் புலம் படர்ந்தோர் -**

**நாள் இழை நெடுஞ் சுவர் நோக்கி, நோய் உழந்து**

**ஆழல் வாழி, தோழி! தாழாது, (அகம்.பா.61: 1-5)**

நீ வாழ்வாயாக, தலைவர் பிரிந்து போன நாட்களைக் கோடிட்டுக் குறித்து வைத்த நெடிய அவரினை நோக்கி வருந்தித் துன்பத்துள் அழுந்தாதே, கூற்றத்தாலே உயிர் கொள்ளப்பட்டு இறக்காமல் பிறர் தம் பொருளைப் பெற்றுப் பயன் கொள்ளுமாறு இறந்தோர் நல்வினை செய்தோராவர், என்னும் கொள்கையுடன் பொருள் தேடும் நம் முயற்சி வெற்றி பெற நம் தலைவர் நம்மைப் பிரிந்து தொலைதூர நாட்டிற்குச் சென்றுள்ளார் என தலைமகளுக்கு தோழியானவள் கூறுகின்றாள்.பொருள் வயிற் பிரியக் கருதிய தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது,

**அளி நிலை பொறாஅது அமரிய முகத்தள்,**

**விளி நிலை கொள்ளாள், தமியள், மென் மெல,**

**நலம் மிகு சேவடி நிலம் வடுக் கொள்ளாஅ,**

**குறுக வந்து, தன்கூர் எயிறு தோன்ற**

**வறிது அகத்து எழுந்த வாய் அல் முறுவலள்**

**கண்ணியது உணரா அளவை, ஒண்ணுதல்,**

**வினை தலைப்படுத்தல் செல்லா நினைவுடன், (அகம்.பா.5: 1-7)**

ஒளி பொருந்திய நெற்றியையுடைய நம் தலைவி நாம் தலைவி செய்தலைப் பொறாதவளாய் வேறுபட்ட முகத்தினள் ஆனாள். நாம் அழைத்தலையும் மனங்கொள்ளாது தன்னந்தனியாளாய் மெத்தென நடக்கும் இயல்பினவாய் அழகுமிக்க தன் சிவந்த அடிகள் நிலத்தில் சுவடு பட நடந்து என் அருகே வந்தாள். தன் கூரிய பற்கள் தோன்றப் பொய்மையான நகையினைக் கொண்டாள். நாம் கருதியிருப்பதனை உணர்ந்து கொண்ட அளவிலே பொருள்வயிற் பிரிதலை உடன்படாத உள்ளத்தினள் ஆனாள் என தலைமகள் தன் நெஞ்சிற்குச் சொல்லியது ஆகும்.

**குழந்தைச்செல்வம்**

விருந்து என்ற சொல் புதுமை என்ற பொருளினையும் ஓம்பல் என்ற சொல் பாதுகாத்தல் என்ற பொருளினையும் தருகிறது. ஆகவே விருந்தோம்பல் என்ற சொல் மக்கட்பேறின் முதன்மை.

இல்லற வாழ்வு குழந்தைகள் இன்றி முழுமை பெறுவது இல்லை என்பது சங்கத் தமிழர் கொள்கையாக இருந்தது

**இம்மை உலகத்து இசையொடும் விளங்கி,**

**மறுமை உலகமும் மறு இன்றி எய்துப,**

**செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்**

**சிறுவர்ப் பயந்த செம்மலோர், (அகம்.பா.66:1-4)**

என்ற பாடலடிகள் மக்களைப் பெற்றவர் இம்மை உலகோடு மறுமை உலக வாழ்வையும் வெறுப்பர் என்று குறிப்பிடுகிறது. அது மட்டுமல்லாமல் தலைவிக்குரிய மேன்மைகளும்ஒன்றாகவும் கருதப்பட்டு வந்தமையை,

**கடவுட் கற்பொடு குடிக்கு விளக்கு ஆகிய**

**புதல்வற் பயந்த புகழ்மிகு சிறப்பின் (அகம்.பா.184: 1-2)**

என்ற பாடல் அடிகளால் அறிய முடிகிறது. மேலும் மகப்பேறு உடையவர்களே மங்கல நிகழ்வுகளில் தலைமை ஏற்கும் நிலையைப் பெற்றனர் என்பதனையும்,

**புதல்வற் பயந்த திதலை அவ் வயிற்று**

**வால் இழை மகளிர் நால்வர் கூடி, (அகம்.பா.86: 11-12)**

என்ற பாடல் அடிகளால் அறியலாம்.

**குழந்தையைப் பராமரித்தல்**

சங்க காலத்திலும் குழந்தைகளுக்கு நிலவினைக் காட்டிச் சோறூட்டும் வழக்கத்தினைக் காண முடிகிறது.

**முகிழ் நிலாத் திகழ்தரும் மூவாத் திங்கள்!**

**பொன்னுடைத் தாலி என்மகன் ஒற்றி,**

**வருகுவை ஆயின், தருகுவென் பால்' என**

**விலங்கமர்க் கண்ணள் விரல்விளி பயிற்றி (அகம்.பா.54: 17-20)**

என்ற பாடல் இதனை விளக்குகின்றது, இதுவே தலைவிக்குரிய கடமைகள் ஆகும்.

**ஆ.தோழி**

சங்க இலக்கியத்தில் தலைவி இருவரும் நட்பும், பாசமும் கொண்டுள்ளனர். காதலையும், வீரத்தையும் கூறும் இலக்கியங்களில் மானிடப்பாத்திரங்களே மிக மிகத் தேவை என்பதை அனைவரும் அறிந்ததே. இலக்கியங்களில் பாத்திரப்படைப்பு மிகத்தேவை. அவ்வாறு பாத்திரப்படைப்பு இல்லையெனில் அவ்விலக்கியங்கள் சுவை பெறாது. நிலைத்த இலக்கியங்கள் என்று சொல்ல முடியாது. அவ்வகையில் "தோழி" என்பவள் தனிச் சிறப்பினை பெற்றுள்ளாள். தொல்காப்பியம்

**"தோழி தானே செவிலியது மகளே"**[12]

என்ற நூற்பாவின் மூலம் செவிலி மகள் தோழி என்பதை அறிய முடிகிறது.

**தலைவியின் காதல் வாழ்விற்குத் துணை நிற்றல்**

பகற்குறியில் தலைவியை குறியிடத்து விட்டு தலைவனை எதிரே பார்த்து தோழி தலைவனிடம் கூறுகின்றாள்.

**கல்சேர்ந்த தன்றே, பல்கதிர் ஞாயிறு -**

**மதர் எழில் மழைக்கண் கலுழு, இவளே**

**பெரு நாண் அணிந்த சிறுமென் சாயல்**

**மாண்நலம் சிதைய ஏங்கி, ஆனாது,**

**அழல் தொடங் கினளே – பெரும! (அகம்.பா:120: 5-9)**

உன்னுடைய பிரிவால் தலைவி அழத் தொடங்கி விட்டாள். அன்றில் பறவை துணை பிரிந்தால் வாழாது இறக்கும். அதுபோல தலைவியும் உன்னைப் பிரிந்தால் உயிர் வாழமாட்டாள். இதிலிருந்து தலைவியின் நிலையை எடுத்துக் கூறி தலைவியின்

உயிரைக் காக்க வேண்டிய கடமை தலைவனுக்கும் உள்ளது என்பதை உணர்த்துகின்றாள்.

தலைவன் தலைவியை மணந்து கொள்ள விருப்பமில்லாமல் நாள்தோறும் இரவில் வந்துசெல்கிறான். இதை அறிந்த தோழி இரவு நேரத்தில் வருவதில் உள்ள இடையூறுகளை எடுத்துக் கூறி தலைவனை பகல் நேரத்தில் வருமாறு கூறி இடத்தையும் தோழி குறிப்பிட்டு சொல்லுகின்றாள்.

**தேம்பாய் ஓதி திருநுதல் நீவி,**

**கோங்குமுகைத் தன்ன குவிமுலை ஆகத்து,**

**இன்துயில் அமரந்தனை ஆயின், வண்டுபட**

**விரிந்த செருந்தி வெண்மணல் முடுக்கர்,**

**பூவேய் புன்னைஅம் தண்பொழில்,**

**வாவே தெய்ய, மண்ந்தனை செலற்கே (அகம்.பா.240: 10-15)**

தலைவியை இரவில் பார்க்க வேண்டும் என்றால் அது முடியாத செயல். காரணம் என் தந்தை தான் பிடித்த மீன்களை என் அண்ணன்மார்களுக்கு காட்டுவதற்கு இரவில் வீட்டிற்கு வருவார். என் தாயும் நீருண்ணும் குளிர்ச்சி பொருந்திய துறையில் உள்ள தெய்வத்தைத் தன் தொழிலாருடன் தொழுது வழிபடுவாள். நீ தலைவியைக் கூட இன்புற வேண்டுமனால் வண்டுகள் மொய்க்கும் பூக்களுடைய செருந்தி மரங்களும், புன்னை மரங்களும் உள்ள அழகிய குளிர்ச்சி பொருந்திய சோலைக்கு வருவாயாக என்று தோழி தலைவனுக்கு பகல் குறியைக் காட்டுகின்றாள். தலைவன் இரவுக் குறியில் வந்தால் பல இடர்களைச் சந்திப்பான். அதனால் தலைவி துன்பப்படுவாள் என்று எண்ணி தோழி, தலைவி மீதுள்ள அன்பின் காரணமாகத் தலைவனைப் பகலில் வருமாறு வேண்டுகின்றாள். தோழியின் பாங்கினை மேற்கண்ட பாடல் வரிகள் மூலம் அறிய முடிகின்றன.

**தலைவியின் கற்பிக்குத் துணை நிற்றல்**

தோழியானவள், தலைவன் தலைவியின் திருமணம் முடிந்து இனிதாய் இல்லறம் நடத்தும் நிலையிலும் அதனைக் கண்டு மகிழ்பவளாக விளங்குகிறாள். மேலும் தலைவியே தன் இனிமையான வாழ்விற்கு நீயும் காரணம் என்று அவளிடம் கூறுகிறாள்.

**இம்மென் பேர்அலர், இவ்ஊர், நம்வயின்**
**செய்வோர் ஏச்சொல் வாட, காதலர்**
**வருவர் என்பது வாய்வதாக,**
**ஐய, செய்ய, மதன்இல, சிறியநின்**

**அடிநிலன் உறுதல் அஞ்சி, பையத் (அகம்.பா:323: 1-5)**

இவ்வூரில் நம்பால் "இம்" என்ற அலர் கூறும் அரிவையர் செருக்கு அழியுமாறு நம் காதலர் விரைந்து வருவார் என்பது உண்மை. ஆதலால், நீயும், பூமி தேவியும், கண்டறியாத அழகிய சிவந்த வலிமையற்ற நின் மென்மைப் பாதங்களுடன் மெத்தென உடல்வளைந்து அழகுநடை நடந்து காண்பார்க்குக் காட்சி உண்டாக வருவாயாக என்றுதலைமகனைத் தோழி வற்புறுத்தி கூறியதாகும்.

**இ.செவிலி**

தலைவியொடு தோழியானவள் மிகுந்த நட்பும் உரிமையும் கொண்டு பழகுவதைப் போன்று, நற்றாயொடு செவிலியும் பழகுவதனை நாற்கவிராச நம்பி,

**செவிலி நற்றாய் தோழி மாகி**
**அவல் நீக்கி அறிவும் ஆசாரமும்**
**கொளுத்தித் தலைவியை வளர்த்த தாயே**[12]

என்ற நூன்பா மூலம் அறிய முடிகிறது.

செவிலி, தலைவியின் குடும்பத்துடன் நெருங்கிப் பழகும் உரிமை கொண்டவளாகவும், இவள் தன் பயனுக்காக பணி செய்யும் பெண்ணாக இல்லாமல் குடும்பத்தின் மேம்பாடான நிலையில் இருந்து தலைவியை வளர்ப்பதில் அன்புணர்வும், கடமையுணர்வும் கொண்டு செயல்படுகிறாள். நற்றாய் தலைவியைத் தழுவியதாகவோ, அவளுடன் உறங்கியதாகவோ சான்றுகளில்லை. ஆனால் செவிலியின் மகளாகத் தலைவி விளங்குகிறாள்.

உற்றார் உறவினர் அறியாமல் தலைவனோடு தலைவி சென்றுவிட்டமையால் அவளை இழந்த செவிலித்தாய் ஆற்றாமையால் வருந்திக் கூறியது.

**தன்ஓ ரன்ன ஆயமும், மயில்இயல்**
**என்ஓ ரன்ன தாயரும், காண,**
**கைவல் யானைக் கடுந்தேர்ச் சோழர்**
**காவிரிப் படப்பை உறந்தை அன்ன**
**பொன்னுடை நெடுநகர், புரையோர் அயர**
**நல்மாண் விழவில் தகரம் மண்ணி**
**யாம்பல புணர்ப்பச் சொல்வாள், காம்பொடு (அகம்.பா.385: 1-7)**

மயில் போலும் சாயலையுடைய என் மகள், தன்னைப் போன்ற தோழியர் கூட்டமும், என்னைப் போன்ற செவிலித்தாயரும் எம் கண்மணி குளிர்ப்பக் கண்டு மகிழுமாறு வலிமை பொருந்திய கையினையுடைய யானையையும், விரைந்தோடும் தேரினையும் உடைய சோழரது சோலை சூழ்ந்த காவிரியாற்றின் அருகிலுள்ள உறையூரைப் போன்ற வளஞ்சான்ற தன் தந்தையின் பெரிய இல்லத்தில், சான்றோர் மணஞ் செய்விக்க நிகழும் மணவிழாவில் அவளுக்கு மயிர்ச்சாந்து பூசி, மங்கல நீராட்டிப் பல சிறப்புகளையும் செய்விக்கத் தன் காதலைனைப் பலரறிய மணம் செய்து கொண்டு

செல்ல அவள் விரும்பவில்லை என்று இப்பாடல் அடிகள் மூலம் அறிய முடிகிறது. குழந்தையை வளர்ப்பதிலும், குடும்பதின் சுற்றங்களோடு அவள் விரும்பும் தலைவனைத் திருமணம் செய்து கொள்ளும் காலம் வரை அவளுக்கு நன்னெறிகளை கற்றுக்கொடுத்தும், தலைவியின் காதலை அறத்தொடு நின்று நற்றாய்க்கு குறித்த நேரம் பார்த்து எடுத்துரைக்கும் பாங்கு செவிலியின் கடமைகளாக அமைந்துள்ளன. தலைவி உணவூட்டம் செயலைச் செவிலி தன் கடமைகளில் ஒன்றாகப் பெற்றுள்ளாள். தலைவியைப் பிரம்பால் அடிக்கும் உரிமையையும், தலைவியை வளர்ப்பதில் நற்றாய்க்கு சமமான தகுதி உடையவளாக செவிலி காணப்படுகிறாள்.

**ஈ. நற்றாய்**

நற்றாய் என்பவள் தலைவியை ஈன்றெடுத்த தாயாவாள். தலைவியின் களவொழுக்கத்தை அறிந்த நற்றாய் தந்தை, தனையர்க்கு அறத்தோடு நின்று எடுத்துரைப்பவள். உடன்போக்கு சென்ற போது நிமித்தம் பார்த்தல் தெய்வம் வரைதல் போன்றவற்றாலை பழைமையான சமூக நம்பிக்கைகள் கொண்டவர்கள் என்பதையும், தோழியிடமும், கண்டோரிடமும் தன் மகளைப் பற்றி கூறிப் புலம்புவதனை அறிவை விட உணர்வுக்கு மிகுதி தருபவளாக நற்றாய் விளங்குகிறாள். மகட்போக்கிய தாய் சொல்லியது. இதனை**,**

**யாங்கு வல்லுநள்கொல் தானேதேம் பெய்து,**

**மணி செய் மண்டைத் தீம் பால் ஏந்தி**

**ஈனாத் தாயர் மடுப்பவும் உண்ணாள்,**

**நிழற் கயத்தன்ன நீள் நகர் வரைப்பின் (அகம்.பா.105: 4-8)**

மணிகள் இழைத்துச் செய்த பொற்காலத்தில் இனிய பாலோடு தேன் கலந்து ஏந்தியவராய்ச் செவிலித்தாய் ஊட்டவும் என் மகள் உண்ணவில்லை. நிழலிடத்து உள்ள குளத்தைப் போலக் குளிர்ச்சி பொருந்திய நெடிய மாளிகையின் கண் உள்ள எமது பெருஞ் செல்வத்தையும் அவள் கருத்திற் கொள்ளவில்லை என்று இப்பாடல் வெளிப்படுத்துகின்றன.

**உ.பரத்தை**

சங்க காலத்தில் காதல் பரத்தையர் என்றும், சேரிப் பரத்தையர் என்றும் இருவகைப் பரத்தையர்கள் இருந்தனர். சங்க இலக்கியங்களில் மருதநிலப் பாடல்களில் பரத்தையரைப் பற்றிய செய்திகளைக் காண முடிகின்றது. தலைவி, தோழி, செவிலி, நறறாய் ஆகியோருக்கு கூற்றுக்கள் இருந்ததைப் போல் பரத்தையருக்கு கூற்றுக்கள் அமைந்திருக்கின்றன.

**பரத்தை சொல்லாட்சி**

பரத்தை என்பதற்கு பொதுமைகள், வேற்றுப்பெண், ஆயண்மை எனப் பொருள். கழகத் தமிழகராதி பரத்தை என்பதற்கு வேசி எனப் பொருள் கூறுகிறது. தமிழ் மொழியகராதி, பொது மகளிர், கணிகையர், விலை மகளிர், பரத்தையர் என்று குறிப்பிடுகிறது.

**மருத்தத்திணையில் பரத்தையர்**

அன்பின் ஐந்திணையுள் ஒன்றாகக் கருதப்படும் மருதத்திணை பரத்தையர் தொடர்பின் காரணமாகவே ஊடலும், ஊடல் நிமித்தமும் உரிப்பொருளாகக் பரத்தையர் காரணமாகப் பிரியும் தலைவன்பால், தலைவி ஊடல் கொள்வது மருதத்திணையின் ஒழுக்கம். தொல்காப்பியத்தில்,

**கொண்டுதலைக் கழிதலும் பிரிந்தவன் இரங்கலும்**

**உண்டென் மொழிப**[13]

என்ற நூற்பாவின் மூலம் அறிய முடிகிறது. மேலும், மருதத்திணைப் பாடல்கள் அனைத்தும் தலைவனின் பரத்தையிற் பிரிவு பற்றியும், அதன் காரணமாக ஏற்படும் தலைவியின் ஊடல் பற்றியும் அமையும் விதமாக உள்ளது.காதற் பரத்தை புலந்து சொல்லியது. இதனை,

**பசந்தன்று, காண்டிசின் நுதலே; அசும்பின்**

**அம்தூம்பு வள்ளை அழற்கொடி மயக்கி,**

**வண்தோட்டு நெல்லின் வாங்குபீள் விரிய,**

**துய்த்தலை முடங்குறாத் தெறிக்கும், பொற்புடைக்**

**குரங்குஉளைப் புரவிக் குட்டுவன்**

**மரந்தை அன்னஎன் நலம்தந்து னெம்மே!(அகம்.பா.376: 13-18)**

சேற்றிலுள்ள அழகிய துளையையுடைய வள்ளைக் கொடி பின்னுமாறும், வளைந்த நெற்கதிர் விரியுமாறும் துய்யினைத் தலையில் உடைய இறால் மீன் பாய்ந்ததற்கு இனான அழகிய வளைந்த பிடரியினைக் கொண்ட குதிரையையுடைய குட்டுவனது மந்தை என்னும் ஊர் போன்ற எம் கினை எம்மிடத்தே தந்துவிட்டு நீவிர் செல்வீராக என்று தலைவியானவள் தலைவனிடம் கூறுகின்றாள்.

**ஊ.விறலி**

விறலி என்பவள் ஆடல், பாடல் பாடி மக்களை மகிழ்ச்சி ஏற்படுத்தக் கூடியவள். பிறரை மகிழ்விக்கும் பொருட்டுதன்னை முன்னிலைப்படுத்தி ஆட்டம், பாட்டு என்ற பண்பை உடையவள். ஆடல் தொழில் புரியும் ஆவர் “கூத்தர்” என அழைக்கப்பட்டனர். கூத்து தொழில் சார்ந்து ஆடல் புரியும் மகளிர் “விறலியர்”எனவும்

குறிப்பிட்டுள்ளனர். பாடல் பாடுவோரைப் "பாடினி" என்றும்,அரங்கில் நடிப்போரை "விறலியர்" என்றும் பிரித்து பேசுவதுண்டு. விறலி என்பவள் உள்ளக் குறிப்பினை புறத்தே புலப்படுமாறு, எண் வகைச்சுவை இனி பொலியுமாறு பாடி ஆடும் மகளிர் ஆவாள்.வாயில் வேண்டிச் சென்ற விறலிக்குத் தலைமகள் வாயில் மறுத்தது. இதனை,

**என்னனப் படும்கொல் - தோழி! நல்மகிழ்ப்**

**பேடிப் பெண்கொண்டு ஆடுகை கடுப்ப,**

**நகுவரப் பணைத்த திரிமருப்பு எருமை**

**மயிர்க்கவின் கொண்ட மாத்தோல் இரும்புறம்,**

**சிறுதொழில் மகாஅர் ஏறி, சேணோர்க்குத்**

**துறுகல் மந்தியின் தோன்றும் ஊரன்,(அகம்.பா.206: 1-6)**

கள்ளுண்ட களிப்புடன், பேடிப் பெண்ணின் உருவம் பூண்டு கூத்தாடுவானது பின் சென்று மேல் வளைந்த கையைப் போன்று விளக்கமுற அமைந்த பெருத்த முறுக்குண்ட கொம்புகளையுடைய மயிரால் அழகு பெற்றுத் தோன்றும் கருநிறத் தோலையுடைய எருமையின் பெரிய முதுகில், சிறிய செயல்களைச் செய்யும் சிறுவர்கள் ஏறி அமர்ந்திருப்பர். அக்காட்சி தொலைவிலிருந்து காண்பார்க்கு உருண்டைக் கல்லின் மீது மந்தி அமர்ந்திருப்பது போல் என்று தலைவி தோழிக்குச் சொல்லுவாளாய் விறலிக்குச் சொல்லியது.

விறலி அப்பாடல்களில் இல்லற தலைவன் தலைவியர்க்கு நல்ல உணர்வினை ஊட்டுபவளாகவும், புறத்திணை வாழ்வில் வறுமையில் வாடும் பொருளாதார உடைய கலைஞர்களாய்த் திகழ்ந்திருந்தனர்.

**கல்வி**

சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் அனைவரும் கல்வி கற்கும் வாய்ப்பு இல்லையெனினும், சங்க கால மகளிர் தங்கள் சுயசிந்தனை மூலமும், பட்டறிவாலும், குடும்ப வாழ்க்கையில் ஏற்படுகின்ற பல்வேறு அனுபவங்களின் ஓரளவு கல்வியறிவு உடையவர்களாகத் திகழ்ந்துள்ளனர். மக்களில் ஆணும், பெண்ணும் இணைந்து அவர்களிடையே நல்லுறவை ஏற்படுத்துகின்ற பாலமாக கல்வி அமைகின்றது.

**கல்வியின் நோக்கம்**

இன்றுள்ள சமூக மரபுகளை இனிவரும் சந்ததியினருக்குக் காத்தளிக்கும் வாய்ப்பாக அமைவது கல்வி என்று கூறலாம்.

**கல்வியில் வேறுபாடின்மை**

சங்க காலத்தில் உயர்ந்த சாதியில் பிறந்தவன் தான் கல்வி கற்க வேண்டும். மறற்வர்கள் கல்வி பயில இயலாது என்ற வேறுபாடு இல்லாமல் அனைவரும் கல்வி கற்றனர். இன்றும் அவ்வாறே கல்வி கற்கின்றனர். மேலும் கல்வியே செல்வத்துள் சிறந்தது என்கிறார் வள்ளுவர்.

**கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**

**மாடல்ல மற்றை யவை**[14]

ஒருவனுக்கு அழிவு இல்லாத செல்வம் கல்வியே ஆகும். கல்வி தவிர மற்ற பொருட்கள் சிறந்த செல்வமாகாது என்று கூறியுள்ளார்.

சங்க காலத்தில் சிறப்பு மிகுந்த கல்வியைப் பெற ஆசிரியருக்குத் தட்சணை கொடுத்தும் பல உதவிகளைச் செய்தும், அன்பாகவும் அமர்ந்து கல்வி கற்க வேண்டுமென்பதையும், அறிவுடையவனையே அரசனும் மதிப்பான் என்பதை,

**உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**

**பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே**

**அறிவுடையோன் ஆறு அரசல் செல்லும்**

**வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்**

**கீழ்ப்பால் ஒருவன் கற்பின**

**மேற்பால் ஒருவனம் அவன் கண்படுமே**[15]

ஆசிரியருக்குத் துன்பம் நேரும்போது உதவ வேண்டும். அவருக்கு நிறைந்த செல்வம் கொடுக்க வேண்டும். அவரைப் பின்பற்றி நடப்பதற்குத் தயங்கக் கூடாது. இப்படிக் கல்வி கற்பது முறையாகும். இது பெரிதும் தன்மை பயக்கும் என்றால், தன் வயிற்றில் பிறந்த உடன்பிறப்புக் கொண்ட பலரில் சிறப்பு பெற்றிருப்பவனிடம் தாயின் மனமும் திரிந்து செல்லும். ஒரே குடியில் பலரில் மூத்தவனை வருக என அழைக்காமல் அவர்களில் அறிவுடையவன் வழியில் அரசாட்சியும் நடைபெறும். பிறப்பால் நான்கு பிரிவுகள் உண்டு. அவற்றில் கீழ்குலத்தில் பிறந்த ஒருவன் கற்றிருந்தால் மேல்குலத்தில் பிறந்தவனும் அவனிடம் அடக்கமாவான். என்று புறநானூற்றுப் பாடலில் தாரகமந்திரமாகக் கொண்டு கல்வி கற்றனர் என்பதை புலப்படுத்துகிறது.

**பெண் கல்வி**

சங்க மகளிர் கற்ற கல்வி அவர்தம் திருமணத்திற்குப் பிறகு இல்லற வாழ்வில் ஈடுபடுவதற்குத் துணை செய்யும் கருவியாக அமைந்தது. குடும்பக் கல்வியினைத் தாயிடமும் செவிலியிடமும் தோழியிடமும் கற்றாள்.

சிலப்பதிகாரத்தில் கோவலன் தன்னை விட்டு நீங்கிய போது மாதவி மீண்டும் அவனை அடைய வேண்டி, அவனுக்கு மடல் எழுதினாள். எழுத்தாணியைச் செம்பூஞ்சுக் குழம்பில்தோய்த்துத் தாழையின் வெள்ளிய ஏட்டிலே மடல் எழுதினாள்.

**எண்ணென் கலையும் இசைந்துடன் போகப்**

**பண்வைத் திறனும் புறங்கூறு நாவில்**

**தலைவா யவிழந்த தனிப்படு காமத்து**

**விளையா மழலையின் விரிந்துரை எழுதிய**[16]

என்ற பாடல் மாதவி கோவலனுக்கு மடல் எழுதியமை அக்காலப் பெண் கல்வி நிலையைப் புலப்படுத்துகிறது.

சங்க காலத்தில் கல்விக்குப் பெரிதும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்ததை,

**குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்**

**மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து**

**நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்**

**கல்வி அழகே அழகு**[17]

என்ற பாடலில் பெண்களின் அழகைக் காட்டிலும் அவர்தம் கற்ற கல்வியே சிறந்த அழகு என்று சொல்லும் இப்பாடலின் மூலம் சங்க காலத்தில் கல்வி மறுக்கப்படவில்லை என்பதை அறிய முடிகிறது.

**பெண்பாற் புலவர்கள்**

பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தில் ஆடவரைப் போலபெண்டிரும் கவிபாடும் திறமையும், புலமையும் பெற்று சிறந்து விளங்கினர். பெண்பாற் புலவர்கள் அகம், புறம் என இருவகைப்பட்ட அடிகருத்துக்களில் பாடல்களைப் பாடியுள்ளனர். அகம் குறித்துப் பாடிய பாடல்களில் அவர்கள் பெண்களின் காதல் துயரங்களையே மிகுதியாகப் பதிவு செய்துள்ளனர். காதலனைப் பிரிந்து துயரத்தால் வருந்துதல், தலைவன் அருகில் இருந்தால் இன்பம் என்றும், அவன் பிரித்தால் துயரம் என்றும் கூறுதல், ஊருக்கு அஞ்சித் தம் காதலை வெளியே தெரியாதவாறு கட்டுப்படுத்தும் போது ஏற்படும் வருத்தங்களைத் தெரிவித்தல், பனி, வாடை, மழை போன்ற இயற்கையால் ஏற்படும் உடல் துன்பங்களையும், காம உணர்வுகளையும், நாணத்தை விட்டொழிக்கும் வண்ணம் வேதனையுடன் கூறுதல், தம்மை பிரிந்திருந்த காலத்தில் தலைவன் தம்மை எண்ணிப் பார்ப்பானா? மாட்டானா? என ஏங்கி வருந்துதல், பரத்தையரிடம் உறவு வைத்துக் கொள்ளாத கணவனாகத் தலைவன் இருக்க வேண்டுமென எண்ணுதல் எனப்பல நிலைகளில் தலைவியரின் துயரங்களைப் புலவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

**அஞ்சியத்தை மகள் நாகையார்**

இவர்தம் பெயர் புதுமையாக உள்ளது. அஞ்சி எனும் பெயர் உடையவரை'அஞ்சியத்தை' என அவர் உறவினர் அழைத்ததும், அவர்தம் மகளாக 'நாகையார்' எனப் பெண்புலவர் குறிக்கப் பெற்றதும் சிந்திக்கத் தக்கச் சிறப்புக் குறிப்புகள். புலவர்தம் இயற்பெயர் நாகை என்று தெரிகிறது. இவர் பெண்புலவர் என்பதைப் பாடலில் உள்ள அகக் குறிப்புகளும் உறுதி செய்கின்றன.

தலைவன் தலைவியை மணந்து செல்ல வருவதைக் கண்ட தோழி அச்செய்தியைத் தலைவியிடம் கூற, அது கேட்ட தலைவி தோழியைப் பாராட்டிச் சொல்லியதனை,

**கடும்பரிப் புரவி நெடுந்தேர் அஞ்சி**

**நல்இசை நிறுத்த நயம்வரு பனுவல்,**

**தொல்இசை நிறீஇய உரைசால் பாண்மகன்**

**எண்ணுமுறை நிறுத்த பண்ணி னுள்ளும்,**

**புதுவது புனைந்த திறத்தினும்**

**வதுவை நாளினும் இனியனால் எமக்கே (அகம்.பா.352: 12-17)**

என்ற பாடலில், அன்னவன் உயர்குடிப் பிறப்பினன், தன்னுடன் பழகியோரைப் பிரியலன். நாவால் கெடுமொழி கூறான். எல்லோரிடத்தும் அன்பினன் எனவெல்லாம் அவன் சிறப்புகளை எடுத்துக்கூறி என்னுடன் அவளைக் கூட்டி வைத்தனை, விரைந்தோடும் குதிரைகள் பூண்ட நெடிய தேரினையுடைய அதியமான் அஞ்சியின் பழம் புகழ் நிறுவிய புகழமைந்த பாண்மகனானவன், இனிய இசைத்தமிழ் நூலின் எண்ணின் முறைப்படி இயற்றிய பண்ணகைக் காட்டிலுனும் அவன் புதுமையாக இயற்றிய திறத்தைக் காட்டினும், எம் தலைவன் எம்மைத் திருமணம் செய்த நாளினும் இப்பொழுது பெரிதும் இனியனாக விளங்குகின்றான்.

**அள்ளூர் நன்முல்லையார்**

அள்ளூர் நன்முல்லையார் பாடியனவாக குறுந்தொகையில் ஒன்பது பாடல்களும், அகநானூற்றில் ஒரு பாடலும், புறநானூற்றில் ஒரு பாடலுமாக மொத்தம் 11 பாடல்கள் கிடைத்துள்ளன. இவரின் பெயருக்கு முன்புள்ள அள்ளூர் என்பது பாண்டிய நாட்டின்கண் உள்ளதாகும். இதை இவருடைய அகநானூற்றுப் பாடலடிகளே உறுதிப்படுத்துகின்றன. தோழி தலைமகளுக்கு வாயில் மறுத்து கூறியதனை,

**ஒளிறு வாட் தானைக் கொற்றச் செழியன்**

**பிண்ட நெல்லின் அள்ளூர் அன்ன என் (அகம்.பா.46: 13-14)**

என்ற பாடலடியின் மூலம் ஒளிவீசும் வாட்படையினையுடைய வெற்றி பொருந்திய செழியனது நெற்குவியலையுடைய அள்ளூர் என்னும் ஊரை உடையவன் என்று கூறியுள்ளார்.

**ஒக்கூர் மாசாத்தியார்**

ஒக்கூர் என்ற பெயருடைய ஊர் பாண்டி நாட்டிலும் சோழ நாட்டிலும் உள்ளது. பாண்டி நாட்டில் திருக்கோட்டியூர் பக்கத்தில் இவ்வூர் உள்ளது. இதே பெயரில் சோழ நாட்டிலும் ஓர் ஊர் உள்ளதாகக் குறிப்பர். மாசாத்தனார் எனும் பெயருடைய புலவரும் மாசாத்தியார் எனும் பெயருடைய பெண்பாற் புலவரும் ஒக்கூரைச் சேர்ந்தவர்கள். மாசாத்தியார் எட்டு பாடல்கள் பாடியுள்ளார். வினைமுற்றிய தலைமகன் கருத்து உணர்ந்து உழையர் சொல்லியது. இதனை,

**விருந்தும் பெறுகுநள் போலும், திருந்துஇழைத்**

**தடமென் பணைத்தோள், மடமொழி அரிவை -**

**தளிர்இயல் கிள்ளை இனிதினின் எடுத்த (அகம்.பா.324:1-3)**

திருத்தமாக செய்யப்பெற்ற அணிகலன்களையும், மூங்கிலை ஒத்து அழகு பெற்ற மென்மை வாய்ந்த பெருத்த தோள்களையும், மடப்பத்தையுடைய மொழியினையும் உடைய தலைவி இன்று தலைவனுக்கு விருந்து செய்யும் பேற்றினைப் பெறுவாள் ஆவாள்.வினை முற்றிய தலைமகனது வரவு கண்டு,

**வான் வழங்கு இயற்கை வளிபூட்டி னையோ?**
**மான் உரு ஆகநின் மனம்பூட் டினையோ?**
**உரைமதி-வாழியோ, வலவ!என, தன்**
**வரைமருள் மார்பின் அளிப்பனன் முயங்கி,**
**மனைக்கொண்டு புக்கனன், நெடுந்தகை;**
**விருந்துஏர் பெற்றனள், திருந்திழை யோளே, (அகம்.பா.384:10-15)**

என்ற பாடலில் வானில் இயங்கும் இயல்பினையுடைய காற்றைக் குதிரையின் உருவாக இத்தேரில் பூட்டி வந்தாயோ அல்லது நின் மனத்தையே குதிரை உருவாக இத்தேரில் பூட்டி வந்தாயோ சொல்வாயாக, என்று கூறிப் பெருந்தகைமையை உடைய தம் தலைவன் தனது மலைபோன்ற மார்ப்பில் அவ்வலவனை இறுகத் தழுவி தன் வீட்டின் கண் உடன் கொண்டு போயினன். திருத்தமுறச் செய்த அணிகளையுடைய அவன் தலைவியோ அவன் வரவால் உள்ளம் மகிழ்ந்து விருந்தோம்பும் சிறப்பினைப் பெற்றாள் என்ற பாடலின் மூலம் உழையர் கூறுகின்றார்.

**ஔவையார்**

சங்ககாலப் பெண் புலவர்களில் ஔவையார் தலைமை பெற்றவர். இவர் இளமையிலேயே கவிநலம் வாய்க்கப் பெற்றவர். இவர் தமிழகத்தில் ஆண்களோடு பெண்களும் கல்வியில் சிறந்தவர்களாக புலமையில் தேர்ந்தவர்களாக விளங்கினார். பெண்பாற் புலவருள் ஔவையார் பாடிய பாடல்களும் அடைந்த சிறப்பும் புகழுமே மிகுதியாக உள்ளன. ஔவையாரின் புலமையால் அவர் நீண்டகாலம் வாழ்ந்தால்

நாட்டுக்கு நலம் விளையும் என்று கருதியே அதியமான் நெடுமான் அஞ்சி, தனக்கு அரிதாகக் கிடைத்த நெல்லிக்கனியை இவருக்கு அளித்து மகிந்தான்.சங்க காலத்தில் சிறப்பு வாய்ந்த பெண்பாற் புலவர்களுள் ஒருவர். காதல், வீரம் ஆகிய இரு துறைகளிலும் சிறந்த கருத்துக்களை மிக நுட்பமான முறையில் வெளிப்படுத்தியுள்ளார்.

**நீர் வார் நிகர் மலர் கடுப்ப, ஓ மறந்து**

**அறு குளம் நிறைக்குந போல, அல்கலும்**

**அழுதல் மேவல ஆகி,**

**பழிதீர் கண்ணும் படுகுவமன்னே! (அகம்.பா.11:12-15)**

என்ற பாடலில், எமது குற்றந்த தீர்ந்த கண்களும் நீர் துளிக்கும் ஒளி பொருந்திய மலரைப் போன்று ஒழிதலின்றி நீர் வறந்த குளத்தினை நிறைக்கின்ற மடைபோல நாள்தோறும் அழுதலைப் பொருந்தாதனவாகி உறக்கம் கொள்ளும்.செலவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் கூறியதனை,

**செலவுஅயர்ந் திசினால் யானே, பலபுலந்து,**

**உண்ணா உயக்கமொடு உயிர்செலச் சாஅய்,**

**தோளும் தொல்கவின் தொலைய, நாளும்**

**பிரிந்தோர் பெயர்வுக்கு இரங்கி,**

**மருந்துபிறிது இன்மையின், இருந்துவினை இலனே! (அகம்.பா.147:10-14)**

என்ற பாடலில் எல்லாவற்றயையும் வெறுத்தேன். உண்ணாத வருத்ததால் உயிர் போகும் அளவு உடல் மெலிவுற்றேன். என் தோள்களும் பழைய அழகு கெட்டன. பிரிந்த தலைவரது பிரிவிற்கு இரங்கி யான் கொண்ட நோய்க்கு வேறு மருந்து இல்லாமையால் செய்வதறியாது செயலற்றுப் போனேன் என்று தலைவியானவள் தோழியிடம் கூறுகின்றாள்.பிரிவின்கண் தலைமகள் அறிவு மயங்கிக் கூறியதாக,

**யாங்குஎன உணர்கோ, யானே? வீங்குபு**

**தலைவரம்பு அறியாத் தகைவரல் வாடையொடு**

**முலையிடைத் தோன்றிய நோய்வளர் இளமுளை**

**அசைவுடை நெஞ்சத்து உயவுத்திரள் நீடி,**

**ஊரோர் எடுத்த அம்பல் அம்சினை,**

**ஆராக் காதல் அவிர்தளிர் பரப்பி,**

**புலவர் புகழ்ந்த நார்இல் பெருமரம்**

**நிலவரை எல்லாம் நிழற்றி,**

**அலர்அரும்பு ஊழ்ப்பவும், வாரா தோரே (அகம்.பா.273: 9-17)**

என்ற பாடலில் முடிவின் எல்லை இது என்று அறிய இயலாததன்மையுடன் வருந்தும் வாடைக்காற்று வந்தது. அக்காற்றுடன் கூடி வேட்கை நோய் என்னும் இளைய முளை முலையின்கண் முளைத்தது. அது தளர்ந்த என் உள்ளத்துத் "துன்பம்" என்னும் தண்டாக வளர்ந்தது. ஊர்ப்பெண்கள் தம்முள் முகிழ் முகிழ்த்துக் கூறும் "பழிசொற்கள், கிளைகளாகத் கிளைத்து, ஆராக்காதல் என்னும் தளிர்களை ஈன்றது. புலவர் பாடும் புகழினைப் பெற்ற நாணமில்லாத பெரிய மரமாகி, இந்நிலவுலகம் முழுவதும் நிழல் பரப்பி, "அலர்" என்னும் அரும்புகளைத் தோற்றுவித்தது. இந்நிலையினும் கூட நம் தலைவர் நம்மை நினைந்து வரவில்லை என்று தலைவி தோழிக்குச் சொல்லுகின்றாள்.

**கழார்க்கீரன் எயிற்றியார்**

கழார் என்பது சங்ககாலத்தில் சிறப்புற்றிருந்த ஊர்களில் ஒன்று. கழை என்னும் சொல் மூங்கிலைக் குறிக்கும். ஆற்றோரம் மூங்கில் புதர் இருந்த ஆற்றுத்துறை கழார் எனப்பட்டது.பிரிவின்கண் வற்புறுக்கும் தோழிக்குத் தலைமகள் ஆற்றாமை மீதூரச் கூறியதனை,

**எனக்கே வந்தனை போறி!புனற்கால்**

**அயிர்இடு குப்பையின் நெஞ்சுநெகிழ்ந்து அவிழ,**

**கொடியோர் சென்ற தேஎத்து, மடியாது**

**இனையை ஆகிச் செல்மதி:**

**வினைவிதுப் புறுநர் உள்ளலும் உண்டே! (அகம்.பா.163:10-14)**

என்ற பாடலில் நீர் ஓடும் பொய்க்காலிடத்திதுள்ள நுண்மணல் மேடு கரைந்து அழியுமாறு போல, என் நெஞ்சமும் நிலைகுலைந்து நெகிழ்ந்து போக, கொடியவரான எம் தலைவர் சென்றுள்ள திசை நோக்கி, இதே வருந்தும் தன்மையினைக் கொண்டு தவிராது செல்வாயாக. சென்றால், விரைந்து பொருளீட்டும் தொழிலை மேற்கொண்டு சென்றுள்ள எம் தலைவர், என்னை நினைத்து வருதலும் கூடும். பிரிவு உணர்த்திய தோழிக்குத் தலைமகள் ஆற்றாமை மீதூரச் சொல்லியது.

**அற்சிரம் வந்தன்று; அமைந்தன்று இதுஎன,**

**எப்பொருள் பெறினும், பிரியன்மினோ எனச்**

**செப்புவல் வாழியோ, துணையுடை யீர்க்கே; (அகம்.பா.217: 13-15)**

என்ற பாடலில், இப்பனிக் காலம், பொருள் ஈட்டப் பிரிவார்க்கு ஏற்ற காலம் என்று எண்ணி, எத்தகைய பெரும் பொருளைப் பெறுவதாயினும் எம்மை விட்டுப் பிரியாதீர்

என்று தலைவியிடம் கூறுமாறு எனக்கு துணையாகவுள்ள உன்னிடம் யான் கூறினேன்.தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகள், ஆற்றாமை மீதூரச் சொல்லியதை,

**அம்ம - வாழி, தோழி! பொருள்புரிந்து**

**உள்ளார் கொல்லோ, காதலர்?உள்ளியும்,**

**சிறந்த செய்தியின் மறந்தனர் கொல்லோ? (அகம்.பா.235:1-3)**

என்ற பாடலடியில் பொருள் தேடுதலையே விரும்பி நம்மை நினையாது போயினரோ அன்றி, நினைந்தும் பொருள் ஈட்டும் முயற்சி மிகுதியால் நம்மை முற்றிலும் மறந்து போயினரோ இவ்வாறு பலவாறாக நினைக்கும் யான் எங்ஙனம் ஆற்றுவேன் எனச் சொல்லியது.பருவ வரவின்கண் வற்புறுக்கும் தோழிக்குத் தலைமகள்,

**சிதர்சினை தூங்கும் அற்சிர அரைநாள்,**

**காய்சின வேந்தன் பாசறை நீடி,**

**நம்நோய் அறியா அறனி லாளர்**

**இந்நிலை களைய வருகுவர் கொல்? என**

**ஆனாது எறிதரும் வாடையொடு**

**நோனேன் - தோழி! என்தனிமை யானே (அகம்.பா,.294: 11-16)**

என்ற பாடலில் முன்பனிக் காலத்தின் நள்ளிரவில், மிகக் சினங்கொண்ட அரசனது பாசறையின் கண்ணே நெடிது காலம் தாழ்த்திருந்து, நமது துன்பத்தினை ஒரு சிறிதும் நினைத்துப் பாராத அறமற்றவரான நம் தலைவர், நமது இத்துன்ப நிலையினைப் போக்க வருவார் என்று எண்ணி, இடைவிடாது வீசும் வாடைக் காற்றால் யான் தனிமையோடு துன்புற்றுக் கிடக்கின்றேன். என் செய்வேன் என தோழிக்குத் தலைமகள் சொல்லியதாகும்.

**குமிழி ஞாழலார் நப்பசலையார்**

சங்ககாலப் புலவர்களில் ஒருவர். குமிழி என்னும் ஊரில் பிறந்தவர். இவர் அகநானூற்றில் ஒரு பாடலை மட்டும் பாடியுள்ளார்.

**ஒடுங்குஈர் ஓதி நினக்கும் அற்றோ?**

**நடுங்கின்று, அளித்து, என் நிறைஇல் நெஞ்சம் (அகம்.பா.160: 1-2)**

என்ற பாடலில் என்னுடைய நிறையழிந்த நெஞ்சம் நடுங்கியது அஃது இரங்கத் தக்கது. ஒடுங்கிய நெய்பையுடைய கூந்தலையுடைய தோழியே உனக்கும் அவ்வாறு நெஞ்சம் நடுங்கியதோ என தோழியானவள் சொல்லுகின்றாள்.

**குன்றியனார்**

இவ்வாசிரியர் பெயரைக் குன்றியனார் எனப் பாடபேதம் ஓதுவர். குன்றியனார் என்பதைப் பாடபேதமாகக் கொள்ளின் குன்றி அன்னார் என்பது குன்றியனார் என்று தொகுத்து வழங்கி இருத்தல் வேண்டும். இவர் நெய்தல் திணைப் பாடல்களைச் சிறப்பாகப் பாடி இருப்பதால் தொண்டித் துறைமுகத்தைச் சார்ந்தவர் என்பது மேலும் உறுதி ஆகின்றது. தலைமகன் பொருள்வயிற் பிரிந்தபோது பிரிவு தாங்காத தலைவி தோழியிடம்,

**அளி இன்மையின் அவண் உறை முனைஇ,**

**வாரற்க தில்ல - தோழி கழனி**

**வெண்ணெல் அரிநர் பின்றைத் ததும்பும்**

**தண்ணுமை வெரீஇய தடந் தாள் நாரை**

**செறி மடை வயிரின் பிளிற்றி, பெண்ணை**

**அகமடல் சேக்கும் துறைவன்**

**இன் துயில் மார்பில் சென்ற என் நெஞ்சே! (அகம்.பா.40: 11-17)**

என்ற பாடலில், வயல்களில் வெண்ணெல்லை அரிவார் பின்புறத்தே ஒலிக்கும் பறையோசைக்கு வெருவிய, நீண்ட கால்களையுடைய நாரை செறிந்த மூட்டுவாயையுடை கொம்புபோல் ஒலித்துப் பனைமரத்தின் அகமடலிலே தங்கும் கடலின் துறையுடைய தலைவனது இனிய துயிலுக்குரிய மார்பின் பொருட்டுச் சென்ற என் நெஞ்சம் அவர் அளி செய்திலர் என்று அங்கே தங்கியிருத்தலை வெறுத்து இங்கு வராதிருப்பதாக என்று தோழிக்கு சொல்லியதாகும். தலைமகன் பொருள்வயிற் பிரிந்தவிடத்துக் கிழத்தியை நினைந்து சொல்லியது, இதனை,

**நாம் பிரி புலம்பின் நலம் செலச் சாஅய்,**

**நம் பிரிபு அறியா நலனொடு சிறந்த**

**நல்தோள் நெகிழ, வருந்தினள் கொல்லோ- (அகம்.பா.41: 10-12)**

என்ற பாடலில், அக்காலத்தில், நம் பிரிவு என்பதே அறியாமல் இயற்கை அழகுடன் சிறந்திருந்த நம் தலைவியின் நல்ல தோள்கள் இப்போது நாம் பிரிந்தமையால்,

தனிமை காரணமாக அவ்வியற்கை அழகு கெட மிகவும் மெலிந்து தன் நெஞ்சம் நெகிழ்ந்து வருந்தினாளோ என்று தலைமகன் தன் நெஞ்சிற்கு சொல்லியது ஆகும்.

**நக்கண்ணையார்**

நக்கண்ணையார் பெண்பாற்புலவர் ஆவார்.பெருங்கோழி நாயக்கன் மகள் நக்கண்ணை எனவும் கூறப்படுவர். உறையூர் எனும் சோழர் தலைநகரில் வாழ்ந்தவர். நாய்கன் எனும் பெயர் வணிக மரபினரை அக்காலத்துக் குறித்தது. தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குத் தலைவி கூறுகையில்,

**யாங்குச் செய்வாம் கொல் தோழி! ஈங்கைத்**

**துய் அவிழ் பனிமலர் உதிர வீசித்**

**தொழில்மழை பொழிந்த பானாட் கங்குல்,**

**எறிதிரைத் திவலை தூஉம் சிறுகோட்டுப்**

**பெருங்குளம் காவலன் போல,**

**அருங்கடி அன்னையும் துயில்மறந் தனளே? (அகம்.பா.252: 9-14)**

இண்டையின் குளிர்ந்த மலர்கள் உதிருமாறு மேகம் பெருமழை பெய்த நள்ளிரவில், அலைகள் மோத அதன் துளிகள் பரத்தலால் சிறிய கரையினையுடைய பெரிய குளத்தைக் காவல் செய்யும் காவலன் போல, அரிய காவலை மேற்கொண்ட நம் அன்னையும் இரவில் துயிலை மறந்தாள். என்னைக் காவல் காப்பதில் கருத்தாய் இருக்கின்றாள். யாம் என்ன செய்வது என்று தோழிக்குச் சொல்லுவாளாய்த் தலைவன் கேட்பச் சொல்லியது.

**நல்வெள்ளியார்**

நல்வெள்ளியார் என்றும் நல்லொளியார் என்றும் அழைக்கப்பட்டவர். இவர் மதுரையை சேர்ந்தவர். சங்க இலக்கியத் தொகுப்பில் நான்கு பாடல்களைப் பாடியுள்ளார். அகநானூற்றில் ஒரு பாடலையும் பாடியுள்ளார். பின்னின்ற தலைமகற்குக் குறை நேர்ந்த தோழி தலைமகட்குக் குறை நயப்பக் கூறியதில்,

**என் உரத் தகைமையின் பெயர்த்து, பிறிது என்வயின்**

**சொல்ல வல்லிற்றும் இலனே; அல்லாந்து,**

**இனம் தீர் களிற்றின் பெயர்ந்தோன் இன்றும்**

**தோலாவாறு இல்லை - தோழி! நாம் சென்மோ, (அகம்.பா.32: 14-17)**

என்ற பாடலில், பிறிதொரு சொல்லும் என்னிடம் கூற வலியற்றவனாகி வருந்தித் தன் காதற் பிடியை நீங்கச் செல்லும் களிற்றைப் போல மீண்டான். அவன் இன்றும் வந்து நமக்குத் தோற்காது இருத்தல் இல்லை.

**பொதும்பிற் புல்லாளங்கண்ணியார்**

இப்புலவா்தம் இயற்பெயா் கண்ணியாா் என்பதாகலாம். கண்ணியாா் எனும் பெயா் ஈற்றை உடைய வேறு புலவா் இருத்தலின் அப்புலவரினின்று வேறுபடுத்திக் காட்டப் 'பொதும்பில் புல்லாளம்' என்ற அடை சோ்க்கப்பட்டிருத்தல் கூடும். பொதும்பு என்பது நிலத்தைக் குறித்ததால் பொதும்பில் புல்லாளம் என்பது ஊா்ப்பெயா் ஆகலாம். வினைமுற்றிய தலைமகன் தோ்ப்பாகற்கு கூறும்போது,

**படுமழை பொழிந்த பயம்மிகு புறவின்**

**நெடுநீர் அவல பகுவாய்த் தேரை**

**சிறுபல் இயத்தின் நெடுநெறிக் கறங்க,**

**குறும்புதற் பிடவின் நெடுங்கால் அலரி**

**செந்நில மருங்கின் நுண்அயிர் வரிப்ப,**

**வெஞ்சின அரவின் பைஅணந் தன்ன**

**தண்கமழ் கோடல் தாதுபிணி அவிழ,**

**திரிமருப்பு இரலை தெள்அறல் பருகிக்**

**காமர் துணையொடு ஏமுற வதிய,**

**காடுகவின் பெற்ற தண்பதப் பெருவழி; (அகம்.பா.154:1-10)**

என்ற பாடலில், ஒலிக்கின்ற மழை பொழிந்தமையால் பயன்மிக்க முல்லை நிலத்தே, நீரினையுடைய ஆழமான பள்ளங்களில் பிளந்த வாயினையுடைய தேரைகள், நீண்ட வழியெல்லாம் வாத்தியங்கள் பல ஒன்று சேர்ந்து ஒலிப்பன போன்று ஒலித்தன. குறும்புதராகிய பிடவஞ் செடியின்கண் மலா்ந்த நீண்ட காம்பினையுடைய மலர்கள், செம்மன் நிலத்தில் உதிர்ந்து அந்நிலத்தை அழகு செய்தன. மிக்க சினமுடைய பாம்பின் படம் மேல் நோக்கினாற் போன்று குளிர்ந்த காந்தள் பூவின் மொட்டுக்கள் மணங்கமழுமாறு கட்டவிழந்து மலர்ந்தன.முறுக்குண்ட கொம்பினையுடைய ஆண்மான், விருப்பத்தையுடைய பெண்மானுடன் இனிதே தங்கியது. இவ்வாறாகக் காடு அழகு பெற்றுத் திகழந்தது.

**போந்தைப் பசலையார்**

இப்பெண் புலவர் சோழநாட்டினர் என ஊகிக்கலாம். இவர் பாடிய பாடல்கள் நெய்தல் திணையினதாக உள்ளது. சோழநாட்டுக் கடற்கரை ஓரத்தை மையமாக கொண்டு அமைந்துள்ளது.தோழிசெவிலித்தாய்க்கு அறத்தொடு நின்று,

**கடுஞ் சூள் தருகுவன், நினக்கே; கானல்**

**தொடலை ஆயமொடு கடல் உடன் ஆடியும்,**

**சிற்றல் இழைத்தும், சிறு சோறு குவைஇயும்,**

**வருந்திய வருத்தம் தீர, யாம் சிறிது**

**இருந்தனமாக, எய்த வந்து (அகம்.பா.110: 5-9)**

என்ற பாடலில், மாலை போன்று தொடர்ந்து தோழியர் கூட்டத்தோடு ஒன்று சேர்ந்து கடலில் ஆடினோம். கடற்கரைச் சோலையில் சிற்றில் புனைந்தோம். சிறுசோறு ஆக்கிக் குவித்து விளையாடினோம். இங்ஙனம் ஆடி வருந்திய வருத்தம் திருமாறு சிறிது இளைப்பாறி இருந்தோம் எனத் தோழி செவிலிக்கு அறத்தோடு நின்றாள்.

**முள்ளியூர்ப் பூதியார்**

பூதன் எனும் ஆண்பால் ஈற்றை உடைய புலவர்கள் சங்க இலக்கியத்தில் காணப் பெருகின்றனர். பூதி எனும் பெண்பால் ஈற்றை உடைய புலவரும் காணப் பெருகின்றனர். ஆகவே இவர் பெண்புலவராக இருத்தல் வேண்டும். முள்ளியூர் இவர் சொந்த ஊராக இருத்தல் வேண்டும்.தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளைத் தோழி,

**'அறம்தலைப் பிரியாது ஒழுகலும், சிறந்த**

**கேளிர் கேடுபல ஊன்றலும், நாளும்**

**வருந்தா உள்ளமொடு இருந்தோர்க்கு இல்' எனச்**

**செய்வினை புரிந்த நெஞ்சினர்,'நறுநுதல் (அகம்.பா.173: 1-4)**

என்ற பாடலில், அறநெறியினின்றும் தவறாது இல்வாழ்க்கை நடத்துவதும், சிறந்த சுற்றத்தாரின் பல்வகைத் துன்பங்களைத் தாங்குவதும் ஆகிய இவை, எப்பொழுதும் முயற்சி மேற்கொண்டு வருந்தாது, சோம்பிய உள்ளத்துடன் இருப்பவர்க்கு இல்லையாகும் என்று கருதி, நம் தலைவர் பொருள் ஈட்டும் வினையை விரும்பி மேற்கொண்டு சென்றுள்ளார். இவ்வாறு தலைமகளைத் தோழி வற்புறுத்தி ஆற்றுவித்தது ஆகும்.

**வெள்ளிவீதியார்**

வெள்ளிவீதியார் 13 பாடல்களைப் பாடியுள்ளார். நற்றிணையில் மூன்று, குறுந்தொகையில் எட்டு, அகநானூற்றில் இரண்டு ஆகும். இவரின் பாடல்களில்

பெரும்பாலும் துன்ப உணர்வே மேலோங்கி காணப்படுகிறது.வற்புறுக்கும் தோழிக்குத் தலைமகள்,

**எழில் மலர் புரைதல்வேண்டும். அலரே,**

**அன்னி குறுக்கைப் பறந்தலை, திதியன்**

**தொல் நிலை முழுமுதல் துமியப் பண்ணி,**

**புன்னை குறைத்த ஞான்றை, வயிரியர்**

**இன் இசை ஆர்ப்பினும் பெரிதே, யானே (அகம்.பா.45:8-12)**

என்ற பாடலில், ஊரில் எழுகின்ற அலரனது, அன்னி என்பான் குறுக்கையின் கண்ணுள்ள போர்களத்தில் திதியன் என்பானது தொன்றுதொட்டு நிலைபெற்று வருவதான புன்னைமரத்தின் பெரிய அடியை வெட்டி வீழ்த்தித் துண்டுகளாகத் துணித்த பொழுது அவன் புகழைப் பாடிப் பரவிய கூத்தர்தம் இன்னிசை முழுக்கத்தினும் பெரியதாகும்.இரவுக்குசிறச சிறைப்புறமாகத் தோழி,

**எவன்கொல்?வாழி, தோழி! நம் இடைமுலைச்**

**சுணங்குஅணி முற்றத்து ஆரம் போலவும்,**

**சிலம்புநீடு சோலைச் சிதர்தூங்கு நளிப்பின்**

**இலங்குவெள் அருவி போலவும்,**

**நிலம்கொண் டனவால், திங்கள்அம் கதிரே! (அகம்.பா.362: 11-15)**

தேமல் படர்ந்த நம் முலைத்தடத்துக் கிடந்தசையும் முத்து மாலை போலவும், மைலைத்தடத்துப் பிறந்து ஓடிவரும் வெண்ணிற அருவிபோலவும் மலையிடத்தே தாங்கள் நிலவினைச் சொரிந்தது.

**வெறிபாடிய காமக்கண்ணியார்**

காமக்கண்ணி எனும் பெயர் பார்ப்போர் விரும்பும் கண்களை உடையவர் எனும் பொருளது. காமக்கண்ணி எனும் தமிழ்ப் பெயரே பிற்காலத்துக் காமாட்சி என வடமொழி ஆக்கம் பெற்றது. பெரியநாயகி எனும் பெயர் பிரகதீஸ்வரி என்று மாற்றம் பெற்றதுபோல,'வெறி ஆட்டம்' என்னும் பழந்தமிழரிடையே இருந்த ஒரு பழக்கத்தை இவர் சிறப்பாக பாடினமையால் 'வெறிபாடிய காமக்கண்ணியார்' என அழைக்கப் பெற்றார்.தோழியாற் சொல்லெடுக்கப்பட்டுத் தலைமகள்,

**அணங்குடை நெடுவரை உச்சியின் இழிதரும்**

**கணம் கொள் அருவிக் கான் கெழு நாடன்**

**மணம் கமழ் வியல் மார்பு அணங்கிய செல்லல்**

**இது என அறியா மறுவரற் பொழுதில் (அகம்.பா.22: 1-4)**

என்ற பாடலில், தீண்டி வருந்தும் தெய்வம் பொருந்திய நெடிய மலை உச்சியிலிருந்த விழும் அருவிக் கூட்டங்களைக் கொண்ட காடு பொருந்திய நாட்டையுடையவன் நம் தலைவன், அவனது மணங்கமழும் அகன்ற மார்பு வருந்திய வருத்தம் எதனால் ஏற்பட்டது என்று அறியாது நம் அன்னை முதலியோர் நெஞ்சு சுழன்று கலக்கமுற்றனர்.தலைமகன் சிறைப்புறத்தானாக, தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்,

**அறிந்தனள்அல்லள், அன்னை; வார்கோல்**

**செறிந்து இலங்கு எல் வளை நெகிழ்ந்தமை நோக்கி,**

**கையறு நெஞ்சினள் வினவலின், முதுவாய்ப்**

**பொய் வல் பெண்டிர் பிரப்பு உளர்பு இரீஇ,**

**'முருகன் ஆர் அணங்கு'என்றலின், அது செத்து, (அகம்.பா.98: 6-10)**

என்ற பாடலில், நீண்ட திரட்சியை யுடைத்தாகி செறிந்து விளங்கும் ஒளியையுடைய என் வளையல்கள் நெகிழ்ந்தமையை நோக்கினாள். செயலற்ற உள்ளத்தினளாய், முதுமை வாய்ந்த பொய் கூறுவதில் வல்லவரான கட்டுவிச்சியரைக் கேட்கவும் தொடங்கினாள். அவரும் பிறப்பு அரிசியைப் பரப்பி வைத்து இது, "முருகனது செயலால் வந்த போக்குதற்கு அரிய வருத்தம்" என்றனர். அன்னையும் அதனை உண்மையெனக் கருதினாள்.

**தொகுப்புரை**

- அகநானூற்றில் தலைவி, தோழி, செவிலி, நற்றாய், பரத்தை, விறலி, பெண்பாற் புலவர்கள் குறித்து ஆராயப்பட்டுள்ளன.

- அகத்திணை மாந்தருள் தலைவி இன்றியமையாத பாத்திரமாக விளங்குகிறாள். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலங்களில் தலைவி களவு நிலையில் தலைவனுடன் தொடர்பு கொள்ளுவதால் ஊரார் அலர் தூற்றுபவளாகவும், கற்பு நிலையில் தலைவனை மணந்து கொண்டு கணவனின் சொற்படி இல்வாழ்க்கை நடத்துபவளாகவும் திகழ்கிறாள்.

- சங்க கால மகளிர் சமூகக் கடமைகளில் தங்களை ஈடுபடுத்தியும், ஒருவனுக்கு ஒருத்தி என்ற கட்டுப்பாடு உடையவர்களாக வாழ்ந்துள்ளனர்.

- தலைவியின் களவு வாழ்க்கையில் தொடங்கி, தலைவிக்கு ஏற்படுகின்ற அனைத்துத் துன்பங்களிலும் தோழி பங்கெடுத்துக் கொண்டு, அதைக் களைய முற்படுகிறாள். தலைவியை விட தோழியே தலைவியின் வாழ்க்கையைப் பற்றி அதிகம் சிந்தித்து நல்வழிப்படுத்துகிறாள். எனவே தலைவி, தோழியின் நட்பு, நட்பிற்கே இலக்கணமாகத் திகழந்துள்ளது என்பதை அறிய முடிகின்றது.

- செவிலி தலைவியின் வளர்ப்பில் சிறந்தவளாகவும், களவு, கற்பு வாழ்வில் நன்னெறி புகட்டியதையும், பாசம் மிகுந்தவளாகவும் திகழ்கிறாள், வயிற்றில் சுமந்து ஈன்றவள் நற்றாயாக இருந்தாலும் நெஞ்சில் சுமந்து தாங்குபவளாக செவிலித்தாய் திகழ்கிறாள். நற்றாய் ஈன்றெடுத்த தாயாக விளங்குகிறாள்.

- பரத்தை மருதத்திணைக்கு மட்டுமே உரியவள் என்பது சுட்டுகிறது. தலைவன், நிறைவுறாத இன்ப வேட்கையைத் தனித்துக் கொள்ள ஏற்படுத்திக் கொண்ட தொடர்பே பரத்தையர் தொடர்பாகும்.

- விறலி என்பவர் ஆடல், பாடல் நிகழ்த்தும் பெண்டிராவர்.

- சமுதாயத்தல் பொருள் வளம் பெருகிய நிலையில் இசை பாடற்கும், நாடகம் ஆடற்கும், இசைக்கருவிகள் செய்வதற்கும் விறலிகள் தோன்றினர்

- பெண்பாற் புலவர்கள் பாடிய பாடல்களில் தலைவியை விடுத்துக் கணவன் பிரிந்து செல்கறி காட்சியில் தலைவியின் மன உணர்வானது வெளிப்படுகிறது.

- சங்க காலத்தில் ஆண்களுக்கு இணையாக பெண்பாற் புலவர்கள் பாடல் இயற்றிருப்பது அவர்களது புலமைத்திறனை வெளிக்காட்டுகிறது.

## சான்றெண் விளக்கம்


1. திலகவதி.க., சங்க கால மகளிர் வாழ்வியல், ப.99
2. பாஸ்கரதாஸ்,ஈ.கோ., அகப்பொருள் பாடல்களில் தலைவி, ப.18
3. தொல், பொருள். நூ. 104-105
4. மேலது., ப.1054
5. தொல்.பொருள்.நச்.உரை, ப.242
6. தொல்.பொருள்.களவு, நூ.1038
7. தொல்.பொருள்.இளம்., ப.34
8. தொல்.பொருள். நச்.ப.45
9. தமிழ் இலக்கிய வரலாறு, ப.117,118.
10. தொல்.பொருள்.கற்பு, 1091
11. கலிங்கத்துப்பரணி, பா.484
12. தொல்.பொருள்.களவு நூ.34
13. தொல்.பொருள். நூ.1133
14. குறள். 400
15. புறம்.பா. 183
16. சிலம்பு. 64-67
17. நாலடி. 131:1-4

# இயல் 2

## மகளிர் உளவியல்

இயல் 2

மகளிர் உளவியல்

**முன்னுரை**

உளவியல் என்பது எல்லா வாழும் உயிரினங்களின் நடத்தையைப் பற்றி அறியும் நமது முயற்சி. குறிப்பாகத் தம்மை தாமே அறியும் தனிப்பட்ட தேடுதல். தமது உணர்வுகள், எண்ணங்கள் செய்யும் செயல்களுடன் தொடர்புடையது உளவியல் இது நடத்தையைப் பற்றிய அறிவியல். நடத்தையின் வகைகளைப் பற்றி ஆய்வது. தன்னளவில் முரண்பாடுகள் அற்ற ஒத்திசைவும் சமூக அளவில் நல்லுறவான இணக்கமும் உளநலத்தின் இருபெறும் கூறுகள். இவற்றில் ஏதேனுமொன்றில் குறைவு ஏற்பட்டாலும் உள்ள முறிவு, உள்ளப் போராட்டம், உள்ள இறுக்கம் ஆகிய உணர்வுநிலைகள் ஏற்படுகின்றன. முழுக்க முழுக்கத் தன்னுணர்ச்சிப் பாடல்களாக மட்டுமே அமைந்துள்ள நமது தொல்இலக்கியங்களான சங்க இலக்கியங்களில் இத்தகு உணர்வு நிலைகளைப் பரவலாகக் காணமுடியும். அகநானூற்றில் உள்ள மகளிரின் உளவியலை ஆய்வதே இவ்வியலின் நோக்கமாகும்.

**உளவியல் - சொல் விளக்கம்**

உள்ளம் தொடர்பான செய்கைகளையும் நிகழ்வுகளையும் எடுத்துரைக்கும் அறிவியல் துறை (Psychology) எனப்படும். உளவியல் என்னும் சொல், கிரேக்க மொழிச் சொற்களை "சைக்கி" (Psyche) என்ற உள்ளத்தைக் குறிக்கும். சொல்லையும் "லோகஸ்"(logus) என்னும் அறிவியலைக் குறிக்கும் சொல்லையும் மூலமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது[1] உளவியல் மனிதர்களின் நடவடிக்கைகளை ஒழுங்குமுறையாக அறிகின்ற ஓர் அறிவில். உளவியல் பல துறைகளையுடைய அறிவியலாகும். எல்லாத் துறைகளிலுமே அதனுடைய முக்கிய நோக்கம் மனிதர்களின் நடத்தையே முழுமையாக ஆய்வதாகும் என்கிறார்.[2] மனித உள்ளத்தின் உணர்ச்சிகள், விருப்புகள், வெறுப்புகள் முதலியவற்றை அறிந்து கொள்ள உதவுவது. இக்கருத்துக்களை உட்கொண்டே "உள்ளத்தின் கோலங்களையும், கோணங்களையும் அதன் விளைவுகளையும் ஆராய்கின்ற அறிவியிலாகும்"[3] என்று விளக்குவார் தி.சு.நடராசன்"1590 இல் புருடால்ப் கோக்கில் (Rudole Goeckle) என்பவர் தான் முதன்முதலாக "உளவியல்" என்ற சொல்லைப் பயன்படுத்தினார் என்பார்."[4] உளவியல் ஆன்மா, மனம், நனவு நிலை, நனவிலி நிலை, நடத்தை என்ற பலவிதமாக வளர்ந்துள்ளது. உளவியல், மனிதர்களின் நடவடிக்கைகளை ஒழுங்கு முறையாக அறிகின்ற ஓர் அறிவியல். உளவியல் பல துறைகளை அடைய அறிவியலாகும். எல்லாத் துறைகளிலுமே அதனுடைய முக்கிய நோக்கம் மனிதர்களின் நடத்தையை முழுமையாக ஆராய்வதாகும்.[5]

பிறரால் அறியக்கூடிய உடலியக்கங்கள் மட்டுமின்றிச் சிந்தித்தல், பொருள் காணல், உணர்ச்சி வயப்படுதல் போன்ற உள்ளார்ந்த செயல்களை உள்ளடக்கியது நடத்தையாகும். "மனித மனச் செயல்பாடுகள் குறித்து வெளிப்படும் குணம், நடத்தை" ஆகியவைகளை ஆராயும் அறிவியல் துறை உளவியல்"[6] என்று உளவியல் பற்றி அகராதி விளக்கம் தருகிறது. மனித மனத்தின் எண்ணங்களையும், நடத்தைகளையும்

ஆராய்வது "உளவியல்'' எனப்படும். உளவியல் மனிதனின் நடத்தையை அறியும் ஒரு விஞ்ஞானவியலாகும். "மனிதனின் நடத்தையானது குறித்த சூழ்நிலைத் தூண்டல்களினால் ஏற்படுவதன் காரணமாக சூழ்நிலை மனிதனின் நடத்தையை அறியவும் விவரிக்கவும் முக்கியமாக அமைகிறது"[7] எனக் கருதுபவரும் உண்டு.

**உள்ளம் பற்றிய அறிவியல் கருத்து**

மனிதனின் ஐம்பொறிகளில் செயல்படும் ஒட்டு மொத்தக் கூட்டுக் கலவையை ஆராயும் அறிவியல் பார்வைக்கு ''உளவியல்" என்ற பெயர்.

1. உள நிகழ்ச்சிகள் அல்லது உளச் செயல்களைப் பற்றி ஆராயவும் விஞ்ஞானம்

2. மனிதனுடைய நடத்தையை ஆராயும் விஞ்ஞானம்

3. தனிமனிதனுடைய உள்ளம் பற்றிய விஞ்ஞானம்

**உளவியலின் வளர்ச்சி நிலைகள்**

உளவியல் ஆய்விற்குத் தமிழ் இலக்கிய, இலக்கணங்கள் சிறந்ததொரு ஆய்வுக்குரிய களமாக அமைந்துள்ளன. தமிழ் இலக்கியம் கி.மு. இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே பெருகிய வளம் நிறைந்ததாகத் திகழுந்துள்ளது. தமிழ்ப் புலவர்களின் பங்கு உளவியல் ஆய்வில் நீண்டதொரு வரலாற்றை உடையதாக அமைந்திருக்கிறது.

தமிழ் கற்ற அறிஞர்கள் உளவியல் துறை பற்றி முழுமையான அமைப்புகளையும், ஆய்வு வளர்ச்சிகளையும் முறையாக அறியாதிருந்த நிலை இருப்பினும், அது பற்றிய குறிப்புகளை மட்டும் ஆங்காங்கே தெரிவித்துச் சென்றுள்ள தன்மைகளைக் காண முடிகின்றது. தொல்காப்பிய மெய்ப்பாட்டியலில்,

**''எள்ளல் இளமை"[8]**

**''செல்வம் புலனே"[9]**

வரையுள்ளவற்றைக் காட்டி என்றும் பிறழாது நுட்பமாய் இவற்றை விரித்துக் கூறியிருப்பதால், தமிழர்க்கு உள நூலுணர்ச்சியிருந்தமை அறியப்படுகிறது.

**உளவியற் கோட்பாடுகள்**

பதினெட்டாம் நூற்றாண்டில் உளவியல் துறை உருவானது. பல அறிஞர்கள் இந்தத் துறையில் கவனம் செலுத்தி மிகச் சிறந்த முறையில் வளர்த்தனர். மாறுபட்ட கொள்கைகள் பல முறைகளில் ஆய்வாக வளரத் தொடங்கிப் பின் மனித நடத்தையில் கவனம் செலுத்தத் தொடங்கியது. பின்னர் பல கோணங்களில் ஆய்வுகளை

மேற்கொள்ளத் தொடங்கியது. உளவியற் கோட்பாடுகளில் முக்கியமானவையாகப் பின்வருவனவற்றை முன் வைக்கிறார் க.பலராமன்.[10]

1. அமைப்பு நிலைக் கோட்பாடு (Structuralism)
2. செயல்முறைநிலைக்கோட்பாடு (Functionalism)
3. நடத்தைக் கோட்பாடு (Behaviourism)
4. நோக்கக் கோட்பாடு (Purporism)
5. உளப்பகுப்புக்கோட்பாடு (Psycho analysis)

**1. அமைப்பு நிலைக் கோட்பாடு**

உண்ட்டு (Wundt), டிச்சனர் (E.B.Tichener) போன்றோரின் அகநோக்கு உளவிற் கோட்பாடு இதுவே. உள்ளத்திலுள்ள நிலைகளும் அவற்றின் அளவுகளும் உளவியலின் ஆராய்ச்சிப் பொருளாகும். உள்ளம் எனப்படுவது நனவு உள்ளத்தையே குறிப்பதாகும். புலனுணர்ச்சிகள் (Sensational) சாயல்கள் (Images). உணர்ச்சிகள் (Feelings) போன்ற பல்வேறு கூறுகளைக் கொண்ட அமைப்பே உள்ளமாகும்.

**2. செயல்முறை நிலைக்கோட்பாடு**

வில்லியம் ஜேம்ஸ் (Willliam James 1842-1910). ஜான்டேயி (John Dewez) 1859-1952) ஜேம்ஸ் ஏன்ஜல் (James Angel, 1869-1849) போன்றோர் செயல்முறை நிலை நோக்குடனே ஆய்வு செய்தவர்கள் உள்ளத்தின் அமைப்பைப் பற்றி மட்டுமே ஆராயும் உளவியல் பயனற்றது என்ற கொள்கையினர். உள்ளச்செயல்களினால் விளையும் பயன்களைப் பற்றியும், உளச் செயல்கள், மாறுபடும் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு எவ்விதம் தாமும் மாறுகின்றன என்பது பற்றியுமே உண்மையான உளவியல் ஆய்கின்றது.

**3. நடத்தைக் கோட்பாடு**

ஜான் லாட்சன் (John Watson, 1878-1958) இந்தன் கொள்கையில் தீவிரமான நம்பிக்கை உடையவராக இருந்தார். மனிதனின் வெளிப்படையான அல்லது பறத்திலிருந்து நோக்கி ஆராயக் கூடிய நடத்தையை மட்டும் உளவியல் ஆராய்ந்து அறிய முற்பட வேண்டும் எமது இந்தக் கொள்கையாரின் நம்பிக்கை. ‘‘என்னிடம் சில குழந்தைகளைக் கொடுங்கள். அவர்களை எப்படி உருவாக்க வேண்டும் என்று விரும்புகின்றீர்களோ அப்படியே நான் உருவாக்குகிறேன். மருத்துவராகவோ, பொறியாளராகவோ, வழக்கறிஞர்களாகவோ அல்லது எப்படி வேண்டுமானாலும் உருவாக்க முடியும் என்று வாட்சன் கூறுகிறார். சூழ்நிலைகளே மனிதனை உருவாக்கும் என்பது இவர் கொள்கை.

**4. நோக்கக் கோட்பாடு**

நடத்தைக் கொள்கைக்கு நேரெதிரான நோக்கக் கொள்கையை ஹார்மிகக் கொள்கை (Hormism) என்றும் கூறுவர் வில்லியம்மெக்கேல் (William Mc/Doughhall) கொள்கையும் இதுவே நடத்தை என்பது ஒரு நோக்குடைச் செயலாகும் (Purposive) அதன் அடிப்படையில் குறிக்கோள்களும் இலக்குகளும் உள்ளன. இவற்றை அடையவே நடத்தை எழுகிறது. நடத்தையின் காரணம், உயிரிகளுள் காணப்படும் ஓர் உயிர் உந்தல் ஆகும்.

**5. உளப்பகுப்புக் கோட்பாடு**

இந்தக் கொள்கையைத் தோற்றுவித்தவர் சிமெண்ட் ஃபிராய்டு (Sigmund Frerd) 1856-1939 இவருடன் காரல் யுங் (Carl Jung, 1875-1962) ஆல்பிரடு ஆட்லர் (Alfred Adcett 1870-1937) ஆகியோரும் இந்த உளப்பகுப்புக்கொள்கையை ஆதரித்து வளர்த்தனர்.

**உளவியல் முன்னோடிகள்**

அறிவியல் கண்ணோட்டத்துடன் உளவியல் துறை வளரத் தொடங்கியது. உளக்கோளாறுகளை அறிந்து கொள்வதற்கும் குணப்படுத்துவதற்கும் உளவியலைப் பயன்படுத்தி இருபதாம் நூற்றாண்டில் பெருமளவில் வழிகாட்டிய உளவியலாளர்கள் சிக்மண்ட் பிராய்டு (Sigmund Freud 1856-1936), கார்ல்யுங் (Coral Jung, 1875-1961), ஆல்பிரடு ஆட்லர் (Alfred Adler, 1879-1937) ஆகியோராவர்.

**ஆசையும் மனித நடத்தையும்**

ஒவ்வொரு மனிதனின் உடல் மற்றும் உள்ளம் இருவற்றிற்குமே உந்து சக்தியாகவும், மனித நடத்தையின் மையக் காரணியாகவும் அமைவன ஆசைகளே என்பது உளவியலாளரின் கருத்தாகும். பலவிதமான ஆசைகள் தொடர்ந்து தோன்றிக் கொண்டே இருக்கின்றன. அவ்வகையில் இன்பத்தை நோக்கித் துன்பத்தை தவிர்த்தல் என்று அடிப்படையிலேயே செயல்பாடுகள் நடைபெறுகின்றன என்று சிக்மண்ட் பிராய்டு குறிப்பிடுகிறார்.

**உளவியல் பற்றிய முன்னாய்வுகள்**

ந.சேஷாத்திரியின் “சங்க இலக்கியத்தில் உளவியல் நோக்கு'' என்ற தலைப்பில் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பட்ட பி.எச்.டி.,. பட்ட ஆய்வு நூல். தே.கல்யாண சுந்தரத்தின் ‘‘சங்க அகப்பாடல்களில் உணர்வுப் போராட்டம்” என்னும் பி.எச்.டி.ஆய்வு நூல் ஆகியன குறிப்பிடத்தக்க உளவியல் பற்றிய முன்னாய்வுகள் ஆகும்.

**இலக்கியமும் உளவியலும்**

கலைகளில் சிறந்தது இலக்கியக்கலை; மனித உள்ளத்தை ஆராயும் அறிவியல் முறை உளவியலாகும். ‘‘மனித உள்ளத்தின் உணர்வே (Human Psyche) எல்லா அறிவியல்களுக்கும் கலைகளுக்கும் கருவறையாக விளங்குவது. எனவே, அத்தகைய உள்ளத்தின் வழிமுறைகளை ஆராய்கின்ற உளவியல்,இலக்கியம் பற்றிய ஆராய்ச்சிக்கும் ஏற்புடையதாக இருக்க முடியும்”[11] என்ற யுங் என்ற உளவியல் அறிஞர் கூறுகிறார்.

**இலக்கியமும் உளவியலும்**

சங்க இலக்கியப் பாடல்கள் அகம், புறம் என்ற பிரித்தறியாமல், அனைத்து பாடல்களிலும் உளவியல் உள்ளத்தைக் காணலாம். ‘‘சங்க இலக்கியத்திற்குப் பிறிதொரு பெயர் சூட்டுக’’ என்று கேட்டால் தயங்காமல் உளவியல் இலக்கியம் எனக் குறிப்பிடலாம். அகத்திணைப் பாடல்கள் நூற்றுக்கு எழுபத்தைந்தும் உளவியல் பற்றியனவே ஆகும்”[12] என்று தமிழண்ணல் கூறுகிறார். மேலும்,தமிழில் ஒருவர் நிலையான, விரவின இலக்கிய உளவியல் நூலொன்றை எழுதுவாரானால் அவர் பெரும்பான்மையான மேற்கொள்கைகளைச் சங்க இலக்கியத்திலிருந்து தான் எடுத்துக்காட்டி தம் கொள்கையை நிலைநிறுத்த வேண்டியிருக்கும் என்று குறிப்பிடுவதனை ஒப்பிடத்தக்கது.

தொல்காப்பியரின் பொருளதிகார உளவியலுக்கான இலக்கணமாகவே உள்ளதைக் காண முடிகின்றது. தொல்காப்பியர் குறிப்பிடும் எண்வகை மெய்ப்பாடுகள் உள்ளத்தில் எழும் உணர்வுகளையே குறிக்கின்றன.

**அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று**

**அப்பால் எட்டே மெய்பாடென்ப**[13]

என்னும் இவ்வெட்டு மெய்ப்பாடுகளும் எவ்வெவ் காரணங்களால் எழுகின்றன என்பதை அவர் குறிப்பிட்டிருப்பது அவரின் உளவியல் வள்ளண்மையே காட்டுகிறது.

‘‘இலக்கியத்துறை இயற்றுவதற்கு உள்ளமே முதன்மையாதலின் உள்ளத்தால் இயற்றப்படும் இலக்கியத்தில் உளவியல் இருப்பதில் எவ்விதமான வியப்பும் கொள்ள வேண்டியதில்லை. இத்தகைய இலக்கியத்தை ஆராயுங்கால் இலக்கியத் திறனாய்வில் உளவியல் பங்கு முக்கியமான ஆறு நிலைகளில் இருக்கிறது”[14] என்ற தி.சு.நடராசன் கூறுவர்.

அகநானூற்றுப் பாடல்களின் வழி அறியலாம். அகமாந்தர்களான தலைவி, தோழி, செவிலி, நற்றாய், பரத்தை ஆகியோரின் சூழ்நிலைகளும், சமூகத்தைச் சார்ந்து அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இயற்கை உள்ளம் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்ட மாந்தர்களை எடுத்துக் காட்டுகின்றன. சங்க காலத்தில் மலை, காடு, வயல், கடல், கதிர், மதி, பரு பெரும்பொழுது ஆகியற்றைக் கண்டு உணர்வில்

ஒன்றியிருந்தனர். சங்க இலக்கியத்தில் இயற்கையும், உளவியலும் இருபெரும் பண்புகளாகக் கூறப்பட்டிருப்பதை அகநானூறு நன்கு விளக்குகிறது.

1. தனிமனித உளவியல்
2. சமூக உளவியல்

இரண்டு நிலைகளில் உளவியல் நோக்கப்படுகிறது.

**தனிமனித உளவியல்**

மனிதனின் தனித்தன்மையினை அடிப்படையாகக் கொண்டு தனிமனித உளம் சார்ந்தும் ஆராயப்படுகின்றது. ஒருவரின் நடத்தை மற்றும் குணப்பண்புகளை அவருடைய உளவியல் பின்னணியை எடுத்துக்காட்டுகிறது.

தனிமனிதன் சுய அனுபவங்களினால் பெறப்படுகின்ற உணர்வுகளின் அடிப்படையில் வாழ்கின்றான். சங்க இலக்கிய மாந்தர்கள் பெரும்பாலும் தனிமனித உளவியலுக்கு முன்னுரிமை கொடுத்துள்ளனர். சங்கப் பாடல்கள் ஒவ்வொன்றும் தனிமனிதக் கூற்றுகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன. தனி மனிதனின் நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொள்கை புலன் காட்சி, கற்றல், நினைவாற்றல், சிந்தனை, ஆளுமை போன்றவற்றின் மூலமாக அறிந்து கொள்கிறோம். இவற்றைப் போலவே சமூக நடவடிக்கைகளை அறிய உளவியல் நோக்கில் சமூக மாற்றங்கள் ஆலோசிக்கும் தன்மை, பிரதிபலிப்பு, சமூக பயன் நெறிமுறைகள், சமூக நெறி போன்றவற்றைப் பயன்படுத்த வேண்டியுள்ளது.

**தலைவியின் உளப்பாங்கு**

அகநானூற்றில் தலைவியின் கூற்றுகளில் பெரும்பாலும் தனிமை இரக்கத்தை வெளிப்படுத்துகின்ற மனநிலை உடையவளாகத் திகழ்கிறாள்.

களவொழுக்கத்தில் தலைவனுடன் இன்புற்ற தலைவி இற்செறிப்பிற்கு ஆளாகின்றாள். இதனால் மிகுந்த வருத்தமடைகின்றாள்.இத்துன்பத்தை அனுபவித்தே ஆக வேண்டும். ஒன்றை இழந்து மற்றொன்றைப் பெற நினைப்பது உள்ளப்போராட்டத்தின் தீர்வாகும். தலைவி காமநோயால், வாட்டமுயற்றதை செவிலித்தாய்க்குக் கூறவேண்டாம் என்று தலைவன் கேட்குமாறு தோழிக்குக் கூறுகிறாள்.இதனை,

**சேர்ந்தன்று - வாழி, தோழி! “யாக்கை**

**இன் உயிர் கழிவது ஆயினும், நின் மகள்**

**ஆய்மலர் உன்கண் பசலை**

**காமநோய்“ எனச் செப்பாதீமே (அகம்.பா.52:12-15)**

என்ற பாடல் மூலம் வெளிப்படுத்துகிறது.

**மன இறுக்கம்**

ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாமல் மனம் கவலையால் விரக்தி நிலையை அடைவதை மனஇறுக்கமாகும் கவலை அல்லது தவிப்பு என்பது உளவியலாரின் கருத்தாகும். தலைவன் வரும்வரை அச்சம், அன்பு போன்ற பல்வேறு உணர்வுகளால் மன இறுக்கம் ஏற்படுகிறது.

**"நில்லா நெஞ்சத்து அவர் வாரலரே, அதனால்"(அகம்.பா.122:18)**

தாய், நாய், ஊர், காவலர், நிலவு வெளிப்படுதல், கூகை குமுறுதல் போன்றவற்றால் தடை ஏற்படும். இத்தடைகள் இல்லாத நாளில் இரவுக்குறி நடைபெறும் என்பதை இப்பாடல்வரியின் மூலம் அறிய முடிகிறது.

**உறக்கமின்மை**

மனம் துன்பநிலையில் இருக்கும்போது அதற்கான தீர்வை எண்ணி எண்ணி உறக்கமில்லாத நிலை ஏற்படுகின்றது. இந்நிலையை உளவியலின் நிலை மாற்றம் என்று கூறுவர், இதனை

**அஞ்சுவரு நோயொடு துஞ்சாதேனே! (அகம்.பா.45:19)**

தலைவன் பொருள் தேடச் சென்றதால் பிரியும் நிலை ஏற்பட்டது. பிரிவைத் தாங்காத தலைவி உறங்காமல் மிக்க வருத்தமுற்று காண்பதாக இப்பாடலடியில் காணப்படுகின்றது.

தலைவி தலைவனைப் பிரிந்ததால் மனம் தாங்கவியலாத துயரத்தை அடைகிறாள். மேலும் அத்துன்பமானது அவளின் உள்ளத்தையும் உடலையும் சோர்வடையச் செய்து நோயுறுகிறது.

**காமம் படர் அட வருந்திய**

**நோய் மலி வருத்தம் காணன்மார் எமரே**[15]

இப்பாடலில் உள்ளம் பாதிப்படைந்தால், நல்ல நிலையில் நலமாக விளங்கும் உடலும் கெடும் என்பது தலைவியின் உள பாதிப்பை வெளிப்படுத்துகிறது.

**தோழியின் உளப்பாங்கு**

தலைவியின் நல்வாழ்விற்கு வழிகாட்டுபவளாகவும், தனக்கென உளவியல் தன்மை எதுவுமில்லாதவளாகவும், தலைவியின் மனத்தாக்கங்களின் வெளிப்பாடாய் அமைந்துள்ளாள்.

தம் தோழியாகிய தலைவியைத் தலைவியை திருமணம் செய்து கொள்ளாமலே காலம் கடத்துவதைக் கண்டு, தலைவன் மனதில் பதியுமாறு நல்வார்த்தைகளைக் குறிப்பாகக் கூறுவாள். அவன் நாட்டில் விலங்குகள் இயல்பாக இன்பதைப் பெறுவதைச்

சுட்டிக்காட்டி, எம் தலைவியை அணுகினால் நிலையான இன்பத்தை எளிதில் பெறலாம் என்று தலைவனின் மனதில் பதியுமாறு நட்புணர்வுடன் எடுத்துரைக்கிறாள்.

**குறியா இன்பம், எளிதின், நின் மலைப்**

**பல்வேறு விலங்கும், எய்தும் நாட!**

**குறித்த இன்பம் நினக்கு எவன் அரிய? (அகம்.பா.2:8-10)**

என்னும் பாடலடிகள் மூலம் தலைவன், தலைவியை விரைவில் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்னும் நிலையைத் தலைவனுக்குத் தோழி கூறுகிறாள். மேலும், தலைவியைக் காண வரும் உன் வருகை தடைப்பட்டதால் எம் தலைவி பெரிதும் வருத்தமுறுகிறாள். இந்நிலை தெரிந்தும் ஏன் காலம் தாழ்த்துகிறாய்.

**நாள் இடைப்படின் என் தோழி வாழாள்,**

**தோளிடை முயக்கம் நீயும் வெய்யை;**

**கழியக் காதலர் ஆயினும், சான்றோர்**

**பழியொடு வரூஉம் இன்பம் வெ.ஃகார்**

**வரையின் எவனோ? வான் தோய் வெற்ப (அகம்.பா.112:9-13)**

என்னும் பாடலடிகள் மூலம் தலைவன் மீது தலைவி வைத்திருக்கும் அன்பும் திருமணம் செய்வதில் காலம் தாழ்த்தியமையால் தலைவி படும் துயரமும் ஒரு சேர உணரப்படுகிறது. இவ்விருவரின் சேர்க்கையில் தோழி ஓர் எஇணைப்புப்பாலமாக விளங்குவதை அறிய முடிகிறது.

**செவிலியின் உளப்பாங்கு**

உடன்போகிய தலைவியை நினைத்துக் செவிலி புலம்புகிறாள் இதனை,

**புன்தலை மன்றத்து அம்குடிச் சீறூர்**

**துணையொடு துச்சில் இருக்கும் கொல்லோ**

**கணையோர் அஞ்சாக் கடுங்கண் காளையொடு**

**எல்லி முன்னுறச் செல்லும் கொல்லோ?**

**எவ்வினை செயுங்கொல்? நேகோ யானே!**

**அரிபெய்து பொதிந்த தெரிசிலம்பு கழீஇ,**

**யாய்அறி வுறுதல் அஞ்சி**

**வேய்உயர் பிறங்களல் மலைஇறந் தோளே (அகம்.பா.321:10-17)**

என்ற பாடல் மூலம் அழகிய சிற்றூரின் வழியே அவள் தன் காதலனுடன் காட்டில் ஓர் இடத்தில் நடை தளர்ந்து தங்கியிருக்கிறாளோ, அச்சம் தரும் அப்பாலை வழியில் அவனுக்கு முன்னால் நடந்து கொண்டிருக்கிறாறோ, திருமண விழாவில் பெற்ற தாய் "சிலம்புகழி நோன்பு" செய்து கழற்ற வேண்டிய தன் சிலம்பைத் தலைவியாகிய என் மகள் தலைவனோடு உடன்போக்கில் செல்ல இரவில் புறப்பட்ட போது, உறங்கும் தாயை ஒலி செய்து எழுப்பிவிடுமே என்று, தானே கழற்றி வைத்துவிட்டுச் சென்றுவிட்டாள் என செவிலி புலம்புகிறாள்.

**நற்றாயின் உளப்பாங்கு**

நற்றாய், தலைவியைப் பெற்றெடுத்தவள். அக இலக்கியங்களிலும், இலக்கணங்களிலும் நற்றாய்க்கும் தலைவிக்கும் உள்ள தொடர்பு மேலோட்டமாகவே காட்டப்பட்டுள்ளது. மகளை இழந்த தாய் தனக்குள் வருந்திக் கூறியதாக,

**பல்மல கருஞ்சுரும் போகிய தனக்குயான்**

**அன்னேன் அன்மை நன்வா யாக**

**மான்அதன் மயங்கயி மலைமுதல்சிறுநெறி**

**வெய்து இடையுறா அது எய்தி, முன்னர்ப்**

**புல்லென் மாமலைப்புலம்புகொள் சீறூர்**

**செல்விருந்து ஆற்றி, துச்சில் இருத்த,**

**நுனை குழைத்து அலமரும் நொச்சி**

**மனைகெழு பெண்டுயான ஆகுக மன்னே! (அகம்.பா.203:11-18)**

என்ற பாடல் மூலம் தன் மகள் தனது உள்ளம் என்ன என்பதை அறியாமலேயே சென்றுவிட்டாள். இவர்கள் போகும் பாதையில் உள்ள சிற்றூரில், நொச்சி மரம் சூழ்ந்த குடிசையில் வாழும் ஒரு பெண்ணாக மாற்றிக் கொண்டு, அவர்களை வரவேற்று, விருந்து உபசரிக்க எண்ணுகின்றாள். நற்றாயின் உளநலத்தை வெளிப்படுத்துவாக இப்பாடல் அமைகின்றது.

**பரத்தையின் உளப்பாங்கு**

தலைவனுக்குத் தலைவி அல்லாமல் வேறு சில பெண்களுடனும் தொடர்பு இருக்கும் அவர்கள் பரத்தையர் எனப்படுவர்.பரத்தை தன் பாங்காயினார் கேட்பக் கூறியதாக,

**நறுவிரை தெளித்த நாறுஇணர் மாலை,**

**பெறிவரி இனவண்டு ஊதல கழியும்**

**உயர்பலி பெறூஉம் உருகெழு தெய்வம்,**

**புனைஇருங் கதுப்பின் நீகடுத் தோள்வயின்**

**அனையேன் ஆயின், அணங்குக, என்!"என**

**மனையோள் தேற்றும் மகிழ்நன் ஆயின்** **(அகம்.பா.166:5-10)**

என்ற பாடல் மூலம் தலைவன் தன் மனைவியிடம்,. உன் கோபத்திற்குகக் காரணமான அந்தப் பெண்ணை எனக்குத் தெரியவே தெரியாது. அவளோடு நான் காவிரிப் புதுப்புனல் ஆடவில்லை. அந்தத் தவற்றை நான் செய்திருந்தால் தெய்வம் என்னை வருத்தட்டும் என்று சூள் உரைத்து அவளைத் தேற்றுகின்றான். அப்படியானால் நேற்று என்னிடம் நீராடி களித்தவர் யார் வேறு ஒருவனா என்று தனக்குப் பாங்காயினாரிடம் தலைவனைப் பழிக்கிறாள் பரத்தை. இவ்வாறு பரத்தையின் உளநலத்தை வெளிப்படுத்துவதாக இப்பாடல் அமைகிறது.

**தொகுப்புரை**

- தனக்குத் தானே பேசுதல், புலம்புதல், கண்ணீர் விடுதல், உறக்கமின்மை, மன இறுக்கம், மேலும் தலைவியின் இரக்கத்தை வெளிப்படுத்துவதாக உளவியல் வெளிப்படுகிறது.

- தலைவியின் மனநிலைக்கேற்ப தோழியின் உள்ளத்தன்மையானது பேசுபவரின் மனநிலை, எண்ணம், செயல்பாடு அறிந்து அதற்கேற்ப பேசும் மன இயல்புடையனவாகத் தோழியின் உளத்தன்மை காணப்படுகிறது.

- மகளைப் பிரிந்த துயரத்தினால் அழுதல், புலம்புதல், ஆற்றாமை என்னும் உணர்ச்சிகளின் வெளிப்பாடாய் செவிலியின் உளவியல் உணர்த்தப்படுகிறது.

- உடன்போக்கு மேற்கொண்ட மகளின் பிரிவிடை, சமூகத்தில் எதிர் கொள்ளவிருக்கும் சிக்கலை எண்ணிக் கலக்கமடைகின்ற தாயின் மனநிலையை உளவியல் எடுத்துக்காட்டுகிறது.

- வளமான வாழ்விற்காகவும், பொருளுக்காகவும் செல்வமிக்க ஆடவர்களை விரும்புவர்களாக பரத்தையர் விளங்கியுள்ளதை உளவியல் வெளிக்காட்டுகிறது.

## சான்றெண் விளக்கம்

1. பேரா.எஸ்.சந்தானம், கல்வி உளவியல், ப.2

2. இராசமாணிக்கம், உளவியல் துறைகள் (தொகுதி-2), ப.1

3. தி.சு.நடராசன், திறனாய்வுக்கலை, ப.85

4. குமரிச் செழியன், கற்றல், மனித வளர்ச்சி, உளவியல்,ப.65

5. மு.இராசமாணிக்கம், உளவியல் துறைகள், இரண்டாம் தொகுதி, ப.1

6. க்ரியா அகராதி, ப.156

7. சி.இ.மறைமலை, இலக்கியமும் உளவியலும், ப.2

8. தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல்,நூல்.4

9. மேலது. நூ.11

10. க.பலராமன், உளவியல் நோக்கில் திருக்குறள், ப.11

11. தி.சு.நடராசன், திறானய்வுக் கலை, ப.86

12. குணசேகர் (உ.ஆ.). ப.38

13. தொல்.பொருள்.மெய். 994

14. தி.சு.நடராசன், திறானய்வுக்கலை, ப.86

15. து.சிவராஜ், சங்க இலக்கியத்தில் உளவியல், ப.52

# இயல் 3

## மகளிா் பண்பாடும் பழக்கவழக்கங்களும்

இயல் 3

# மகளிர் பண்பாடும் பழக்கவழக்கங்களும்

## முன்னுரை

பண்டைத் தமிழரின் பண்பாடும் பழக்கவழக்கங்களும் இன்றைய காலங்களில் வாழுகின்ற மக்களை நெறிப்படுத்துக்கின்ற வகையில் சிறப்புற விளங்குகின்றது. அவ்வகையில் விருந்தோம்பல், கல்வி, கலைகள், ஆடைகள், அணிகலன்கள், தொழில்கள், விளையாட்டு முதலியவற்றை அடிப்படையாகக் கொண்ட வாழ்ந்த சங்க காலச் சமுதாயத்தினை இலக்கியங்கள் வழி அறிந்து கொள்ள முடிகிறது. சமுதாயத்தில் நிகழும் புறவளர்ச்சியைக் குறித்துக் கூறுவதை நாகரீகம் என்றும், அக வளர்ச்சியைக் குறித்துக் கூறுவது பண்பாடு என்றும் குறிப்பர். அகநானூற்றில் மகளிருடைய பண்பாட்டையும், பழக்க வழக்கங்களையும் குறித்து ஆராயும் விதமாக இவ்வியல் அமைந்துள்ளது.

## பண்பாடு - விளக்கம்

பண்பாடனது இசை, இலக்கியம், வாழ்க்கைமுறை, உணவு, ஓவியம், சிற்பம், நாடகம், திரைப்படம் போன்ற மனிதனுடைய கலைப் பொருள்களிலும் நடவடிக்கைகளிலும் வெளிப்படுத்துகின்றது. “பண்பாடு’’ என்னும் சொல் மனிதனோடு மட்டுமே தொடர்புடையது. இதுவே பிற உயிரினங்களிடமிருந்து மனிதனைப் பிரித்துக் காட்டுகிறது. மனிதன் மட்டுமே பண்பாட்டைக் கொண்டு விளங்குபவன். ‘‘பண்படுவது, பண்பாடு, பண்படுதல், சீர்ப்படுதல் அல்லது திருந்துதல், திருந்திய நிலத்தைப் பண்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்ட நிலமென்றும், திருந்திய தமிழைப் பண்பட்ட செந்தமிழ் (தனிப்பாடல்) என்றும், திருந்திய உள்ளத்தைப் பண்பட்ட உள்ளமென்றும் சொல்வது வழக்கம்”[1] என மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் குறிப்பிடுகின்றார். வள்ளுவர் இதனை,

**“அன்புநாண் ஒப்பரவு கண்ணோட்டம் வாய்மையொடு**

**ஐந்துசால்பு ஊன்றிய தூண்’’[2]**

என்ற குறட்பாவில் அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகிய ஐந்து பண்புகளின் தன்மையை பண்புடைமை என்று குறிப்பிடுகின்றார்.

பண்பாடு என்பதற்குரிய விளக்கத்தை முதன்முதலாக ஆங்கிலேயர் தொல்லுயிர் நூல் அறிஞர் சர்.எட்வர் டைலர் என்பவர் கி.பி.1871 ல் எடுத்துரைத்தார். ‘‘சமூக உறுப்பினன் என்ற முறையில் மனிதன் பெற்ற அறிவு,நம்பிக்கை, கலை,சட்டம்,ஒழுக்க நெறிகள், வழக்கங்கள், தகுதிகள்,பழக்கங்கள் ஆகியவற்றின் முழுத்திரட்சியே பண்பாடாகும்”[3] என்பது அவரின் விளக்கமாகும்.

ஆங்கிலத்தில் 'Culture' என்று அழைக்கப்படும் சொல் தமிழில் “பண்பாடு’’ என்று அழைக்கப்படுகிறது. இச்சொல்லை முதன்முதலில் ஆண்ட பெருமை அறிஞர்

டி.கே.சிதம்பரநாத முதலியாருக்கு உரியது என்பர். பயிரிடுவதற்கு ஏற்ற நிலம் நன்கு பண்படுத்தப்பட்ட நிலம் என்றுசொல்லப்படும். பகுக்கப்பட்ட மனிதன் பண்பட்ட மனிதன் எனப்படுகிறான். பண்பட்ட உள்ளமுடையோரே பண்பாடு கொண்டவர்கள். ஆங்கிலத்தில் நன்செய் நிலம் 'Cultivated Land' என்றும் அழைக்கப்படுகிறது. பயிர் விளைத்தல் என்னும் பொருளிலும் Cultivate என்பது பயன்படுகிறது. நல்ல பழக்க வழக்கங்களை மேற்கொள்ளல் என்னும் பொருளில் இச்சொல் ஆளப்படுகிறது. எனவே "செம்மைப்படுத்தல்" என்னும் சொல் இச்சொல்லிற்கு அமைந்திருத்தலைக் காணலாம் என்று அ.தட்சிணாமூர்த்தி தம் நூலில் குறிப்பிடுகின்றார்.[4]

சிறப்பான வாழ்விற்கு அடிப்படையாக அமைகின்ற உள்ளப்பாங்கின் வெளிப்பாட்டையே பண்பாடு என்கிறோம்[5] என்று தொ.பொ.மீனாட்சிசுந்தரனாரும் குறிப்பிடுகிறார். ஒருவன் தன் குணநலன்களைப் பேணுவதிலும் பேராக் கொண்டிருக்கும் நிலை பண்பாடாகும்.[6] என மேத்யூ அர்னால்டும் இதே கருத்தினைக் குறிப்பிடுகின்றார்.

**நாகரீகம் பண்பாடு குறித்து அறிஞர் கருத்து**

நாகரீகத்திற்கும், பண்பாட்டிற்கும் உள்ள வேறுபாட்டை அறிஞர் தேவநேயப் பாவணர் கூறுவது "நாகரீகம் என்பது திருந்திய வாழ்க்கை. அது எல்லாப் பொருள்களையும் தமக்கே பயன்படுத்துவது. பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கம். அது எல்லாப் பொருள்களையும் தமக்கும், பிறர்க்கும் பயன்படுத்துவது. இலக்கணப் பிழையின்றிப் பேசுவதும் எல்லா வகையிலும் துப்புரவாயிருப்பதும், காற்றோட்டமுள்ளதும் உடல் நலத்திற்கு ஏற்றதுமான வீட்டில் குடியிருப்பதும் நன்றாய் சமைத்து உண்பதும், பிறருக்குத் தீங்கு செய்யாமையும் நாகரீகக் கூறுகளாகும். எளியோரிடத்தும் இனிதாகப் பேசுவதும், புதிதாய் வந்த ஒழுக்கமுள்ள அயலாரை விருந்தோம்புவதும், இரப்போர்க்கிடுவதும் இயன்றவரை பிறர்க்கு உதவுவதும், கொள்கையும், மானமுங்கெடின் உயிரை விடுவதும் பண்பாட்டுக் கூறுகளாகும் என்று பண்பாட்டின் உயர்வையும் அதன் முக்கியத்துவத்தையும் இங்கு குறிப்பிடத்தக்கனவாகும்"[7] அதுமட்டுமல்லாமல், நாகரீகம் இல்லாதவர்களிடமும் பண்பாடு இருக்க வாய்ப்பு உண்டு என்பதை தட்சிணாமூர்த்தி விளக்கியுள்ளார். இதன் கண் தனித்து வாழ்ந்த மனிதனை இணைத்து வைத்தது பண்பாடு தான் என்பதையும் நான் என்ற நிலையிலிருந்த நாம் என்ற நிலைக்கு மனிதனை உயர்த்தியதும் பண்பாடு என்பதையும் அறியத்தக்க ஒன்றாக அமைகிறது.

**பழக்க வழக்கங்கள்**

பண்பாட்டை போன்றே சாதி, இனம், சமூகம், நாடு என்று தத்தமக்கென தனித்ததொரு பழக்கவழக்கங்களும் நிலவுகின்றன. "பழக்கவழக்கம் என்பது ஒரு பொருட்பன்மொழி போல் கருதப்படுகிறது. பழக்கவழக்கம் என்பதில் இரு சொற்களும் இரு பொருள்களும் அடங்கியுள்ளன. சூழ்நிலையின் தேவைக்கு ஏற்ப தனிமனிதனிடம்

வேர் விடுகின்ற செயல்பாடுகளே பழக்கம் எனப்படும். பழக்கம் என்பதற்கு இணையான ஆங்கிலச் சொல் Habit.பல தனிமனிதர்களின் பழக்கங்கள் ஒரு குழுவின், இனத்தின் சமுதாயத்தின் தொடர்பான பழக்கங்கள் வளர்ந்து மரமாக ஏற்படும் பொழுது அது பழக்கம் என்ற நிலைக்கு உயர்கிறது. இதனை ஆங்கிலத்தில் 'Custom' என்பர். குறிப்பிட்ட பழக்கவழக்கங்கள் ஒரு சமுதாயத்தில் தொன்றுதொட்டுத் தொடர்ந்து வைரம் பாய்ந்த மரபாக நிலைபெறும் பொழுது மரபு என்னும் வடிவத்தை எய்துகிறது"[8] என்று எ.ஃ.ப் பாக்கியமேரி பழக்கவழக்கத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு சமுதாயத்தின் பண்பாடும், பழக்கவழக்கங்களும் அச்சமுதாயத்தின் கூட்டு முயற்சியால் விளைந்தது எனலாம். மேலும் ஒரு சமுதாயத்தினைப் படம்பிடித்துக் காட்டுவது அச்சமுதாயத்தில் காணப்படும் பழக்கவழக்கங்களேயாகும். இப்பழக்கவழக்கங்கள் தனிமனிதனின் நடத்தை, ஒழுக்கம், பண்பாடு முதலியவற்றை வெளிப்படுத்துவதை அறிய முடிகின்றது. "பழக்கம் என்பது ஒரு கற்கும் செயலாகும். இது தனிமனிதனிடம் இயல்பாக வந்தமைந்த நடத்தையைக் குறிப்பதாகும். பழக்கம் உணர்ச்சிக்கும் இன்றியமையாத கூறாக கருதப்படுகிறது. கனவுடன் தொடங்கிய செயல் நாளடைவில் நனவின்றி நிகழக்கூடியதாக ஆகிவிடும் செயலையே வழக்கம் என்பர்".[9]என்று கே.பழனிவேல் குறிப்பிட்டுள்ளார்.

சங்க காலத்தில் மக்கள் தங்களின் அன்றாட வாழ்க்கையில் நடைபெறுகின்ற செயல்களையே பழக்கமாகக் கொண்டுள்ளனர். நாளடைவில் அவையே வழக்கமாகவும் மாறிவிடுகின்றன. ஒரு தலைமுறையினரிடமிருந்து காலம் காலமாக இருக்கும் பழக்கங்களை அடுத்த தலைமுறையினரும் தம்முடைய வாழ்க்கையில் கடைப்பிடித்துள்ளனர். தந்தையின் ஒரு சில பழக்க வழக்கங்கள் தன் பிள்ளைக்கும், தாயின் ஒரு சில பழக்கம் தன் மகளுக்கும் ஜீன்கள் கடத்தி விடப்படுவதைப் பல அறிவியல் கூறுகள் தெரிவிக்கின்றன.

**விளக்கு ஏற்றுதல்**

சிறிய விளக்கில் எண்ணெய்யை ஊற்றி தீப்பற்ற வைப்பது என்பது ஆண்டுகுளுக்கு பொறுமை இல்லாத செயல். ஆனால் பெண்கள் இத்தகு செயல்களில் பொறுமையான குணத்துடன் ஈடுபட்டு வழிபாடு நடத்துகின்றனர் அல்லது வீட்டை அலங்கரிக்கின்றனர். இதனை,

**வெம்முனை அருஞ் சுரம் நீத்தி, கைம்மிக்கு**

**அகன் சுடர் கல் சேர்பு மறைய, மனைவியின்**

**ஒண் தொடி மகளிர் வெண் திரிக் கொளாஅலின்,**

**குறுநடைப் புறவின் செங்காற் சேவல்**

**நெடு நிலை வியல் நகர் வீழ்த்துணைப் பயிரும்**

**புலம்பொடு வந்த புன்கண் மாலை,(அகம்.பா.47: 8-13)**

விரிந்த சுடரையுடைய ஞாயிறு மேற்றிசைக்கண் மலையினைச் சார்ந்து மறைந்தது. ஒளி பொருந்திய வளையல்களை அணிந்த பெண்கள் இல்லங்களில் வெண்மையான திரியினைக் கொளுத்தி விளக்கை ஏற்றினர். குறுகுறுவென நடக்கும் நடையினையும் சிவந்த கால்களையும் உடைய புறவின் சேவல் உயர்ந்த மேல் மாடங்களைக் கொண்ட பெரிய வீடுகளில் தன்பால் அன்புகொண்ட பேடையை அழைத்தது. இங்ஙனமாகத் துன்பத்தைத் தரும் தனிமையைக் கொண்ட மாலைப் பொழுது வந்தது. நம் தலைவியோ, இம்மாலைப் பொழுதில் நம் தலைவன் இப்போது எவ்விடத்து உள்ளார் என்று நினைந்து கலங்கி, அளவு கடந்து அழுது கொண்டிருப்பாள் என்ற பாடலின் மூலம் மகளிர் விளக்கேற்றி வழிபட்டதனை அறியமுடிகிறது.

**நோன்பிருத்தல்**

நோன்பு இருந்து உணவு உட்கொள்ளும் பழக்கம் சங்க காலம் முதல் இன்றுவரை காணப்படுகிறது. இதனை,

**ஒள்இழை மகளிர் உயர்பிறை தொழூஉம்**

**புல்லென் மாலை, யாம்இவண் ஒழிய (அகம்,பா:239:9-10)**

பெண்கள் மாலைக் காலத்தில் சந்திரனை வணங்குவர் என இப்பாடலில் நோன்பிருக்கும் பழக்கத்தைக் கூறுகின்றது. மேலும், பெண்கள் பூக்களைச் சூடிக் கொள்வதில் எல்லையற்ற மகிழ்ச்சியினை உடையவர்கள். குறிஞ்சிப் பாட்டில் தலைவி 99 வகையான பூக்களைப் பறித்து பாறையில் அடுக்கிய செய்தி பெண்களுக்குப் பூக்களின் மீதுள்ள விருப்பத்தை எடுத்துரைக்கிறது. இதனை,

**வலம் சுரி மராஅத்துச் சுரம் கமழ் புது வீச்**

**சுரி ஆர் உளைத் தலை பொலியச் சூடி (அகம்,பா:83:1-2)**

என்ற பாடலடிகளில் பாலைநில வழியில் பூத்துக் குலுங்கிக் கொண்டிருக்கின்ற வெண்கடம்பின் புதிய மலர்களைச் சுருள் கொண்ட தங்களது தலையிலே அவ்வழி செல்வோர் சூடுவதாகச் செய்தி இடம்பெறுவதைக் காணமுடிகிறது.

**விருந்தோம்பல்**

இல்லறத்தில் மிக முக்கியமான பண்புகளில் ஒன்று விருந்தோம்பல். விருந்தோம்பும் பெருவாழ்க்கையினை மகளிர் விரும்பினர். போக்குவரத்து வசதிகளும், காசு கொடுத்து அறுசுவை உணவு கொள்ளும் உணவுச் சாலைகளும் இல்லாத அக்காலத்தில் விருந்தோம்பல் பண்பு சிறந்த இல்லறமாக மேற்கொள்ளப்பட்டது.

பண்டைக்காலத்தில் வீடு தேடி வரும் புதியவர்களை விருந்தினர் எனப் போற்றப்பட்டனர். அவர்களை அகமும், முகமும் மலர இனிதே வரவேற்று விருந்தளித்தனர். இதனை,

**வறுங் கை வம்பலர்த் தாங்கும் பண்பின்**

**செறிந்த சேரிச் செம்மல் மூதூர்** **(அகம்,பா:15:6-7)**

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. மேலும், புதிய மன்னர் பலரும் அறிய அணிகலன்களை திறையாகக் கொண்டு வந்து குவித்தனர். நம் அரசனும் கொடிய பகைமை தணியப் பெற்றான். இதனை,

**விருந்தின் மன்னர் அருங்கலம் தெறுப்ப**

**வேந்தனும் வெம்பகை தணிந்தனன்** **(அகம்,பா:54:1-2)**

என்ற பாடலடிகள் மூலம் விருந்தோம்பலைப் பற்றி அறிய முடிகின்றது.

தமிழரின் பண்பாட்டில் சிறந்த இடத்தினைப் பெற்று வரும் விருந்தோம்பல் பண்பானது பண்டைக்காலம் முதல் தற்காலம் வரை நிலவி வருகின்றது. விருந்தோம்பல் என்ற பண்பால் தான் பிறநாட்டு மக்களையும் தமிழர் திரும்பிப் பார்க்க வைக்கின்றனர். விருந்து என்றாலே “புதுமை’’என்று பொருள். புதிதாகத் தம் வீட்டிற்கு வருகின்ற விருந்தினர்களை இனிய முகமலர்ச்சியோடு கணவன் மனைவி இருவரும் சேர்ந்து உபசரித்தலே விருந்தோம்பல். இதனை தொல்காப்பியர்,

**விருந்தே தானும்**

**புதுவது புனைந்த யாப்பின் மேற்றே**[10]

என்னும் நூற்பா மூலம் சங்க கால மகளிரின் பண்புகளில் உபசரித்தல் என்பது ஒரு தலையாய பண்பாக இருந்தமையை சுட்டிக் காட்டுகிறார்.

**இலக்கியங்களில் விருந்து**

“மருந்தே ஆயினும் விருந்தோடு உண்’’ என்பார் ஔவையார். அதனை தான் வீடுவாசலேடு இருந்து செல்வங்களைப் பெற்று, பாதுகாத்து மனைவி மக்களுடன் குடும்பம் நடத்துவதன் நோக்கமெல்லாம், பசியோடு தம் வீட்டினை நாடி வருகின்ற விருந்தினர்களை மனம் கோணாமல், முக மலர்ந்து உபசரிக்கின்ற விருந்தோம்பலில் தான் பயன் உள்ளது. அவ்வாறு உபசரிக்கவில்லையெனில்,

**மோப்ப குழையும் அனிச்சம் முகம் திரிந்த**

**நோக்கக் குழையும் விருந்து**[11]

என்னும் குறளில், விருந்தினர்கள் உள்ளமும் முகமும் வாடிவிடுவர் என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

**முறுவல் இனிதுரை கால் நீர் மனையாய்**

**கிடக்கையோடு இல்லைந்தும் என்ப தலைச் சென்றார்க்கும்**

**ஊனோடு செய்யும் சிறப்பு**[12]

என்ற ஆசாரக்கோவை பாடல் அடிகள் எடுத்தியம்புகின்றது. மேலும்,உணவு கொடுத்தலின் பெருமையை உலகிற்கு மணிமேகலை,

**மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்**

**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**[13]

என்ற பாடல் அடிகள் எடுத்துக்காட்டுகின்றன.

வந்த விருந்தினரை, உண்பித்து மிகுந்தனை உண்பவனது நிலத்தில் தானே செய்து விதைக்கவும் வேண்டுமா? வேண்டியதில்லை. பலரும் உதவுவர் என்று புலவர் குழந்தையும் வந்து விருந்தினரைப் போற்றியுள்ளார்.

> **“விருந்தினர் உண்டது வேறு மிகுந்த உணவை உண்டு மகிழும் நல்ல அறவாழ்வுடையன் தன் நிலத்தில் விதையையும் கூட விதைக்க விரும்புவானோ, அதனையும் விருந்தினர்க்கே கொடுத்து விடுவான். இளையான்குடி மறவர், தம் இல்லம் வந்த சிவனடியார்க்கு அரிசி இல்லாமையால் விதை நெல்லைக்கு கொண்டு சமைத்து உணவு படைத்தார்”**[14]

என அறிஞர் மு.வரதராசனார் உரை விளக்கம் தருகிறார்.

பெண்களுக்கு நாணம் எவ்வாறு கூடவே பிறந்தது போல, அதைப் போன்றே விருந்தோம்பலும் அவர்களுக்கே உரிய பண்பாக அமைந்துள்ளது.

> **“தமிழ்ப் பெண்களின் குருதி ஓட்டத்தில் கலந்திருக்கும் உயிர் பண்புகளுள் ஒன்றாக விருந்தோம்பல் அமைகிறது.”**[15]

விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் நினைக்கின்றனர்.

> **“உறவினர் வேறு, விருந்தினர் வேறு, முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். புதியவர்கள் எவராயினும் சரி, எந்நாட்டினராயினும் சரி, எம்மொழியினர் ஆயினும் சரி அவர்களை வரவேற்று உபசரிப்பது தமிழர் பண்பு”**[16]

**மனைவியின் விருந்தோம்பல் பண்பு**

பண்டைத் தமிழர்கள் தமக்கு எத்துணை வறுமை வந்தாலும், தம் வீட்டை நாடி வருகின்ற விருந்தினர்களிடம் அன்பாக வரவேற்று விருந்து உபசரிப்பார்கள். வேதியருக்குப் பிள்ளைக் கறியினை முகமலர்ச்சியோடு உபசரித்த சிறுதொண்டரைப் போல் மனைவியானவள் கணவனுடனிருந்த விருந்து உபசரிப்பார்கள். ஓர் ஆண் தன் வாழ்வில் தனியாக இருந்தால் யாரும் அவனிடம் உணவு நாடி செல்ல மாட்டார்கள். ஏனெனில் அவனே தனிமையில் இருக்கின்றானே என்று எண்ணி அவனிடம்செல்வதை நிறுத்திக் கொள்வார்கள். அதே போல் ஒரு பெண் தனியாக இருந்தாலும் யாரும் அவளை அணுகமாட்டார்கள்.

கண்ணகி தன் வீட்டில் தன்னந்தனியாளாக இருநத்தினாலேயே வீட்டிற்கு விருந்தினர் யாரும் வரவில்லை என்று கோவலனிடம் கூறியதை,

**அறவோர்க்கு களித்தலும் அந்தணர் ஓம்பலும்**

**துறவோர்க்கு எதிர்த்தலும் தொல்லோர் சிறப்பின்**

**விருந்தெதிரக் கோடலும் இழந்த என்னை**[17]

என்ற பாடலில், தன் கணவன் அருகில் இல்லாமையால், ஞானிகள் பெரியவர்கள் வரவில்லை. இதனைக் காலம் தான் விருந்தோம்பாமல் வீணாகி விட்டேன் அதற்காகக் கவலை கொள்கிறேன் என்று கூறுவதன் மூலம் அறிய முடிகிறது.

கணவன் மனைவி வீட்டிலேயே இருந்து வாழ்வது உடல் இன்பத்திற்காக அல்ல. விருந்தினரை உபசரிப்பதற்காகும். விருந்தோம்பலின் இன்றியமையாமையக் குறித்தே திருவள்ளுவரும்,

**வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி**

**மிச்சில் மிசைவான் புலம்**[18]

என்ற குறளில் வெளிப்படுத்துகிறார்.

கணவன் துணையோடு மனைவி விருந்தோம்பல் நிகழ்த்தியதை 'இல்வாழ்க்கைத் தொழில்' என அகநானூறு கூறுகிறது

............**நாளும்**

**மனைமுதல் வினையொடும் உவப்ப,**

**நினை - மாண் நெஞ்சம்! -நீங்குதல் மறந்தே.(அகம்.பா.51:12-14)**

பொருள் ஈட்டுதல் காரணமாக தலைவியைப் பிரிந்து தலைவன் சென்றுள்ள இடத்தில் 'மனைமுதல் வினை' என்ற சொல்லாடல் விருந்தோம்பலைக் குறிக்கிறது. எனவே, இது கணவன் மனைவி இணைந்து நிகழ்த்தும் விருந்தோம்பல் பண்பாகக் கூறப்படுகிறது.

**ஊடலைத் தீர்க்கும் விருந்து**

சங்க காலத்தில் கணவன் மனைவி இருவருக்குள் சில சமயத்தில் ஊடல் ஏற்படும்.தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைவி வற்புறுத்தும் தோழிக்குச் சொல்லியது.

**காவிரிப் படப்பைப் பட்டினத் தன்ன**

**செழுநகர் நல்விருந்து அயர்மார், ஏமுற**

**விழுநிதி எளிதினின் எய்துக தில்ல (அகம்.பா.205, 12-14)**

என்ற பாடலில், காவிரிப்பூம்பட்டினத்தைப் போன்ற வளஞ்சான்ற நம் இல்லத்தில், நம்பால் வரும் விருந்தினரை மகிழ்ச்சியுடன் பேணுதற்குப் பாலையைக் கடந்து சென்ற நம் தலைவர் சிறந்த பொருளை எளிதிற் பெற்று மீள்வாராக என்று தலைவி கூறுகிறாள். சங்க காலத்தில் விருந்தினரை உபசரித்தலின் போது, தலைவன் இருந்து ஆற்ற வேண்டிய அறத்தைத் தான் ஒருவளாக இருந்து உபசரித்துள்ளமையும், தலைவனின் செயல்களுக்கு இசைந்து நடப்பவளாகவும் அக்காலப் பெண்கள் திகழ்ந்துள்ளனர்.

**கலைகள்**

சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம் என்பது பழமொழி. கலைகள் ஒரு நாட்டின் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் எடுத்துக் காட்டுகின்றன. கலைகள் அறுபத்து நான்கு என்று கூறப்படுகின்றன. பண்டைய தமிழ் மக்கள் கலைகளில் மிகுந்த ஆர்வமும், பயிற்சியும் உடையவராகவும் திகழ்ந்துள்ளனர். சங்க கால மக்கள் தம் வாழ்வில் கூத்துக்கலை, இசைக்கலை,ஓவியக்கலை போன்றவற்றில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர். மனிததன்மைற்ற உயிரினங்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவது கலையாகும். மக்களின் மனத்திற்கும் மகிழ்ச்சி அளிக்ககூடியவையும், மன ஒருமைப்பாட்டை (Meditation) உண்டாக்குவதும் கலையே.

“கலை'' என்னும் தமிழ்ச் சொல்லுக்கும் இணையான ஆங்கிலச் சொல் 'Art'' என்பதாகும். 'Art' என்பதற்கு 'திறன்' என்று பொருள்படும். கலை படைப்புத்திறனை உள்ளடக்கியதாகும். கலை படைப்புகளுக்கு உணர்ச்சி இன்றியமையாததாகும். இசை, சிற்பம்,ஓவியம், நடனம் போன்ற கலைகள் உணர்ச்சியின் அடிப்படையில் உருவாகின்றன. “கலை'' என்னும் சொல் சங்க இலக்கியத்தில் ஏறக்குறைய 44 இடங்களில் பயின்று வந்துள்ளது. அவற்றில் 18 இடங்களில் “குரங்கு'' என்கிற பொருளிலும், 25 இடங்களில் “மான்'' என்ற பொருளிலும், ஓர் இடத்தில் “மேகலை'' என்னும் பொருளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. கலை என்னும் சொல் “நுண்கலைகள்'' என்னும் பொருண்மையில் ஆளப் பெறவில்லை. சிலப்பதிகாரத்தில் தான் முதன்முதலில் இப்பொருண்மையில் “கலை'' எனும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**இசைக்கலையும் பண்பாடும்**

சங்கத் தமிழானது இயல்,இசை, நாடகம் என மூன்று வகையாகும். இதில் இசை என்பது தமிழிசையாகும். பழந்தமிழ் மக்கள் வேறு இன மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்வதற்கு முன்பே இசையும் அதோடு இணைந்த கூத்தும் உருவாகி வளத் தொடங்கின. பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் பண்டைத் தமிழரின் இசைக்கலையை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன. இசை உணர்வின் எழுச்சியால் இசைப்பாடல்கள் தோன்றுகின்றன. இசையும் கூத்தும் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே செவ்விய கலைகளாக விளங்கியுள்ளன. மனிதனின் மனதில் உள்ள துன்பங்களை எல்லாம் மறக்கச் செய்யும் ஆற்றல் உடையது இசையே. உயர்திணை முதல் அ..றிணை வரையிலான அனைத்து உயிரினங்களையும் கவர்ந்திழுக்கும் அளவற்ற ஆற்றல் இசைக்கு உண்டு. இதனை,

**தெய்வம் உணாவே மாமரம் புள்பறை**

**செய்தி யாழின் பகுதியோடு தொகைஇ**

**அவ்வகை பிறவும் கருவென மொழிப**[19]

என்னும் தொல்காப்பிய நூற்பா விளக்குகிறது.

போர்க்களத்தில் களம் பாடுநருடன் இன்னிசைக கருவி இசைப்போர் விரைவாக இசைக்கும், ஆம்பலென்னும் பண்ணையுடைய குழல் இசையொலித்தது போல தலைவனைப் பிரிந்த தலைவி வாய்விட்டு அழும் காட்சியை,

**இம்மென் பெருகளத்து இயலர் ஊதும்**

**ஆம்பல் அம்குழலின் ஏங்கி**[20]

என்ற பாடல் அடிகள் மூலம் அறிய முடிகிறது. பொது இடத்திற்குச் சென்றாலும் பரத்தையர் தம் நிலையைப் பற்றி கவலைப்படாமல் இசைக்கருவிகளை இசைப்பதும் ஆடுவதுமாக ஆண்களைக் கவருவதும் சங்க காலத்தில் நிகழ்ந்துள்ளது. இதனை,

**மண் கனை முழவொடு மகிழ்மிகத் தூங்க,**

**தன் துறை ஊரன் எம் சேரி வந்தென (அகம்,பா:76:1-2)**

முழவை இசைத்துக் கொண்டு பேசிச் சிரித்து மகிழும் தன்மை இயல்பான குடும்பப் பெண்களுக்கு இல்லை. ஆனால் பரத்தையர் பொது இடத்திலும் இவ்வாறு இருந்துள்ளனர். பரத்தையர் யாழ் இசைப்பதிலும் வல்லவராய்த் திகழ்ந்துள்ளமையை சான்றுகள் வழி அறிய முடிகின்றது.

**ஒண்தொடி மகளிர் பண்டையாழ் பாட,**

**ஈர்ந்தண் முழவின் எறிகுணில் விதிர்ப்ப (அகம்,பா:186:10-11)**

நள்ளிரவில் யாழிசையால் தலைவனை வசப்படுத்தியுள்ளனர். பாண் மக்களைப் போல பரத்தையரும் இசைக்கலையில் வல்லவர்களாகத் திகழ்ந்துள்ளனர்.

**ஓவியக் கலை**

ஓவியம் கண்ணையும், கருத்தையும் கவரக்கூடியது. ஆயிரம் வார்த்தைகள் சொல்ல முடியாத ஒன்றை, ஒரு ஓவியம் உணர்த்தி விடும். ஆரம்பக் காலத்தில் மனிதன், விலங்கு, பறவை, மரம், செடி, தாம் வேட்டையாடிய விலங்கினங்கள் ஆகியவற்றை ஓவியமாகப் பாறைகளிலும்,குகைகளிலும் தீட்டி வைத்தான். ஆகவே, ஓவியக்கலையின் வளர்ச்சிக்கு வித்தாக அமைந்தது எனலாம். எந்த ஒன்றையும் கலைக்கண்ணோட்டத்துடனும கற்பனையுடனும் காணும் போது அவற்றைப் பற்றிய ஏதோ ஒரு கருத்து நம் மனதில் தோன்றுவது இயற்கையே. அதுவே பல்வேறு கலையாகப் பரிணமிக்கிறது. பண்டைத் தமிழ் ஓவியங்கள் பெரும்பான்மை அவர்

ஓவியங்களே. சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பே நமது நாட்டில் ஓவியக்கலை சிறப்பை பெற்றிருந்ததனை சங்க இலக்கியங்கள் வெளிப்படுத்துகிறது.

ஓவியத்தின் முகத்தில் அதன் உள்ளக் குறிப்புத் தோன்றுமாறுபோல என் முகக் குறிப்பினால் பிரிவாகிய என் கருத்தினை யான் அறியா வண்ணம் அறிந்து கொண்டாள். இதனை,

**ஓவச் செய்தியின் ஒன்று நினைந்தது ஒற்றி (அகம்.பா.5: 20)**

என்ற பாடல் அடி மூலம் அறிய முடிகிறது. மேலும், சுவரில் சித்திரமாக எழுதப்பட்ட அழகிய கடவுள் அவ்விடம் விட்டு நீங்கிச் சென்றமையால், அவ்விடம் பொலிவிழந்து காணப்பட்டது. இதனை,

**எழுது அணி கடவுள் போகலின், புல்லென்று (அகம்.பா.167:15)**

என்ற பாடல் அடிகள் மூலம் அறிய முடிகின்றது.

தற்காலங்களில் மகளிர் பல வகையான வண்ணப்பூக்களையும், அழகிய கண்ணாடி போன்று கவர்கின்ற தன்மை உடைய துணிகளை உடுத்துவதை காண முடிகிறது.

அக்காலத்தில் மாதவி என்னும் நாடக மகள், பல கலைகளைக் கற்றவள். அவற்றில் ஓவியக்கலை கற்று சிறந்தவள் என்பதை மணிமேகலையில் கூறப்படுகிறது. இதனை,

**ஓவியச் செந்நூல் உரைநூற் கிடக்கையும்**

**கற்றுத் துறை போகிய பொற்றொடி மங்கை**[21]

என்ற பாடல் அடிகள் உணர்த்துகிறது.

**கூத்துக்கலை**

நாள்தோறும் பகலில் உழைத்து வீடு திரும்பும் மக்கள் இரவில் உணவு உண்ட பின் அன்றைய களைப்பைக் போக்க தெருவின் முச்சந்திகளில் கூத்து நடத்தினர். ஏதேனும் ஒரு தளுத்து (அ) நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு அது அமையும் பன்னிரண்டு வகை கூத்துக்கள் மாதவி ஆடினாள் என்று சிலப்பதிகாரம் கூறுவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

**குரவைக் கூத்து**

பகல் நேரத்தில் தலைவன் தலைவியுடன் இருந்து விட்டு, தன் ஊர்க்கு செல்லும் போது, தோழி தலைவனிடம் நாங்கள் குறவர் மகளிர். எம்மூர் மக்கள் தலைவனை ஏற்றுக்கொள்ளினைக் கொடுப்பார்கள். வேங்கை மரமுற்றத்தில் குரவைக் கூத்தும் நிகழும். அதனைக் கண்டு கழித்துச் செல்க என்பதனை,

**குறவர் மகளிரேம் குன்று கெழு கொடிச்சியேம்**

**வாங்கு அமைப் பழுநிய நறவு உண்டு**

**வேங்கை முன்றில் குரவையும் கண்டே**[22]

என்னும் பாடலில், தலைவன் அங்கே தங்கி அக்கூத்தினைக் கண்டு மகிழ்ந்து, அவர்களிடம் கை கொடுத்து வாழ்த்தியதையும் எடுத்தியம்புகிறது.

முற்றத்திலே குறவர்கள் தம் வீட்டில் உள்ள ஆடுதலின் முதிர்ச்சி பெற்ற மகளிரோடு குரவைக் கூத்து ஆடுவர். இதனை,

**வியல்அறை வரிக்கும் முன்றில், குறவர்**

**மனைமுதிர் மகளிரொடு கரவை தூங்கும் (அகம்.பா.232:9-10)**

என்ற பாடல் அடிகள் மூலம் குரவைக் கூத்தை பற்றி அறிய முடிகின்றது.

**ஒப்பனைக் கலை**

இன்றைய நவீன வளர்ச்சிக்கேற்ப மகளிரைப் பெரிதும் கவர்ந்திழுக்கும் கலைகளில் ஒன்று ஒப்பனைக் கலை. அக்கலை சங்க கால மக்களிடையே இருந்துள்ளமையும், அவற்றிற்கு பெண்கள் முக்கியத்துவம் கொடுத்துள்ளனர் என்பதைப் பழந்தமிழ் இலக்கணப் பெருந்தகையாகிய தொல்காப்பியர், "உருவு நிறுத்த காமவாயில்'' என்ற அழகினைச் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

**ஆடைகள்**

"ஆடை இல்லாத மனிதன் அரை மனிதன்'' "ஆள் பாதி ஆடை பாதி'' என்பன தமிழகத்தில் வழங்கும் பழமொழிகள். சங்க இலக்கியமான தொல்காப்பியத்திலும் திருக்குறளிலும் உடை பற்றிய குறிப்புகள் வருகின்றன. இதனை,

**"உடை பெயர் பெயர்த்துடுத்தலொடு"**[23]

என்ற தொல்காப்பிய அடிகள் உடைகள் பற்றிப் பேசப்படுகின்றன. மேலும் நட்புக்கு இலக்கணம் கூற வந்த தெய்வப் புலவர் திருவள்ளுவர்

**உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**

**இடுக்கண் களைவது ஆம் நட்பு**[24]

ஆடை நெகிழ்ந்த உடனே கை தானாக வலியச் சென்று உதவுதல் என்று குறிப்பிடுவதன் மூலம அறியலாம். தமிழரின் உடை பண்பாட்டின் வயது மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலானது என்பது உறுதியானது. தொல்காப்பியர் காலத்திலேயே இடுப்பில் உடுத்துகிற ஆடையை நெய்து உடுத்தியிருக்கின்றனர். இலை, தழை உடுத்தயிருந்தால் தொல்காப்பியத்தில் உடை என்று சொல்லியிருக்கமாட்டார்கள்.

ஆகவே, தமிழரின் ஆடைக்கு வயது மிக மிக பழமையானது என்பதை உணர்த்துகிறது.

**தொழில்கள்**

சங்க கால மகளிர் அவரவர் வாழ்கின்ற நில அமைப்பிற்கு ஏற்ப, அங்கு விளைகின்ற பொருட்களைக் கொண்டும், அவற்றை மற்ற நிலங்களுக்கு கொண்டு சென்று விற்றுள்ளனர். தமது வீட்டு வருவாயைப் பூர்த்தி செய்து கொள்ளும் பாங்கிற்கு சங்க கால மகளிர் பெரிதும் முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். தொழிலானது எல்லோரிடத்தும் அவர்களின் வாழிடங்கள், அவர்களின் சூழ்நிலைகளைப் பொறுத்தே அமைவதால் தொழில் அனைவருக்கும் உகந்த ஒன்றாக அமைந்துள்ளது. வள்ளுவர் இக்கருத்தினை,

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொல்லா**

**செய்தொழில் வேற்றுமை யான்**[25]

என்ற குறளின் மூலம் உணர்த்துகிறார்.

**குழந்தை வளர்ப்பு**

பெண்களின் கடமைகளில் மிக முதன்மையானதாகக் கூறப்படுவது குழந்தை வளர்ப்பு முறை. தாயின் மன நிலையினைப் பொறுத்தே குழந்தையின் எதிர்காலம் நிர்ணயிக்கப்படுகிறது. குழந்தை பேறு இல்லாத மனை விளக்கம் பெறளாத இருண்ட மனையாகவே கருதப்படும். எவ்வகை செல்வங்களும், சிறப்புகளும் இருப்பினும் குழந்தை செல்வத்தினையே இலக்கியங்கள் சிறப்பாகப் போற்றுகின்றன. இதனை,

**இம்மை உலகத்து இசையொடும் விளங்கி,**

**மறுமை உலகமும் மறு இன்று எய்துப,**

**செறுநறும் விழையும் செயிர் தீர் காட்சிச்**

**சிறுவர்ப் பயந்த செம்மலோர்’ (அகம்.பா.66:1-4)**

என்ற பாடலில் குழந்தை வளர்ப்பு பற்றி காணப்படுகின்றது.

**கணவரைப் பேணுதல்**

தனது நல்ல பண்பினால் முதன்முதல் தான் கண்ட நாளினும் பின்பு எந்த நாளினும் பெரிதும் அருள் செய்வான். இதனை,

**கனவினும் பிரிவு அறியலனே; அதன்தலை**

**முன்தான் கண்ட ஞான்றினும்**

**பின்பெரிது அளிக்கும் தன் பண்பினானே (அகம்.பா.178:20-22)**

என்ற பாடல் மூலம் அறிய முடிகிறது. மேலும், இடைப்பட்ட வண்டுகள் நீங்குமாறு இன்று யான்பெற்ற செறிந்த மயக்கமும், நீங்காத காதலும் முதல்நாளில் பெற்றது போன்றே அமையக் காண்கிறேன் என்று கூறுவதனை,

**வண்டுஇடைப் படாஅ முயக்கமும்,**

**தண்டாக் காதலும், தலைநாள் போன்மே!(அகம்.பா.332:14-15)**

என்ற பாடல் உணர்த்துகின்றது.

புதுமையாக இயற்றிய திறத்தைக் காட்டினும், எம் தலைவன் எம்மைத் திருமணம் செய்த நாளினும் இப்பொழுது பெரிதும் இனியனாக விளங்குகின்றான். இதனை,

**புதுவது புனைந்த திறத்தினும்**

**வதுவை நாளினும் இனியனால் எமக்கே (அகம்.பா.352:16-17)**

என்ற பாடல் மூலம் அறிய முடிகின்றது.

**மீன் விற்றல்**

பரதவ மகளிர் மீன்களைப் பறவைகள் கவராமல் இருப்பதற்காக காவல் காத்துள்ளனர். இதனை,

**நிணச்சுறா அறுத்த உணக்கல் வேண்டி**

**இனப்புள் ஒப்பம்[26]**

என்னும் நற்றிணைப் பாடல் அடிகள் தெளிவுப்படுத்துகின்றன.

கயிறு கட்டப் பெற்ற நுண்ணிய தூண்டிற் கோலினால் மீனைப் பிடிக்கும் பாண்மகள், நீரை அடுத்த கரையில் பிடித்த வரால் மீனை உண்பிப்பாள். இதனை,

**நாண்கொள் நுண்கோலின் மீன்கொள் பாண்மகள் -**

**தான்புனல் அடைகரைப் படுத்த வராஅல் (அகம்.பா.216:1-2)**

என்ற பாடல் மூலம் அறிய முடிகிறது.

**ஆடை வெளுத்தல்**

சங்க கால மக்கள் தூய்மையான ஆடை அணிந்துள்ளனர். இதற்குப் பெருந்துணையாய் இருந்தவர் ஆடை வெளுக்கும் தொழிலில் ஈடுபட்ட பெண்கள். இப்பெண்கள் தொழில் செய்வதில் அதிக கவனத்தோடும், நயத்தோடும் ஆடைகளை நன்றாக ஆராய்ந்து பார்த்த பிறகுதானை அவற்றை வெளுத்தனர். ஆடைகளிலே

ஊட்டப்பெற்ற கஞ்சிப் பசையினைக் கரைத்து விடும் மெல்லிய விரல்களையும் பெரிய தோள்களையும் உடைய ஆடை வெளுப்பவள், அக்கஞ்சிப் பசையினை நீர்த்துறையின்கண் அலசிவிட்டாற் போன்ற தூய மயிரினையுடைய அன்னங்கள் மகிழும். இதனை,

**பசை சொல் மெல் விரல், பெருந் தோள், புலைத்தி**

**துறை விட்டன்ன தூமயிர் எகினம் (அகம்.பா.34, 11-12)**

என்ற பாடல் அடிகள் மூலம் அறிய முடிகிறது. மேலும், கஞ்சிப் பசை கொண்ட விரல்களையுடைய வண்ணாத்தி நீண்ட நேரம் கஞ்சி ஊட்டிய அழகிய ஆடை விளங்குகின்ற பொன்வடம் அணிந்த அல்கல்தடத்து ஆகும். இதனை,

**பசைவிரல் புலைத்தி நெடிதுபிசைந்து ஊட்டிய**

**பூந்துகில் இமைக்கும், பொலன்காழ் அல்குல்,(அகம்.பா.387:6-7)**

என்ற பாடல் அடிகள் மூலம் அறியலாம்.

**உப்பு விற்றல்**

பெரிய கடலிடத்து மீன் பிடிக்கும் தொழிலையுடைய சிறிய குடிசையில் வாழும் பரதவ மக்கள், பெரிய உப்பங்குழியாகிய வயலிலே வெண்ணிறக் கல் உப்பினை உழாமலேயே விளைவிப்பர். இதனை,

**பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்**

**இருங்கழிச் செறுவின் உழாஅது செய்த**

**வெண்கல் உப்பின் கொள்கை சாற்றி, (அகம்.பா.140:1-3)**

என்ற பாடல் அடிகள் மூலம் அறிய முடிகிறது. மேலும் நெல்லும் உப்பும்ஒரே விலையாகும். வாங்கி கொள்வீராக என்று சேரிதோறும் கூறிவிற்கும் அழகிய வளைந்த கொப்பூழையும், மூங்கில் போன்ற தோளினையும் உடையாய். இதனை,

**“நெல்லும் உப்பும் நேரே: ஊரீர்!**

**கொள்ளீ ரோ”எனச் சேரிதொறும் நுவலும்,**

**அவ்வாங்கு உந்தி, அமைத்தோ ளாய்!நின் (அகம்.பா.390: 8-10)**

என்ற பாடல் அடிகள் மூலம் அறியலாம்.

**கள் விற்றல்**

நெடிய மலைச் சிகரங்களின் உயர்ந்த உச்சியின் கண், இடிக்கும் இடிபோல் முழங்கும். அத்தகைய கடத்தற்கரிய பாலை நிலத்தில் இரங்கத் தக்கவளாகிய என் மகள் அயலானாகிய அத்தலைவனுடன் சென்றுவிட்டனள் என்று கண்டோர் கூறுவர் இதனை,

**உயர்சிமை நெடுங்கோட்டு உரும் என முழங்கும்**

**"அருஞ்சுரம் இறந்தனள்'' என்ப - பெருஞ்சீர்(அகம்.பா.145:9-10)**

என்ற பாடல் அடிகள் மூலம் அறிய முடிகின்றது. மேலும், கள்விற்கும் மகளிர் தாம் தங்கிய மனையிடத்துக் கொண்ட, அகன்ற வாயையுடைய பாளையின் குவிந்த முனை சொரிந்த பன்னாடையால் அரக்கப் பெற்ற நிறமுடைய கள்ளின் வண்டலைப் போரை விரும்பி ஆரவாரிக்கும் சிவந்த கண்களையுடைய வீரர்கள் நிறையக் குடித்தனர். இதனை,

**அரியற்பெண்டிர் அல்கிற் கொண்ட**

**பகுவாய்ப் பாளைக் குவிமுலை சுரந்த**

**அரிநிறக் கலுழி ஆரமாந்தி,**

**செருவேட்டு, சிலைக்கும் செங்கண் ஆடவர்(அகம்.பா.157:1-4)**

என்ற பாடல் அடிகள் மூலம் அறியலாம்.

**சமையல் திறம்**

புதுமணப் பெண்ணானவள், உணவு மிகுந்த திருமண வீட்டில், பல கொண்டைகளையுடைய அடுப்பின்கண் பாலை உலையாக வார்ப்பாள். கூழையாகிய கூந்தலையும், சிறிய வளையல்களையும் உடைய இளம் பெண்களுடன், பெரிய வயலிடத்து விளைந்த நெல்லின் வளைந்த கதிரை முறித்துக் கரிய நிறமுடைய வயிரம் பாய்ந்த உலக்கையால் பச்சை அவலை இடிப்பாள். இதனை,

**புதுமண மகடூஉ அயினிய கடிநகர்ப்**

**பல்கோட்டு அடுப்பில் பால்உலை இரீஇ,**

**கூழைக் கூந்தற் குறுந்தொடி மகளிர்**

**பெருஞ்செய் நெல்லின் வாங்குகதிர் முறித்து,**

**பாசவல் இடிக்கும் இருங்காழ் உலக்கைக் (அகம்.பா.141:14-18)**

என்ற பாடல் அடிகள் மூலம் அறிய முடிகிறது. மேலும் மண்ணாற் செய்த பானையில் பண்ணைக் கீரையின் வெண்ணிறப் பழத்தின் அரிசியைப் போன்ற இருக்கும் அவ்வரகரிசியை இட்டுச் சுனைநீரை ஊற்றி, கற்களை அடுக்கி அமைத்த அடுப்பில்

உலை ஏற்றினர். கொன்றைப் பூந்தாது போன்ற சோற்றை ஆக்கினர். அச்சோற்றினைப் பாலுடன் கூட்டி வழிச் செல்வார்க்கு அளித்து அவர்தம் அழிபசி போக்கி அகம் மகிழ்ந்தான். இதனை,

**வரிஅணி பணைத்தோள் வார்செவித் தன்னையர்**

**பண்ணை வெண்பழத்து அரசி ஏய்ப்ப,**

**சுழல்மரம் சொலித்த தளகுஅலை வெண்காழ்**

**தொடிமாண் உலக்கை ஊழின் போக்கி,**

**உரல்முகம் காட்டிய சுரைநிறை கொள்ளை,**

**ஆங்கண் இருஞ்சுனை நீரொடு முகவா,**

**களிபடு குழிசிக் கல்அடுப்பு ஏற்றி,**

**இணர்ததை கடுக்கை ஈண்டிய தாதின்,**

**குடவர் புழுக்கிய பொங்குஅவிழ்ப் புன்கம்,**

**மதர்வை நல்ஆன் பாலொடு,(அகம்.பா.393 : 8-17)**

என்ற பாடல் அடிகள் மூலம் அறியலாம்

**மக்கட்பேறு**

தேமல் படர்ந்த அழகிய வயிற்றையினையுடைய தூய அணிகலன்களை அணிந்த மகனைப் பெற்றெடுத்த மகளிர் நால்வர் கூடி நின்று வாழ்த்தினர். இதனை,

**புதல்வற் பயந்த திதலை அவ் வயிற்று**

**வால் இழை மகளிர் நால்வர் கூடி, (அகம்.பா.86:11-12)**

என்ற பாடல் அடிகள் மூலம் அறிய முடிகிறது. மேலும், தலைவன் வந்து நின்ற தன்மை, தெய்வத் தன்மை பொருந்திய கற்புடன், குடிக்குச் சிறப்பினைத் தரும் மகனைப் பெற்ற தலைவிக்கு மட்டும் அன்று, எனக்கும் இனிமையைத் தந்தது. இதனை,

**கடவுட் கற்பொடு குடிக்கு விளக்கு ஆகிய**

**புதல்வற் பயந்த புகழ்மிகு சிறப்பின்**

**நன்ன ராட்டிக்கு அன்றியும், எனக்கும்**

**இனிதுஆ கின்றால்; (அகம்.பா.184 : 1-4)**

என்ற பாடல் அடிகள் மூலம் அறிய முடிகிறது.

**விளையாட்டுக்கள்**

சங்க கால மகளிர் தம் தொழிலில் ஈடுபட்ட நேரம் தவிர, மற்ற நேரங்களில் தம்முடைய சோம்பலைத் தீர்ப்பதற்கும் தங்களின் திறனை வளர்த்துக் கொள்வதற்கும், பொழுதுபோக்கிற்காகவும், பல வகையான விளையாட்டுக்களில் ஈடுபட்டுள்ளனர். பெண்கள் தங்கள் வளர்ச்சிக்கேற்ப விளையாட்டுக்கள் விளையாடினர். இவற்றில் ஓரை, ஊஞ்சல், சிற்றில், நீராடல் போன்றவை குறிப்பிடத்தக்கவை. விளையாட்டு என்னும் சொல்லுக்கு விரும்புகின்ற ஆட்டம், இன்னம் விளைவிக்கும் ஆட்டம் என்றும் விதிகளைக் கொண்டு ஆகும் ஆட்டம் என்னும் சிலர் பொருள் குறித்துள்ளனர்.

**ஊசல், கடற்கரை விளையாட்டுக்கள்**

நம் தந்தை கொண்டு வந்த கொழுப்புடைய மீன் உலர்ந்து வற்றலாய்க் காயும்போது வந்து வீழுகின்ற பறவைகளைக் கடற்பரப்பில் மணல் மேட்டிலுள்ள புன்னைமரங்களின் இனிய நிழலில் தங்கி விரட்டி ஓட்டினோம்.

சிவந்த நண்டின் ஆழமான வளைகளை அகழ்ந்து எடுத்தோம். வளைந்த உப்பங் கழியிலுள்ள தாழையின் விழுதுகளாலான கயிற்றால் ஞாழல் மரத்தினது உயிரந்த கிளையில் ஊசலில் ஆடினோம். கீழ்க்காற்றுக் கொண்டு வந்து குவித்த மணலில் குரவைக் கூத்தாடினோம். இவையெலாம் வெறுப்பை உண்டாக்கினால்

வெண்மையான தலை பொருந்திய திரையையுடைய கடலில் தோழியருடன் விளையாடினோம். இதனை,

**பெருநீர் அழுவத்து எந்தை தந்த**

**கொழு மீன் உணங்கற் படு புள் ஓப்பி,**

**எக்கர்ப் புன்னை இன் நிழல் அசைஇ,**

**செக்கர் ஞெண்டின் குண்டு அளை கெண்டி,**

**ஞாழல் ஓங்கு சினைத் தொடுத்த கொடுங் கழித்**

**தாழை வீழ் கயிற்று ஊசல் தூங்கி,**

**கொண்டல் இடு மணல் குரவை முனையின்**

**வெண் தலைப் புணரி ஆயமொடு ஆடி (அகம்.பா.20:1-8)**

என்ற பாடல் அடிகள் மூலம் அறிய முடிகிறது.

**மலர்களைத் தொடுத்தல்**

வளைந்த முட்களையுடைய நீர்முள்ளிச் செடியின் குவிந்த குலைகளினின்றும் கழன்று உதிர்ந்த மீனினது முள்ளினைப் போன்ற வெண்மையான காம்புகளையுடைய கரும்பையான மலர்களை விளையாடும் மகளிர் தாம் கொண்டாடுவிழாவிற்கு அழகு காட்டும் பொருட்டுப் பொறுக்கிச் சேர்த்து தொடுப்பர். இதனை,

**கூன முள் முள்ளிக் குவிகுலைக் கழன்ற,**

**மீன் முள் அன்ன, வெண் கால் மா மலர்**

**பொய்தல் மகளிர் விழவு அணிக் கூட்டும்(அகம்.பா.26:1-3)**

என்னும் பாடலில், மகளிர் மலர்களைத் தொடுத்து விளையாடியதைக் குறிக்கின்றது.

**பந்தெறிதல், கழங்கு ஆடுதல்**

கிளிக்கு மழலை மிழற்றுதல், பந்தெறிதல், கழங்கு ஆடுதல் இவற்றை மிகவும் விரும்புவளாகிய என் மகள் அருள், அன்பு, மென்மை, சாயல் என்னும் இவற்றால் முன்னாட்களைப் போல் அல்லாது வேறுபட்டு இருகின்றாள் எனக்கூறியது. இதனை,

**“கிளியும், பந்தும், கழங்கும், வெய்யோள்**

**அளியும், அன்பும், சாயலும், இயல்பும்,**

**முன்நாள் போலாள்"(அகம்.பா.49:1-3)**

என்ற பாடல் மூலம் அறியலாம்.

**ஓரை விளையாட்டு**

ஓரை விளையாட்டு மகளிர்க்கு உரிய விளையாட்டு. வாடைக்கு காற்று கொண்டு வந்து குவித்த உயர்ந்த மணல் மேடுகளைக் கொண்ட பரந்த கடற்கரைப் பக்கத்தில் மாலையணிந்த தோழியருடன் சிற்றில் புனைந்து ஓரை விளையாடினாள். இதனை,

**"ஊதை ஊட்டிய உயர் மணல் அடைகரை,**

**கோதை ஆயமொடு வண்டல் தைஇ,**

**ஓரை ஆடினும் உயங்கம் நின் ஒளி" (அகம்.பா.60: 9-11)**

என்ற பாடலடிகள், ஓரை விளையாட்டினைச் சுட்டிக்காட்டுகின்றன. ஓரை விளையாட்டு தண்ணீரிலும் கடற்கரை ஈரமணலிலும் வீட்டு முற்றத்தின் மணலிலும் தலைவி தோழிமார்களுடன் விளையாடப்பட்டதை அறிவிக்கிறது. நீரும் நிலமும் சேர்ந்த பகுதியில் ஓடியும் நீந்தியும் ஊரை விளையாடினர்.

**பூக்களைக் கொய்து அழகு சேர்த்தல்**

புதிதாய் மலர்ந்த பொன்னிறமுடைய புலிநகர்க் கொன்றையின் பூக்களுடன் புன்னையின் பூக்களும் தரையில் சித்திரம் தீட்டினாற்போல் உதிர்ந்து கோலஞ் செய்யும். அன்ன வளமான கடற்கரைச் சோலையருகே அழகிய பெருந்துறைகளின் அணிமையிலுள்ள வயல்களின் கரியநீரில் பசுமையான இலைகளையும் தழைத்த திரண்ட தண்டுகளையும் உடைய நெய்தற் பூக்களை, விழாவிற்குத் தம்மை அலங்காரம் செய்து கொள்ளுகின்ற பெண்கள், தங்கள தழையாடைக்கு அழகு செய்யும் பொருட்டுப் பறித்துச் சேர்ப்பர். இதனை,

**பலரும் ஆங்கு அறிந்தனர் மன்னே இனியே**

**வதுவை கூடிய பின்றை, புதுவது**

**பொன் வீ ஞாழலொடு புன்னை வரிக்கும்**

**கானல் அம்பெருந் துறைக் கவினி மா நீர்ப்**

**பாசடைக் கலித்த கணைக்கால் நெய்தல்**

**விழவு அணி மகளிர் தழை அணிக் கூட்டும் (அகம்.பா.70:7-12)**

என்ற பாடல் அடிகள் மூலம் அறியலாம்

**சிறுசோறு ஆடும் விளையாட்டுக்கள்**

மாலை போன்று தொடர்ந்து தோழியர் வட்டத்தோடு ஒன்று சேர்ந்து கடலில் ஆடினோம். கடற்கரைச் சோலையில் சிற்றில் புனைந்தோம். சிறுசோறு ஆக்கிக்

குவித்து விளையாடினோம். இங்ஙனம் ஆடி வருந்திய வருத்தம் தீருமாறு சிறிது இளைப்பாறி இருந்தோம். இதனை,

**கடுஞ் சூள் தருகுவன், நினக்கே: கானல்**

**தொடலை ஆயமொடு கடல் உடன் ஆடியும்**

**சிற்றல் இழைத்தும், சிறு சோறு குவைஇயும்,**

**வருந்திய வருத்தம் தீர, யாம் சிறிது**

**இருந்தனமாக, எய்த வந்து, (அகம்.பா.110:5-9)**

என்ற பாடல் அடிகளில், தோழியும், தலைவியும் ஒன்று சேர்ந்து மகிழ்ந்து பல வகையான விளையாட்டுக்களை விளையாடியுள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

**வண்டல்பாவை விளையாட்டு**

தாயும், அவள் தோழியர் கூட்டமும் பொலிவிழந்து வருந்துவதாயிற்று. தாயும், என் உயிர் போவதாக என அழுது புலம்பினாள். கொண்டு வந்திட்ட மணலில் கிடந்த தன் மகளது விளையாட்டுப் பாவையை எடுத்தாள். அதன் கண்ணையும் நெற்றியையும் தடவி வளைந்த நொச்சியின் வரிவரியாகவுள்ள நிழலில் அதனைக் கிடத்தினாள். தாழியில் வளர்ந்த வாடிய குவளை மலரை அதற்குச் சூட்டி, "என் குடிப்பிறந்த வழித்தோன்றலே நினது இனிய தோளினைத் தருவாயாக'' என்று கூறி அப்பாவையினை ஆரத் தழுவி அழுது நின்றாள். இதனை,

**ஆயமும் அணிஇழந்து அழுங்கின்று; தாயும்**

**'இன்தோள் தாராய், இறீஇயர்என் உயிர்!" என,**

**கண்ணும் நுதலும் நீவி, தண்ணென,**

**தடவுநிலை நொச்சி வரிநிழல் அசைஇ,**

**தாழிக் குவளை வாடுமலர் சூட்டி,**

**"தருமணற் கிடந்த பாவை என்**

**மருமகளே'' என முயங்கினள் அழுமே! (அகம்.பா.165:7-13)**

என்ற பாடல் அடிகள் மூலம் அறிய முடிகின்றது.

**பாவை விளையாட்டு**

அழகாகச் செய்யப்பெற்ற பொய்கை சூழ்ந்த சோலையில் அமைந்த வீட்டில் உள்ள பேதைப் பெண்களால் அழகுறப் புனையப்பட்ட விளையாட்டுப் பாவைகளையுடைய துறையின்கண் எயினனை வட்டமிட்ட பறவைகள் வந்து ஏங்கும். இதனை,

**பொய்கை சூழ்ந்த பொழில்மனை மகளிர்**

**கைசெய் பாவைத் துறைக்கண் இறுக்கும்**

**மகர நெற்றி வான்தோய் புரிசைச் (அகம்.பா.181:18-20)**

என்ற பாடல் அடிகள் மூலம் அறிய முடிகின்றது.

**மணலில் வண்டற்பாவை**

உப்பங்கழியிலுள்ள பூக்களைப் பறித்தும், கடற்கரைச் சோலையில் நம்மோடு தங்கியும், வரிவரியாகக் கிடக்கும் மணலில் வணடற் பாவை செய்து விளையானோம். இதனை,

**கழிப்பூக் குற்றும், கானல் அல்கியும்,**

**வண்டற் பாவை வரிமணல் அயர்ந்தும் (அகம்.பா.330:1-2)**

என்ற பாடலில், மணலில் வண்டற் பாவை செய்து விளையாடியதைக் காணமுடிகின்றது.

**மகளிர் வழிபாட்டு முறைகள்**

வழிபாடு என்ற சொல் "வழிபடு" என்ற சொல்லினின்றும் பிறந்த தொழிற்பெயராகும். "வழிபாடு" என்ற சொல்லிற்கு "வணக்கம், வழியிற் செல்லுகை, பின்பற்றுதல்,பூசனை, வழக்கம், சமயக்கோட்பாடு"[27] என தமிழ் அகராதி விளக்கம் அளிக்கிறது. தெய்வங்களை மகிழ்விப்பதற்காக மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளும் பூசனை முறைகளுமே வழிபாடு என்றும் இறைவனுடன் இரண்டறக் கலப்பதே வழிபாடு என்றும் குறிப்பிடலாம்.[28] என முத்தையா குறிப்பிடுகின்றார்.

நாட்டுப்புற மக்கள் தாங்கள் வழிபடும் தெய்வங்களை அவரவர் விருப்பத்திற்கேற்ப வழிபாட்டு முறைகளில் வழிபடுகின்றனர். ஆனால் தங்கள் முன்னோர்கள் வழிப்பட்ட நெறிமுறைகளிலேயே வழிபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். நாட்டுப்புறத் தெய்வங்களை மக்கள் எந்த நாளில் வேண்டுமானாலும் தங்கள் விருப்பப்படி வழிபட்டு வருகின்றனர். நாட்டுப்புற மகளிர் தங்கள் வீட்டில் நடத்தும் சுபகாரியங்களைத் தெய்வ வழிபாட்டுடன் தொடர்புபடுத்தியே நடத்துகின்றனர்.

**இலக்கியக்கியங்களில் வழிபாடு**

தொடக்க காலத்தில் மனிதனின் அச்ச உணர்வினால் ஏற்பட்ட வழிபாட்டு முறைகள் காலத்திற்குக் காலம் படிப்படியாக வளர்ச்சி அடைந்து வந்துள்ளன. இத்தகைய வழிபாட்டு முறைகள் தமிழ் இலக்கியங்களிலும் காணக்கிடக்கின்றன.

கோயில்களில் வழிபட்ட தெய்வங்கள் அவரவர் மனப்பான்மைக்கு ஏற்ற வண்ணம் பல்வகை உருவங்களை உடையனவாயிருந்தன. தனக்கோர் வடிவமும் பெயரும் இன்றிக் கடவுள் தன் அன்பர் மனம் கொண்ட வகையில் எல்லாம் காட்சியளிக்கின்றனவாம். இதனை,

**“பரவியும் தொழுதும் விரவுமலர் தூவியும்**

**வேறுபல் உருவின் கடவுட் பேணி**

**நிறையும் விரையும் ஓச்சியும்”[29]**

எனக் குறிஞ்சிப்பாட்டு குறிப்பிடுகிறது.

வழிபாட்டிற்குப் பல்வகைச் சாந்து, புகை, விளக்கு, மலர், பலிச்சோறு முதலிய பலவும் கொண்டு செல்லுதல் பழங்கால மரபாக இருந்துள்ளது. இதனை

**“வேறுட்டு சாந்துமும் வீறுபடு புகையும்**

**ஆறுசெல் வளியின் அவிய விளக்கமும்**

**நாறுகமழ் வீயும் கூறும் இசை முழுவதும்**

**பிணிமுகம் உளப்படப் பிறவும் ஏந்தி**

**அருவரை சேராத் தொழுநர்”[30]**

எனப் பரிபாடல் எடுத்தியம்புகிறது.

**வெறியாட்டு நிகழ்த்தல்**

இந்நோய் எம் இறைவானான முருகவேள் தீண்டி வருந்தியமையால் வந்தது. இதனை,

**‘எம்இறை அணங்கலின் வந்தன்று, இந்நோய்; (அகம்.பா.388: 20)**

என்ற பாடலில், வெறியாட்டு நிகழ்த்துதலை காண முடிகின்றது.

**பலி இடுதல்**

“நல்ல நிறங்கொண்ட மாந்தளிர் போன்ற அழகிய பெண்மை நலத்தினையுடைய என் மகள் உள்ள மெலிவுக்குரிய காரணத்தை அறிதல் வேண்டும்’’ எனத் தினை முதலிய நிவேதன்ப பொருள்களைப் பலியாகப் பரப்பி வைத்து உண்மையை அறியமாட்டாத வேலனை அழைத்து, வெறியாடும் களத்தினைப் பொலிவு பெறுமாறு செய்து, புகழ்ந்து வாழ்த்தி, ஆட்டுக்குட்டிய பலியாகக் கொடுக்க முனைவாள். இதனை,

**பண்புதர வந்தமை அறியாள்,‘நுண்கேழ்**

**முறிபுரை எழில்நலத்து என்மகள் துயர்மருங்கு**

**அறிதல் வேண்டும்' எனப் பல்பிரப்பு இரீஇ,**

**அரியா வேலற் தரீஇ, அன்னை**

**வெறிஅயர் வியன்களம் பொலிய ஏத்தி**

**மறிஉயிர் வழங்கா அளவை, சென்றுயாம்,(அகம்.பா.242: 7-12)**

என்ற பாடல் அடிகள் மூலம் அறிய முடிகின்றது.

**தெய்வம் உறையும் இடம்**

வழிபாடு செய்வதற்குரிய தெய்வம் வாழும் கோயிலின் கண் கலந்து கிடக்கும் பல்வேறு மணங்கம்பம் பூக்களைப் போல், இக்காடும் பலவகை மணக்கும் பூக்களைப் பெற்று மிகுதியும் விரும்பத்தக்கதாய் இருக்கின்றது. இதனை,

**மராஅ மலரொடு விராஅய், பராஅம்**

**அணங்குடை நகரின் மணந்த பூவின்(அகம்.பா.99: 8-9)**

என்ற பாடல் அடிகள் மூலம் அறியலாம். மேலும் பெரிய கையினையுடைய கரடிக் கூட்டம் புற்றாஞ்சோற்றினை அகழ்ந்தெடுக்க ஆராயும் புற்றுக்களைக் கொண்ட அவரினையுடைய புதர்கள் படரப் பெற்ற அம்பலத்தில் வழிபடுவார். இதனை,

**புற்றுடைச் சுவர புதல்இலர் பொதியில்,**

**கடவுள் போகிய கருந்தாட் கந்தத்து(அகம்.பா.307: 11-12)**

என்ற பாடல் மூலம் அறிய முடிகின்றது.

**நடுகல் வழிபாட்டில் மகளிர்**

இறந்தோரை கல்லிலே வழிபடும் முறை தமிழ் மக்களிடையே நிலவிய இழவு வினைகள் பற்றிய நம்பிக்கைகளுடன் நெருங்கிய தொடர்புடையதாகும். நடுகல்லானவர்கள் தம்மை வழிபடுவோருக்கு வேண்டும் வரமளிப்பர் என்று நம்பினர். இறந்தவர்கள் கல்லறையில் கல்லை நட்டு அதற்குப் படையலைப் படைத்து வழிபடும் முறை சங்க இலக்கியத்தில் காணப்படுகிறது. இதை நடுகல் வழிபாடு என்று கூறுவர்.

கருமணியின் கடையினின்றும் சிந்துகின்ற நீரைத் துடைத்து அவற்றின் துயரைப் போக்கினர். நிரைமீட்ட போரில் இறந்துபட்ட கரந்தையோரின் பெயரும் பெருமையும் பொறித்து மயிற்பீலி சூட்டப்பெற்று விளங்கும். இதனை,

**கடைமணி உகுநீர் துடைத்த ஆடவர்**

**பெயரும் பீடும் எழுதி, அதர்தொறும் (அகம்.பா.131: 9-10)**

என்ற பாடல் அடிகள் மூலம் அறியலாம். மேலும், நெடிது காலம் நிலைத்து நிற்கும் நடுகல்லாகிய தெய்வத்திற்கு நாட்பலியிட்டு வழிபாடு செய்வர். இதனை,

**நெடுநிலை நடுகல் நாட்பலிக் கூட்டும் (அகம்.பா.289: 3)**

என்ற பாடல் அடிகள் மூலம் அறியலாம்.

**தொகுப்புரை**

- பண்பாடு குறித்தும், பண்பாட்டின் சிறப்பினைக் குறித்தும் பல்வேறு அறிஞர்களின் கருத்துக்கள் ஆராயப்பட்டுள்ளன.
- சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் பண்பாட்டினையும் அவர்கள் கொண்டிருந்த பழக்கவழக்கங்களையும் அறிந்து கொள்ள முடிகிறது.
- சங்க கால மகளிர் வழிபடுதல், விருந்தோம்பல், அன்றாட வாழ்வில் தேவைப்படுகின்ற பொருட்களை பண்பின் அடிப்படையில் வெளிப்படுகிறது என்பதை விளக்குகிறது.
- சங்க காலப் பெண்கள் அவர் திறமைக்கேற்ப பல்வேறு கலைகளைக் கற்று, தங்களை ஈடுபடுத்திக் கொண்டு வாழ்ந்தனர் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

- மனிதனின் உடலை மறைக்கின்ற உடையைக் குறித்து சங்க கால மக்களின் சிந்தனை அவர்கள் உடுத்திய ஆடையின் மூலம் உணர முடிகிறது.

- உடல் வலிமையும், உடல் சோர்வும் ஏற்படாமல் இருக்க அக்கால மகளிர் விளையாட்டில் ஆர்வம் கொண்டுள்ளனர்.

- சங்க கால மகளிர் மனிதனிடம் மட்டும் அன்பினை வெளிப்படுத்தாமல் மற்ற உயிரினங்களிடமும் அன்பினை வெளிப்படுத்தியுள்ளனர்.

## சான்றெண் விளக்கம்

1. பண்டைத் தமிழர் நாகரிகமும், பண்பாடும், ப.5
2. குறள் 983
3. விஷ்ணுப்பிரியா.இரா., அகநானூறு - களிற்றியானை நிரை காட்டும் வாழ்வியல் நெறிகள் (ஆய்வியல் நிறைஞர் ஆய்வேடு), ப.83
4. தமிழர் நாகரிகமும், பண்பாடும்.ப.4
5. மேலது., ப.4
6. மேலது.
7. பண்டைத் தமிழர் நாகரிகமும், பண்பாடும், ப.6-7
8. தமிழர் பண்பாடும் பயன்பாடும், ப.10
9. பழனிவேல்.கே. சங்க இலக்கியங்களில் குடிப்பழக்கம் (ஆராய்ச்சி, கோவை) தொகுதி - 1, ப.891
10. தொல்.பொரு.செய்.பா.1495
11. குறள் - 90
12. ஆசாரக்கோவை, ப.54
13. மணி, மே.11: 99-96
14. கடவூர் மணிமாறன், தமிழர் பண்பாடு வாழ்வியலும், ப.37
15. செல்வ.கணபதி. இரா.கம்பனில் பெண்ணியம், ப.154
16. சாமி, சிதம்பரனார், எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும், ப.64
17. சிலப்.16, 17-3
18. குறள், 85
19. தொல்.பொருள்.அகம், நூ.964
20. கலைவாணி, இரா.சு.தமிழ்வேலு, சங்க இலக்கியத்தில் இசை,
21. மணிமேகலை சிந்தனைகள், ப.216
22. தொல்.பொருள் 1208
23. மேலது, 1209

24. குறள் 788

25. குறள். 972

26. நற்றி, பா:45

27. கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப.825

28. ஞ.முத்தையா, பண்பாட்டு பதிவுகள் ப.118

29. ச.வே.ச. சுப்பிரமணி (தொ.ஆ) குறிஞ்சிப்பா, பா.அ.5-7

30. பரிபாடல், பா.8: 98-10

# இயல் 4

## மகளிர் சார்ந்த நம்பிக்கைகள், சடங்குகள

# இயல் 4

## மகளிர் சார்ந்த நம்பிக்கைகள், சடங்குகள்

### முன்னுரை

மனித இனம் தோன்றி நாகரீகம் அடைந்த காலம் முதல் தற்காலம் வரையில் நம்பிக்கைகளும், சடங்குகளும் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகின்றன. மனிதன் தன் பிறப்பு முதல் இறப்பு வரை, ஒவ்வொரு நிகழ்விலும், பல்வேறு நம்பிக்கைகளையும்,

சடங்குகளையும் கொண்டிருக்கிறான். சங்க கால மக்கள் தாம் அறியாமையால் செய்த செயல்களாலும், பிற செயல்பாட்டின் மூலம் வெளிப்படுகின்ற அச்சத்தாலும், தன் மேல் வைத்திருக்கின்ற ஊக்கத்தின் மூலம் கொண்டிருந்த நம்பிக்கைகளும், சடங்குகளும் குறித்து ஆராயும் விதமாக இவ்வியல் அமைகிறது.

**நம்பிக்கைகள்**

பழங்காலம் தொட்டே மக்கள் பல்வேறு வகையான நம்பிக்கைகளைக் கொண்டிருந்தனர். இயற்கையைப் போற்றி வழிபடுவதும் நம்பிக்கையேயாகும். தொடர்ந்து மனித மனம் நம்புபவையே காலப்போக்கில் நம்பிக்கைகளாகவும், சடங்குகளாகவும் மாறிவிடுகின்றன. இந்நம்பிக்கை குறித்த செய்திகள் சங்ககாலம் தொட்டு இன்று வரையிலும் இலக்கியங்களில் காணக்கிடைக்கின்றன. இந்நம்பிக்கைகள் குறித்து,''ஒவ்வொரு மனிதனும் ஆயிரக்கணக்கான நம்பிக்கைளின் குவியலாகக் காணப்படுகின்றான். நன்மையைத் தேடும் மனதின் பற்றுக்கோடாக நம்பிக்கை துணை நிற்கிறது. கடலிலே அகப்பட்டுத் தவிக்கும் ஒருவனுக்கு கையில் கிடைத்த சிறிய மரக்கட்டையும் தெப்பமாகத் தெரியும். அதுபோல் அலைக்கழிக்கப்படும் மனம், நம்பிக்கைகளைப் பற்றிக் கொள்ளும் பொழுது புத்துணர்ச்சி பெறுகிறது"[1] என்று பாக்கியமேரி கூறுகிறார்.

நம்பிக்கை தொடர்பான செய்திகள் சங்க இலக்கியங்கள் முதல் இன்று வரையிலான இலக்கியங்கள் வரை காணக்கிடைக்கின்றன. அவற்றுள் ஒன்று கடவுள் நம்பிக்கை- உலகின் மிகத் தொன்மையான காலத்தில் இயற்கை வழிபாடே இருந்திருக்க வேண்டும். அதாவது இயற்கையின் சீற்றங்களுக்கு பயந்த மனிதன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள எண்ணி அவ்வியற்கையை வழிபடத் தொடங்கினான். சூரிய வழிபாடு, பிறைவழிபாடு போன்றவற்றையும் இத்தகைய இயற்கை வழிபாட்டின் கூறுகளே ஆகும்.

''நம்பிக்கைகள் பெரும்பாலும் மனிதனின் அச்ச உணர்வினை அடிப்படையாக கொண்டு தோன்றியவையாகவே காட்சி தருகின்றன. இயற்கையின் புதிரான செயல்களை உணராதபோதும், மனித வாழ்வில் நிகழும் துன்பங்களுக்குக் காரணம் கற்பிக்க இயலாத நிலையிலும் மனித மனம் சிலவற்றைப் படைத்தக் காரணம் கற்பித்துக் கொள்கின்றது. அவை நம்பிக்கைகளாக வடிவம் பெறுகின்றன. மனித மனத்தின் விழைவால் நம்பிக்கை தோன்றுகிறது. இயற்கையால் படைக்கப்பட்டுள்ள பொருட்களுக்கும் மனிதனின் செயல்களுக்கும் தொடர்புண்டு என்ற கருத்தேற்றத்தின் அடிப்படையில் தோன்றியனவாகவே அவை காட்சி தருகின்றன. அச்சத்தின் காரணமாக மனிதன் இயற்கையின் தோற்றத்தினையும் செயற்பாடுகளையும் தனது வாழ்வில் நட்புக்களோடு இணைத்து நோக்கிய நிலையில் நம்பிக்கைகள் தோற்றம் கொண்டன"[2] நன்மையே விளைய வேண்டுமென்ற மனிதனின் விருப்பார்வம் இணைந்துகொண்ட நிலையில் நம்பிக்கைகளின் எல்லையும் பரப்பும் விரிந்தது. மரபும் நம்பிக்கைகளைத் தக்க வைத்துக் கொள்ள உதவின.

மனிதன், தீமைகளிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முயலும் தற்காப்பு முயற்சியும், நன்மையே விளைய வேண்டுமென்ற விழைவும் நம்பிக்கைகளை நிலைநிறுத்துகின்றன. “மனிதனின் நலவுணர்வு காரணகாரியத்தைக் காண விழைவதில்லை. ஆதலால் மனிதமனம் நம்பிக்கைகளை ஏற்றுக்கொள்கின்றது. பொதுவாக நம்பிக்கைகளை “உள உருவாக்கம்’’(Mental Creation) என்பர்’’[3] நன்மைகளை விரும்பித் தீமைகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வது மனத்தின் இயல்பு என்ற நிலையில் மனிதமனம் சில கற்பிதங்களை ஏற்படுத்திக் கொண்டு, அவற்றின் வெற்றி தோல்விகளின் அடிப்படையில் சில நிமித்தங்களையும் நிமித்தக் கூறுகளையும் கற்பித்துப் பயன்தரும் நம்பிக்கைகளை உருவாக்கிக் கொள்கின்றது. இவை சமுதாயச் செல்வாக்கினைப் பெற்றுக் காலப்போக்கில் நம்பிக்கைகளாக நிலைபேற்றினைப் பெற்றுவிடுகின்றன. நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்படுவன. அவை வழக்கில் மிகுதியாகவும் இலக்கியங்களில் குறைந்தும் காணப்பெறும். இலக்கியங்களில் இடம்பெறும் நம்பிக்கைகள் பெரும்பாலும் இன்றைய மக்களிடையே சமுதாயச் செல்வாக்குப் பெற்ற குறிப்பிடத்தக்க நம்பிக்கைளாகவே அமையும். நம்பிக்கைகள் என்று தோன்றின எனத் திட்டவட்டமாகவும் கூறிவிடமுடியாது.

நம்பிக்கைகள் காரணகாரியத் தொடர்புகளுக்கு உட்பட்டவையாகும். காரண காரியத் தொடர்புகளுக்கு உட்பட்டுச் சான்றுகளின் வாயிலாக நிறுவமுடிவதை “நம்பிக்கை’’(Belief) என்றும், சான்றுகளின் அடிப்படையிலோ, காரணகாரியத் தொடர்புகளின் பின்புலத்திலோ விளக்க முடியாதவற்றை “மூடநம்பிக்கை’’(Super stition) என்றும் வகைப்படுத்துவர்[4]. ஒரு சமுதாயத்தின் நம்பிக்கை மற்றொரு சமுதாயத்தின் மனநிலை மற்றும் வாழ்வியல் நோக்கில் மூடநம்பிக்கையாகவும், அதேபோல் ஒரு சமுதாயத்தின் மூடநம்பிக்கை மற்றொரு சமுதாயத்தில் நம்பிக்கையாகவும் அமையலாம். ஆதலால் நம்பிக்கைகளை வகைப்படுத்தும்போது காரணகாரியத் தொடர்போடு நிறுவப்படுவன, நிறுவப்படாதன என இருவகையாகப் படுத்திக் காண்பதே சிறப்புடையதாகத் தோன்றுகின்றது.

அறிவு வளர்ச்சியின் காரணமாக அன்றைய சமுதாயத்தின் பெரும்பாலான நம்பிக்கைகள் இன்றைய அறிவியல் ஆய்வின் காரணமாக மூடநம்பிக்கைகளாகவும் மாறியுள்ளன. அதேபோல் மூட நம்பிக்கைகளாகக் கருதப்பட்டவை நம்பிக்கைகளாகவும் நிறுவப்பட்டுள்ளன.

‘‘நம்பிக்கைகளுக்குக் காரணம் காணுதல் இலகுவன்று’’[5] என்னும் கருத்தினை க.கைலாசபதி முன் வைத்துள்ளார். அவரது கருத்திற்குச் சான்றளிப்பதைப் போல இன்றைய சமுதாயத்தில் வழக்கிலிருக்கும் பெரும்பாலான நம்பிக்கைகளுக்குக் காரணம் காட்ட முடிவதில்லை. எனினும் சமுதாயம் என்றும் நம்பிக்கை வயப்பட்டச் செயல்படுவதைத்தான் இன்றைய நடைமுறை வாழ்க்கை உணர்த்துகின்றது.

நம்பிக்கை வாழ்க்கையில் முதன்மை பெறுகின்றது. அதனுடைய சொல்லாட்சியைப் பற்றி அறிதலும் தேவை. இரண்டு கைகள், கால்கள், கண்கள்,

காதுகள், ஒரு தலை, மூக்கு, வாய் போன்றவையுடன் அறிவும் பரிவுணர்வும் பெற்றவனே மனிதன் என்கிறோம். அதேபோன்று நம்பிக்கை என்பதற்கு,‘‘விசுவாசம், ஆனை, நம்பியொப்புவிக்கப்பட்டது, உண்மை” என்றும் ‘‘சத்தியம், நிசம், உறுதிப்பாடு” என்றும் மதுரைத் தமிழ்ப் பேரகராதி பல்வேறு பொருள்களைத் தெரிவிக்கின்றது.

நம்பினார் கெடுவதில்லை, நம்பினோர் கைவிடப்படார் என்ற கொள்கைகள் நடப்பியல் உலகில் மக்களிடையே பரவலாகக் காணப்படுகின்றன. நம்பிக்கைக்கு அடிப்படையாக அமைவது மனம். மனிதன் சிந்திக்க தொடங்கிய நாள் முதலே அவன் மனதில் நம்பிக்கைகளும் தோன்றிவிட்டன. நம்பிக்கைகள்மக்களால் உருவாக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்றன. அச்ச உணர்வின் அடிப்படையில் நம்பிக்கைகள் தோன்றுகின்றன. இதனை ‘‘மனித வாழ்வில் ஏற்படும் சில நிகழ்ச்சிகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாத போது அவனே சிலவற்றைப்ப படைத்துக் காரணம் கற்பித்துக் கொள்கின்றான். அவைகளே நம்பிக்கைகள்”[6] என்பர் சு.சக்திவேல்.நம்பிக்கைகள் மனித மனத்தின் விளைவாக தோற்றம் பெற்று மனித அச்சத்தின் காரணமாகத் தம் வாழ்வோடு இணைக்கப்பட்டவையாகும். ‘‘அச்சத்தின் காரணமாக இயற்கையின் தோற்றத்தினையும் செயல்பாடுகளையும் தனது வாழ்வியல் நடப்புகளோடு இணைந்து வாழ்ந்த நிலையில் நம்பிக்கைகள் தோற்றம் கொண்டன”[7] என க.காந்தியின் கூற்றும் குறிப்பிடத்தக்கது. நம்பிக்கைகள் ‘‘காரண காரியத் தொடர்புகளுக்குட்பட்டுச் சான்றுகளின் வாயிலாக நிறுவ முடிவதை நம்பிக்கை (Belief) என்றும், சான்றுகளின் அடிப்படையிலோ காரண காரிய தொடர்பின் வாயிலாகவோ நிறுவ முடியாதவற்றை மூடநம்பிக்கை (Supersittion)"[8] என்றும் சு.சக்திவேல் வகைப்படுத்துகிறார். ஒரு சமுதாய நம்பிக்கையாக மாற்றம் பெறுகிறது. இனத்திற்கு இனம் பின்பற்றும் நம்பிக்கைகளில் வேறுபாடு காணப்படுகின்றது.

மனிதன் நாகரிகம் அடைந்தாலும் அவன் மனதில் குடிகொண்டுள்ள நம்பிக்கைகள் மனத்திலிருந்து மாறிவிடுவதில்லை. மனிதனின் உள்மன எண்ணங்களே நம்பிக்கைகளாகத் தோற்றம் பெறுகின்றன. மனித வாழ்வை இயக்கிச் செல்லும் அறிவுக்கட்டுப்பாட்டு இயந்திரமாக நம்பிக்கைகள் இன்றும் மக்கள் வாழ்வோடு பின்னப்பிணைந்து காணப்படுகின்றன. நம்பிக்கைகள் என்பது நம் உள்ளத்திலிருந்து உருவாகக் கூடாது. இத்தகைய உருவாக்கமே, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள நடைபெறும் பல உள்ளிணைப்புத் தொடர்பான மரபு வழி நிகழ்வுகளை நம்பிக்கைகளாக வளர்க்கின்றன என்று மேலைநாட்டு அறிஞரொருவர் கூறியுள்ளார். இவ்வாறு வளர்ச்சியடையும் ‘‘நம்பிக்கைகள் மரபுச் சார்ந்தவை. அவை வாய்மொழியின் மூலம் செயல்பட்டு வடிவம் பெறுவனவாகும். அவ்வாறு சுற்றிச்சுழன்று வருவதால் அவை மாற்றத்திற்கு ஆட்படுகின்றன”[9] என்ற தே.லூர்தின் கருத்து இங்குக் குறிப்பிடத் தகுந்ததாகும். நடைமுறை உலகில் மக்களினம் ‘‘கடவுளிடம் கொண்டுள்ள அச்சமும், முன்னோரின் வழக்கத்தை மீறாமல் நடந்து கொண்டால்தான் வாழ்க்கைக் கவலையில்லாமல் அமையும் என்ற நம்பிக்கையும் சேர்ந்து, மரபு வழி நம்பிக்கைகளைச் சார்ந்த செயல்பாடுகளுக்குத் தூண்டுகோல்களாக அமைகின்றன”[10] என்று சோமலெ

கூறுகின்றார். இவற்றை மனத்தில்கொண்டு நம்பிக்கைகள் குறித்து கூறப்படுகின்ற கருத்துக்களை ஆராயும்போது; தீமைகளிலிருந்து மனிதன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள மேற்கொள்ளும் முயற்சியும், நன்மைகளை அடைந்திட வேண்டும் என்ற எண்ணமுமே நம்பிக்கைகளை உலகில் நிலைநிறுத்துகின்றன என்பது விளக்கமாகின்றது.

**பண்டைத் தமிழர் நம்பிக்கைகள்**

நம்பிக்கைகள் பழங்காலத்திலிருந்தே மக்களிடம் நிலவி வருவதைத் தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியங்கள் நமக்கு விளக்கிக் கூறுகின்றன. இயற்கையோடு வாழ்ந்த மனிதன் இயற்கையின் மாறுதலுக்கு ஏற்ப மனம் மாறுபட்டு நம்பிக்கைகள் தோன்றலாயின. உலகெங்கிலும் வாழும் மக்களிடத்தில் முற்காலங்களிலிருந்து வந்த நம்பிக்கைகள் இன்றும் பின்பற்றப்பட்டு வருவதைக் காண முடிகிறது.

**“நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்”**[11]

எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.

**மறுபிறப்பும், இருவினைப் பயன்களும்**

இலக்கியத்தின் வழி முற்பிறப்பில் ஒருவர் செய்த நல்வினை தீவினைகளுக்கேற்ப இப்பிறப்பில் அவருடைய இன்ப துன்பங்கள் நிச்சயிக்கப்படுகின்றன என்ற மக்களின் நம்பிக்கை புலனாகிறது. இதனையே“ஊள்வினைக் கொள்கை” என்பர். இது பிறப்பு, சொர்க்கம், நரகம் ஆகிய நம்பிக்கைகளோடு நெருங்கிய தொடர்புடையது. பிறப்பு பல என்பதும் உயிர்கள் ஆற்றும் வினைகளுக்கேற்ப மாறிபிறக்கின்றன என்பதும் பிறவிக் கொள்ளையாகும். இப்பிறப்பு, மறுபிறப்பு, பழம் பிறப்பு, எழுபிறப்பு போன்ற இலக்கியத் தொடர்புகள் இப்பிறவிக் கொள்கையில் பழந்தமிழரின் நம்பிக்கையை விளக்குகின்றன.துறக்கத்தினை அடைந்த கெடாத நல்ல புகழினையுடைய தன் முன்னோர்க்குச் செய்தற்கரிய தென்புலக் கடனைச் செய்தனர். இதனை,

**துறக்கம் எய்திய தொய்யா நல்இசை**

**முதியர்ப் பேணிய, உதியஞ் சேரல் (அகம்.பா.233:7-8)**

என்ற பாடல் அடிகள் மூலம் மறுபிறப்பையும், இருவினைப் பயன்களைப்பற்றியும் அறிய முடிகின்றது.

**சூளுரைத்தல்**

தெய்வங்களை வழிபடும் நிலை பல வகைப்படும். ஆவை பராவல், பழிச்சுதல், பலிநேர்தல், சூளுரைத்தல் என்பனவாகும். அருகேயுள்ள வயலிடத்து, உழவர்கள் செருக்குடன் எழுப்பிய ஆரவாரத்துக்கு அஞ்சிப் பறந்து போன அழகிய மயிலானது, தெய்வத்தையுடைய குன்று பொலிவினைப் பெறுமாறு வந்து தங்கும் சிறப்பினையுடைய

அழகிய மணிவிளக்குகள் ஒளி செய்யும் திருச்சீரலைவாயிலில் அமர்ந்திருக்கும் வெல்லும் போரை வல்ல முருகனைச் சுட்டி, நீ அன்று களவுக் காலத்துச் செய்து கொடுத்த சூள் மொழிதான் எனக்குத் துன்பத்தைத் தருகின்றது. இதனை,

**அவலம் அன்றுமன், எமக்கே: அயல**

**கழனி உழவர் கலிசிறந்து எடுத்த**

**கறங்குஇசை வெரீஇப் பறந்ததோகை**

**அணங்குடை வரைப்பகம் பொலியவந்து இறுக்கும்**

**திருமணி விளக்கின் அலைவாய்ச்**

**செருமிகு சேஎயொடு உள்ள சூளே! (அகம்.பா.266:16-21)**

என்ற பாடல் அடிகள் மூலம் சூளுரைத்தலை அறிய முடிகின்றது.

**நிமித்தங்கள்**

நிமித்தம் என்பது வாழ்வியல் பின் நிகழவிருக்கும் நன்மை தீமைகளை சில குறியீடுகளின் வாயிலாக முன் உணர்த்துவதாகும். பழங்காலத் தமிழர் இதனை 'புள்''நிமித்தம்' ஆகிய சொற்களால் சுட்டியுள்ளனர். இன்று இதனை 'சகுனம்'என்று குறிப்பிடுகின்றோம். நம்செயல்களுக்கும் இயற்கையின் நிகழ்வுகளுக்கும் தொடர்புகாட்டுவது நிமித்தங்களின் செயல்பாடாகும்.

காக்கை, ஆந்தை ஆகிய பறவைகள் நிமித்தக் காரணிகளாக கருதப்பட்டன. பொதுவாக நற்செயலையும் நற்பயனையும் அறிவிக்கும் குறியினை 'நன்னிமித்தம்' எனவும் தீய செயலினையும் தீமையையும் அறிவிக்கும் குறியினை 'தீநிமித்தம்'எனவும் வகைப்படுத்தலாம். நிமித்தங்களை அறிந்துணர்த்துவோர் 'நிமித்திகர்' அல்லது 'கணிகர்' எனப்படுவர்.

**நன்னிமித்தங்கள்**

ஒரு செயலைத் தொடங்கும் முன் நல்லநாளும், பொழுதும் நன்னிமித்தமும் பார்த்துத் தொடங்குவது தமிழ் மக்களிடம் இருந்துவரும் ஒரு வழக்கமாகும். ஓதி என சங்க இலக்கிய பாடல்கள் சுட்டும் பச்சோந்தி, நிறம் மாறும் தன்மை படைத்தது. இதன் நிறத்தின் அடிப்படையில் நிமித்தக்கூறு உணரப்பட்டது. சங்க காலம் தொட்டு இன்றுவரை பல்லி ஒலித்தலை தமிழ்மக்கள் சகுனமாக கருதுகின்றனர். பல்லி சொன்னால் தரையில் மூன்று முறை தட்டும் பழக்கமும் மற்றும் அவற்றின் சொல்லை ஏற்றுக் கொள்ளும் வகையில் மக்கள் வாயினால் அதன் ஒலியைப் போல் ஓசை இசைப்பதையும் வழக்கமாக கொண்டுள்ளனர். பல்லியின் சொல் தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவியைத் தேற்றியதாகப் பல பாடல்கள் சுட்டுவதோடு பல்லிபட்ட திசைகளை தொழுத செய்தியும் நடுங்கியமையும் பேசப்பட்டிருக்கின்றது.

**தீநிமித்தங்கள்**

'உன்னம்' என்ற ஓரவகை மரம் நிமித்தம் காண்பாருக்கு வெற்றி எய்துவதாயின் தழைத்தும் தோல்வியுறுவதாயின் கரிந்தும் காட்டி பின் விளைவினை முன் உணர்த்துவதாகக் கருதுவர். இதனை 'உன்னநிலை' என தொல்காப்பியர் புறத்திணை இயலில் காட்டுகிறார். கூகையின் குரல் அழுகுரலோடும் பறையோசையோடும் ஒப்பிட்டுப் பேசப்படுவதால் அதன் குரல் சாவோரை அழைப்பதாகக் கருதப்படுவது புறநானூற்றுப் பாடல்களின் வாயிலாக புலப்படுகிறது. ஆந்தை வீட்டின் அருகிலோ அல்லது தெருவிலோ பேரொலி எழுப்பினால் தீய அறிகுறி எனக்கருதிஅதனை ஓட்டுவதை இன்றும் வழக்கமாகக் கொண்டுள்ளனர். விலங்குகளில் யானை, குதிரை, எருது ஆகியவற்றின் இயல்பில்லாத நிலைகள் தீநிமித்தக் குறிகளாக கட்டப்பட்டிருக்கின்றன.

**நிமித்தம் பார்த்தல்**

சுரத்தில் பொருந்திய அழகிய சிற்றூரின் கண்ணே வளைந்த நுண்ணிய கூந்தலையுடைய பெண்கள் பூண்மாண்ட உலக்கையால் உயர்த்திக் குற்றும் உரலினின்றும் எழும் ஒலி நீண்ட பெரிய பக்க மலையிலுள்ள ஆந்தையோடு மாறி மாறிக் குன்றுகளில் ஒலிக்கும். இதனை,

**அத்தம் நண்ணிய அம் குடிச் சீறூர்-**

**கொடு நுண் ஓதி மகளிர் ஓக்கிய**

**தொடி மாண் உலக்கைத் தூண்டு உரல் பாணி,**

**நெடு மால் வரைய குடிஞையோடு இரட்டும்**

**குன்று பின் ஒழியப் போகி, உரம் துரந்து,**

**ஞாயிற படினும்,'ஊர் சேய்த்து' எனாது,**

**துனை பரி துரக்கும் துஞ்சாச் செலவின்**

**எம்மினும், விரைந்து வல் எய்தி, பல் மாண் (அகம்.பா.9:10-17)**

என்ற பாடல் அடிகள் மூலம் அறிய முடிகின்றது. மேலும் நிழலில் வளர்ந்துள்ள முட்கள் பொருந்திய கள்ளிச் செடியின் அடியில் தங்கிச் செல்வர். அவ்விடத்தே சிறிய சிவந்த நாவினையும், மணியோசையைக் கேட்டாற் போன்ற தெளிந்த குரலினையும், பின்வருவனவற்றை முன்னதாக அறிந்து கூறும் வாயினையும் உடைய பல்லி, வழிச் செல்வார்க்கு உண்டாகும் நிகழ்ச்சிகளைக் கூறும். அத்தகைய காட்டைக் கடந்து நம் தலைவர் சென்றுள்ளார். இதனை,

**கள்ளி முள்அரைப் பொருந்தி, செல்லுநர்க்கு**

**உறுவது கூறும், சிறுசெந் நாவின்**

**மணிஓர்த் தன்ன தெண்குரல்**

**கணிவாய், பல்லிய காடுஇறந் தோரே! (அகம்.பா.151:12-15)**

என்ற பாடல் அடிகள் மூலம் நிமித்தம் பார்த்தலை அறிய முடிகின்றது.

**பல்லி பற்றிய நம்பிக்கை**

பல்லி சகுனம் பார்த்தல் சங்க கால மக்களிடையே நிலவும் நம்பிக்கைகளில் ஒன்றாகும். தலைவன் போருக்குச் செல்லும் முன் மரத்தைப் பார்க்கும் பொழுது அம்மரம் தழைத்திருத்தல் அது அவனுக்கு வெற்றியைத் தரும், வாடியிருப்பின் தோல்வியை அளிக்கும் என்ற நம்பிக்கை பண்டைக் காலத்தில் காணப்பட்ட ஒன்றாகும். தற்காலத்தில் கிராமப்புற மக்கள் இச்சகுனத்தைக் கடைப்பிடித்தலை காணமுடிகிறது. பல்லி ஒலிக்கின்ற சத்தம் கேட்டவுடன் அது ஒலித்த திசையைப் பார்த்து நல்ல சகுனம், தீய சகுனம் என்று இன்றும் நம்புவதை காணமுடிகிறது.நாம் ஒரு காரியத்திற்குப் புறப்படும் பொழுது பல்லி கத்தினால் கூட தயங்குகின்றோம். நாம் சும்மா இருக்கும்போது பல்லி கத்தினாற் கூட அதற்கு ஏதோ பலன் உண்டு என்று எண்ணுகிறோம். பல்லி உடம்பின் எப்பகுதியில் விழுந்தாலும் என்ன பலன் உண்டு என இன்றும் கணித்துக் கூறுவார்கள். அந்த வகையில் அகநானூற்றில் பழங்கொல்லையாகிய மேட்டு நிலத்தில், பெரிய சிவந்த தினைப் பயிர் தழைத்து வளர்ந்திருக்கும். அதன் மேனோக்கி உயர்ந்து வளைந்து பெரியி கதிர்களைத் தின்னுவதற்கு இளமை பொருந்தி காட்டுப்பன்றி, பிளந்த வாயினை உடைய பல்லி நல்ல பக்கத்தே ஒலிக்கும் ஓசையினைச் செவி தாழ்த்துக் கேட்டு கொல்லையினை அணுகி வரும் எனச் சுட்டுவதை அறியலாம்.

**முதைச் சுவற் கலித்த மூரிச் செந்தினை**

**ஓங்கு வணர்ப் பெருங் குரல் உணீஇய, பாங்கர்ப்**

**பகுவாய்ப் பல்லிப் பாடு ஓர்த்து, குறுகும்**

**புருவைப் பன்றி வரு திறம் நோக்கி (அகம்.பா.88:1-4)**

என்ற பாடல் அடிகள் மூலம் அறிய முடிகின்றது. மேலும், உணவிலே கருத்தூன்றிக் கிடந்த முதிய பல்லியானது சிறிது தடை செய்யினும், பெரிய முகபாடம் அணிந்த யானை மீது செல்லும் அரசர்கள் கூட அவ்விடத்தினின்றும் மேலும் செல்ல நினைக்காது திரும்பிச் செல்வர் என இதில் அமைந்திருக்கின்றது. இதனை,

**"இரைநசைஇக் கிடந்த முதுவாய்ப் பல்லி**

**சிறிய தெற்றுவது ஆயின், பெரிய**

**ஓடை யானை உயர்ந்தோர் ஆயினும்,**

**நின்றாங்குப் பெயரும் கானம்**

**சென்றோர் மன்என இருக்கிற் போர்க்கே," (அகம்.பா.387 :16-20)**

என்ற பாடல் அடிகள் மூலம் அறிய முடிகின்றது. மேலும், பல்லி சத்தமிடுவதைப் "பல்லி சொல்லுதல்" என நம்புகின்றனர். இதனை,

**பகுவாய்ப் பல்லி படுதொறும் பரவி,**

**'நல்ல கூறு' என நடுங்கி,**

**புல்லென் மாலையொடு பொரும்கொல் தானே? (அகம்.பா.289:15-17)**

என்ற பாடலடிகள் குறிப்பிடுகின்றது. உடல் அங்கம் துடித்தல், தும்மல், பறவை, விலங்கு,குறிகேட்டல் முதலியவை பற்றிய நம்பிக்கைகள் பண்டைத் தமிழரிடம் மட்டுமின்றி இன்றைய நாகரிக மக்களிடமும் வழக்கில் இருந்து வருவனவாகும்.

**நல்வினைப் பயன் பற்றிய நம்பிக்கை**

முற்பிறவியில் நல்லவனவற்றைச் செய்தால் அது அடுத்த பிறவியில் நல்வினைப் பயனாக வந்து அமைவது நல்வினை ஆகும். களவொழுக்கத்தில் நின்ற தலைவன் வரைவொடு வந்து தலைவியை மணந்து கொண்டான். அதுவரை அலர் தூற்றிய மக்கள் வாயடங்கியது கண்டு தோழி மகிழ்ச்சியுடன் நகையாடித் தலைவிக்குச் சொல்லியது என்னும் துறையிலமைந்த,

**.....அவனொடு**

**மனைஇறந்து அல்கினும் அலர்', என நயந்து**

**கானல் அல்கிய நம்களவு அகல,**

**பல்புரிந்து இயறல் உற்ற நல்வினை, (அகம்.பா.400;1-4)**

என்னும் பாடலில் தலைவி தலைவனுடன் களவு மேற்கொண்ட பொழுது வீட்டைக் கடந்து சென்று தங்கினாலும் அலராகும் என்று கூறப்படவும், தலைவனுடன் கானலில் தங்கிய களவொழுக்கம் நீங்கி கற்பு மலர தலைவி முற்பிறப்பில் செய்த நல்வினைப் பயனாக தலைவன் தலைவியை மணந்து கொள்வதனை தோழி கூற்றின் வாயிலாக அறிய முடிகின்றது.

**பேய் பற்றிய நம்பிக்கைகள்**

பேய் பற்றிய நம்பிக்கைகள் ஆவி, ஆன்மா என்பவற்றுடன் தொடர்புடையது என்றாலும் இது பெரிதும் அச்சம் தரும் நம்பிக்கையாகவே மக்களிடம் வளர்ந்து வந்துள்ளது. "பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள்" என்கிறார் பாரதியார். இக்கூற்று, பேய்களுக்கும் பிணங்களுக்கும் உள்ள தொடர்பை கூறுவதாக உள்ளது.

**அணங்குஅரு மரபின் பேஎய் போல**

**விளர்ஊன் தின்ற வேட்கை நீங்க,**

**துகள்அற விளைந்த தோப்பி பருகி, (அகம்.பா.265:14-16)**

என்றவாறு அகநானூற்றில் பேய்கள் ஊனைத் தின்னும் செயல் எடுத்துக் காட்டப்படுகிறது. தெய்வத் தன்மைக்கும் அணங்கு என்ற சொல் வழங்கப்பட்டு வந்துள்ளது. பேய் பற்றிய மக்களின் நம்பிக்கைகள் மேய்மகளிர் காண்போர்க்கு அச்சத்தைக் கொடுப்பவர், பிணந்திண்பவர் குருதிகுடிப்பவர், சுடுகாட்டை விரும்புவர், மிருகங்களின் பிணத்தைத் திண்பவர் குடலை மாலையாகப் போடுபவர், கூத்தாடுபவர்(துணங்கை) என்பனவாக இருந்து வந்திருக்கின்றன. பேய்மகள் கொண்டிருந்த தோற்றத்தையும் அவளது கொடிய செயலையும் கண்டு அக்கால மக்கள் அஞ்சினர்.

**இறை வழிபாடு**

சங்க கால மகளிர் தெய்வ நம்பிக்கையோடு இறைவனை வணங்கி வந்துள்ளனர். தமக்கு எந்த வகையிலும் வாழ்விலும் தீங்கு ஏற்படக்கூடாது என்றும் எடுத்த காரியம் வெற்றி பெறவும் இறைவனை வணங்கியதாகத் தெரிகின்றது. கார்த்திகை விளக்கேற்றும் முருகனுக்குரிய விழாவாக மகளிர் கொண்டாடி மகிழ்ந்தனர். இதனை,

**குறுமுயல் மறுநிறம் கிளர, மதிநிறைந்து,**

**அறுமீன் சேரும் அகல்இருள் நடுநாள்;**

**மறுவிளக் குறுத்து, மாலை தூக்கி,**

**பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய**

**விழவுஉடன் அயர, வருகதில் அம்ம (அகம்.பா.141:7-11)**

என்ற பாடலில் சிறு முயலாகிய மறுவின் நிறம் விளங்கித் தோன்ற, மதிநிறைந்த கார்த்திகை நன்னாளில், இருள் அகன்ற நள்ளிரவில், வீதிகளில் திருவிளக்குகள் ஏற்றப்பட்டன. மாலைகள் தொங்கவிடப்பட்டன. பழமையான வெற்றிச் சிறப்பினையுடைய முதுமையான ஊரில், ஊர்மக்கள் பலரும் ஒருசேரக் கொண்டாடும் கார்த்திகைத் திருவிழாவில் நம்மோடு கூடிக் களித்துக் கொண்டாடும் வண்ணம் நம் தலைவரும் விரைந்து வருவார். மேலும், உலகம் யாவும் போற்றும் நல்ல புகழையுடைய நான்கு வேதங்களைக் கொண்ட பழம்பெரு நூலைத் தந்தருளிய மூன்று கண்களையுடைய சிவபெருமான் எழுந்தருளிய சிறப்பினைக் கொண்டது. இதனை,

**‘நான்மறை முகநூல் முக்கட் செல்வன்,(அகம்.பா.181:16)**

என்ற பாடலடி மூலம் அறிய முடிகின்றது. மேலும், உழவர்கள் செருக்குடன் எழுப்பிய ஆரவாரத்துக்கு அங்சிப் பறந்து போன அழகிய மயிலானது, தெய்வத்தையுடைய குன்று பொலிவினைப் பெறுமாறு வந்து தங்கும் சிறப்பினையுடைய அழகிய மணிவிளக்குகள் ஒளிசெய்யும் திருச்சீலைவாயிலில் அமர்ந்திருக்கும் வெல்லும் போரை வல்லவன் முருகன் என இறை வழிபாட்டைப் பற்றி காணப்படுகின்றது.

**கழனி உழவர் கலிசிறந்து எடுத்த**

**கறங்குஇசை வெரீஇப் பறந்த தோகை**

**அணங்குடை வரைப்பகம் பொலியவந்து இறுக்கும்**

**திருமணி விளக்கின் அலைவாய்ச்   (அகம்.பா.266: 17-20)**

என்ற பாடல் அடிகள் மூலம் பெண்கள் அச்சத்துடனும், ஒழுக்கத்துடனும் தெய்வ வழிபாட்டை மேற்கொண்டுள்ளனர்.

**சடங்குகள்**

மனிதன் இயற்கையின் தேவையை தொடர்ந்து பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற விருப்பமே தொடர் வழக்கமாக உருப்பெற்றது எனலாம். தேவையெனில் உயிர் வாழ்தலுக்கான நலம் பேணும் தொழில் என்றும் கொள்ளலாம். தொழில் எனில் வழக்கமாக தொடர் நிகழ்வாக உழைப்பாக விரும்பி ஏற்றுக் கொள்வது. அவனது வாழ்க்கையில் இயற்கை நலம்பேணும் சிந்தனை இயல்பானது. இயற்கை, மனிதன்,உழைப்பு என்ற மூன்றும் ஒன்றின் ஒன்று சுழற்சிப் பாதையில் அமைவதை மனித குலம் அறியும். அந்தச் சுழற்சி முறையானது இயல்பாக வருங்கால சந்ததியினருக்கும் கற்று தரும் ஒரு பயிற்சிக் களமாகவே சடங்கு நிகழ்த்தும் களம் அமைவதை சமூக வரலாற்றுப் போக்கின் தன்மையோடு ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ள முடியும். இச்சூழலில் உருவான தேவையை முன்னிறுத்திய மரபு முறையே பின்னர் மரபுச் சடங்கு என பெயர்பெற்றுக்கொண்டு தொடர்வதையும் அறிவோம். சங்க காலத்திற்கு முந்தைய மனித கலத்தில் தொட்டுவந்த மரபு முறைகளே இன்றும் இயற்கை வழிபாடு, முன்னோர் வழிபாடு, சூரிய, சந்திர வழிபாடு என ஐவகை நிலங்களிலும் ஆங்காங்கே அவரவர் விருப்பத்திற்கே முறைப்படுத்திக் கொள்ளப்பட்டு வந்தது. அத்தகைய ஐவகை நிலங்களிலும் செய்யப்பட்ட வழிபாட்டு முறைகள் தம் முன்னோரின் சடங்கு முறைகளாக சங்க இலக்கியப் பாடல்களிலும் எழுத்துரு பெற்றமை அறியலாம்.

ஒரு நிகழ்வு வழக்கமாகியே பின் தொடர் நிகழ்வான சடங்காக மாறிவிட்டது. மனிதன் இயற்கையோடு போராடத் தொடங்கிய நாளிலேயே தேவை என்ற அடிப்படை, வாழ்வாதார தேடலை வழக்கமாக கொண்டிருந்த சரியாக ஒரு அணுகுமுறை கடைப்பிடித்தாக வேண்டுமென்ற கட்டாயத்தில் தோன்றிய வழக்கமான செயல் மரபாகியது. பின்பு அது கற்பனை கடவுளரின் அருவ உருவ வணக்கமாகி, மரபு என்ற வழக்கமான சொல் சடங்கானது. அறிந்துணர்ந்த நுட்பமான அறிவியல் செயல்களை என்றும் சொல்ல முடியாத காலங்களில் தேவை நிறைவேறும் செயலுக்கு ஆயத்தமாகும் மரபு செயல்பாட்டு முறையே சடங்கு எனக் கொள்ளப்பட்டது. பிறப்பிலிருந்து இறப்பு வரை மனித வாழ்க்கையோடு ஒரு நிகழ்வு நடந்தேற அல்லது குழந்தைப் பிறந்தவுடன் தாயின் தொப்புள் கொடியை அறுக்கும் முறையை தேவையான அறுவை முறை செயலாக்கத்தினை வழக்கமானது என்பது கொள்ள வேண்டி, திருமணத்தை

முறைப்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற கட்டாயத்தினை மரபாக கொண்டதால் பின்னர் அவ்வறிவியல் முறையினைச் சடங்கு என பெயராக்கிக் கொண்டனர். ஆக ஒரு தேவையை நிறைவேற்றும் தொடர் நிகழவு மரபு முறையை சடங்கு என சொல்லலாம்.

**சடங்கு தோன்றக் காரணம்**

ஒரு சாதி, இனம், குலம் முதலியவற்றைச் சேர்ந்த மக்கள் ஒரே வகைச் சடங்குகளை மேற்கொள்வார்கள். உண்மையில் சடங்குகளே இவர்களைப் பிரித்துக்காட்டவும் செய்கின்றன. குழுக்களின் மூத்த பெரியோர்கள் இச்சடங்குகளைக் கட்டிக்காக்கப் பெரிதும் உதவுகின்றனர். பெரும்பாலும் இவை எழுதாமறைகளாகவே இருந்துவிடுகின்றன. உயர்சாதியரிடையே எழுதி வைக்கப்பட்ட சாத்திரங்களின் அடிப்படையில் சடங்குகள் நிகழும்[12] என மொழிகின்றது கலைக்களஞ்சியம்.

புற உலக நிகழ்ச்சிகளும், அவற்றால் பெறுகின்ற அனுபவங்களும் சடங்குகளாக உருவாகின்றன. தனி மனிதனுக்கு உண்டாகும் நெருக்கடியான காலத்தில் இச்சடங்கு உருவாகி இருக்கிறது எனலாம். மேலும் தெய்வத்தை வழிபட்டால் குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கையிலும், தெய்வத்தின் பெயரை குழந்தைக்கு வைத்தால் குழந்தையைப் பாதுகாக்க முடியும் என்ற எண்ணத்திலும், இச்சடங்கு உருவாகியிருக்கலாம். மக்கள் பின்பற்றும் சில வழக்கங்கள் நாளடைவில் சடங்குகளாக மாறின[13] என க.அழகர் கூறுவர்.

பழக்கமே காலப்போக்கில் சடங்காக நிலைத்திருக்கக்கூடும் என ஆறு. இராமநாதன் கூறுவர். அதன் பழக்கம் என்பது பயிற்சியின் முதிர்ச்சி என்பர். உயர்ந்தோர் பழக்கங்கள் காலப்போக்கில் வழக்கங்கள் என்று பெயர் பெறுகின்றன. ஒரு செயல் நன்மை விளைவிக்கின்றது என்று மக்கள் உணரும் நிலையில் அது பழக்கமாக மாறுகிறது. காலப்போக்கில் அறிவியல் கல்வி காரணமாகச் சமுதாயத்தில் முன்னேற்றம் ஏற்படும் போது சடங்காக மட்டும் நிற்கின்றது[14] என்ற அவரின் கருத்து அரண் செய்யும்.

சடங்குகளால் பல நன்மைகள் விளையும், அவை.

- உறவினர்களுக்குள் நல்லுறவுகள், கட்டுப்பாடுகள் உண்டாகும்
- கருத்து வேறுபாடுகள், பகை உணர்வுகள் நீங்கும்
- ஓர் இனத்திற்கும் மற்றோர் இனத்திற்குமிடையே உள்ள வேறுபாடு அகலும்

என்பனவாகும். பண்டைய மக்கள் சடங்காச்சாரங்களை வைத்து வாழ்க்கையில் பலன்களைப் பெற மிக அவசியமெனக் கருதினர். மழை பெய்யவும், பயிர் வளரவும், காய் கிழங்குகள் கிடைக்கவும், நோய் நொடிகள் வராமல் இருக்கவும், புயல் போன்ற இயற்கை விபத்துக்கள் நடக்காமல் இருக்கவும்[15] சடங்குகளைத் தொடக்கால மனிதர்கள் நிகழ்த்தியுள்ளனர்.

**வதுவைச் சடங்கு**

சங்க காலத்தில் வதுவை மணம் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. வதுவை என்ற சொல் “வதிதல்”என்ற பொருள் தரும். இது “கூடிவாழ்தல்” என்ற பொருளில் பணத்தைக் குறித்தது. இச்சொல் சிலம்பு, சிந்தாமணி, பெருங்கதை,கந்த புராணம் போன்ற இலக்கியங்களில் திருமணத்தைக் குறிக்கவே பயன்படுத்தப்பட்டுள்ளது.

சங்க இலக்கியத்தின் அகப்பாடல்களுக்குத் தொல்காப்பியம் வகுத்த மரபின்படி வதுவைக்கு முந்தைய களவு வாழ்க்கை, வதுவையின் ஊடாக மாறிக் கற்பு வாழ்க்கையாக அமைகிறது. பெற்றோர், ஊரார் சம்மதத்தோடும், ஆண் மடலேறுதல் மூலமாகவோ, பெண்ணோடு உடன்போக்குச் செல்லுதல் மூலமாகவோ, வதுவை நடைபெறுகிறது.

உழுத்தம் பருப்புடன் கூட்டிச் சமைத்த குழைவாக வெந்த பொங்கலொடு பெருஞ்சோற்றுத் திரளை உண்பது இடைவிடாது நிகழ்ந்து கொண்டே இருந்தது. வரிசையாக கால்களை நட்டுக் குளிர்ந்த பெரிய பந்தலினை அமைத்தனர். அப்பந்தலில் கொண்டு வந்த மணலைப் பரப்பினர். மனையின் கண் விளக்கினை ஏற்றி மாலைகளைத் தொங்கவிட்டனர். அந்நாளோ, தீய கோள்கள் நீங்கப் பெற்ற வளைந்த வெண்மையான திங்களைத் தீமையற்ற சிறந்த புகழையுடைய உரோகிணி வந்து கூடும் நன்னாளாம் மணநாளாகும். அந்நாளிலே, மிக்க இருள் நீங்கப் பெற்று அழகு பெறப்பொழுதும் புலர்ந்தது. மணஞ்செய்து வைக்கும் ஆரவாரமும் பெற்று அழகு பெறப் பொழுதும் புலர்ந்தது. மணஞ்செய்து வைக்கும் ஆரவாரமுடைய முதிய மங்கள மகளிர், தலையில் நின்ற நீர்க் குடத்தினைச் சுமந்தடைய முதிய மங்கள மகளிர், தலையில் நிறை நீர்க் குடத்தினைச் சுமந்தவராய்க் கைகளில் புதிய அகன்ற மண்டை என்னும் கலத்தினை ஏந்தியவராய் ஒருங்கு கூடினர். முன்னே தருவனவற்றையும், பின்னே தருவனவற்றையும் முறைமுறையாக எடுத்துத் தந்தவண்ணம் இருந்தனர். தேமல் படர்ந்த அழகிய வயிற்றினையுடைய தூய அணிகலன்களை அணிந்த மகனைப் பெற்றெடுத்த மகளிர் நால்வர் கூடிநின்று, கற்பினின்றும் வழுவாது நல்ல பலவற்றினும் உதவியாக இருந்து நின்னை மனைவியாகப் பெற்ற நின் கணவனைப் பேணிக் காக்கும் பெருவிருப்பத்தை உடைய ஆகுக எனக் கூறி வாழ்த்தினர். வாழ்த்தியவராய், நீரொடு குளிர்ந்த இதழ்களையுடைய மலர்களை நெல்லுடன் கலந்து அவளது பலவாகிய கரிய கூந்தலையுடைய தலையில்லே தூவினர். இவ்வாறாக, வதுவை மணமும் நடந்து முடிந்தது. இதனை,

**உழுந்து தலைப்பெய்த கொழுங் களி மிதவை**

**பெருஞ் சோற்று அமலை நிற்ப, நிரை கால்**

**தண் பெரும் பந்தர்த் தரு மணல் ஞெமிரி,**

**மனை விளக்குறுத்து, மாலை தொடரி,**

**கனை இருள் அகன்ற கவின்பெறு காலை;**

**கோள் கால் நீங்கிய கொடு வெண் திங்கள்**

**கேடு இல் விழுப் புகழ் நாள் தலைவந்தென,**

**உச்சிக் குடத்தர்,புத்தகல் மண்டையர்,**

**பொது செய் கம்பலை முது செம் பெண்டிர்**

**முன்னவும் பின்னவும் முறை முறை தரத்தர,**

**புதல்வற் பயந்த திதலை அவ் வயிற்று**

**வால் இழை மகளிர் நால்வர் கூடி,**

**'கற்பினின் வழாஅ, நற் பல உதவிப்,**

**பெற்றோற் பெட்கும் பிணையை ஆக!'என,**

**நீரொடு சொரிந்த ஈர் இதழ் அலரி**

**பல் இருங் கதுப்பின் நெல்லொடு தயங்க,**

**வதுவை நல் மணம் கழிந்த பின்றை, (அகம்.பா.86:1-17)**

என்ற பாடல் மூலம் அறிய முடிகின்றது. மேலும், பெண் வீட்டில் புதுமணலைப் பரப்பிப் பொலிவுடைய எம் மகளுக்குத் திருமணம் எனச் சொல்லி மணத்துக்கு வேண்டுவனவற்றைச் செய்கின்றனர். இதனை,

**"நனைவிளை நறவின் தேறல் மாந்தி,**

**புனைவினை நல்இல் தருமணல் குவைஇ,**

**'பொம்மல் ஓதி எம்மகள் மணன்' என,**

**வதுவை அயரந்தனர் நமரே" (அகம்.பா.221:1-4)**

என்ற பாடல் அடிகள் மூலம் அறிய முடிகின்றது. மேலும், பெருமையையுடைய ஆண்யானை மரம் அசையும்படிக் குத்திப் பிளந்தலால் புண் உண்டாக்கிய ஓமை மரத்தின் பட்டையுரிந்த சிவந்த அடிமரத்தினை நோக்கி, அதனை ஊன் எனக் கருதி யாமரத்திலுள்ள பருந்து வந்து தங்கும். வானளாவிய சிகரங்களில் வெப்பம் பொருந்திய மேல் காற்றினால் நெல்விளையும் நெடிய மூங்கில் அசைந்தாடும். அத்தகைய காட்டின்கண் இம் முதுவேனிற் பருவத்தே எம் மகளை உடன் அழைத்துச் செல்ல ஒருதலையாகத் துணிந்தான். இதனை,

**கடும்பகட்டு ஒருத்தல் நடுங்கக் குத்தி,**

**போழ்புண் படுத்த பொரிஅரை ஓமைப்**

**பெரும்பொளிச் சேயரை நோக்கி, ஊன்செத்து,**

**கருங்கால் யாத்துப் பருந்துவந்து இறுக்கும்**

**சேண் உயர்ந்து ஓங்கிய வான்உயர் நெடுங் கோட்டுக்**

**கோடை வெவ்வளிக்கு உலமரும்**

**புல்இலை வெதிர நெல்விளை காடே, (அகம்.பா.397:10-16)**

என்ற பாடல் அடிகள் மூலம்வதுவைச் சடங்கையும், தாய்த்தலைமையும் பற்றி அறிய முடிகின்றது.

**சிலம்பு கழி நோன்பு**

தமிழர்கள் மணமாகாத தம் பெண்களுக்குக் காலில் சிலம்பை அணிவித்து, அவர்கள் மனம் ஆகாதவர்கள்; அவர்கள் திருமணத்தை எதிர்பார்த்த வண்ணம் உள்ளனர் என்பதை அறிவித்து அவர்கள் மணம் புரிந்து கொள்ளும் பொழுது அச்சிலம்பினைக் கழற்றி ஒரு சடங்கு முறையும் செய்து விடுவர். சிலம்பு காலில் இல்லாவிடத்து அவர்கள் மணம் புரிந்த மகளிராயினர். இனி வேறு ஆடவர் அவர்களை விருப்புடன் பார்க்கலாகாது என்ற மன நோக்குடன் வாழ்ந்து வந்தனர் மணநாளுக்கு முன்னாள் நிகழும் இச்சடங்கு முறையை “சிலம்புகழி நோன்பு” என்று கூறுவர்.

பெண்ணிற்கு மணம் நிச்சயித்த பிறகு அவளது பாதங்களில் உள்ள சிலம்பினை மணவினை தொடங்குவதற்கு முன்தாய் வீட்டில் சிலம்பு கழி அயர்தல் செய்வர். இது சிறப்பாக போற்றப்படும் ஒரு சடங்காக கருதப்பட்டுள்ளது.

இவள் தந்தையது இட்டு வைத்து உண்ணும் உணவு மிகுந்துள்ள மிக்க காவலையுடைய பெரிய வீடடின்கண், செல்லும் இந்தோறும் உடம்பின் நிழலைப் போல நீங்காது சென்றிருப்பேன். மாலையையுடைய தோழியர் குழாத்தோடு விளையாடும் விளையாட்டினை மேற்கொண்டு தொகுதி வாய்ந்த பரவினையுடைய சிலம்பு ஒலிக்கும்படி அவள் விளையாடும் இடந்தோறும் அகலாது இடந்திருப்பேன். அதுவும் கழிந்ததே என்று கூறியது. இதனை,

**காடு உடன் கழிதல் அறியின் - தந்தை**

**அல்குபதம் மிகுந்த கடியுடை வயல் நகர்,**

**செல்வுழிச் செல்வுழி மெய்ந்நிழல் போல,**

**கோதை ஆயமொடு ஓரை தழீஇ,**

**தோடு அமை அரிச் சிலம்பு ஒலிப்ப, அவள்**

**ஆடுவழி ஆடுவழி, அகலேன் மன்னே! (அகம்.பா.49:13-18)**

என்ற பாடல் அடிகள் மூலம் அறிய முடிகின்றது. மேலும், பொற்றொடி ஒலிக்கக் கையினை வீசியும், சிவந்த அடியிற் சிலம்புகள் விளங்க உலவியும் என் மகள் போய் விட்டனள். இதனை,

**பொலந்தொடி தெளிர்ப்ப வீசி; சேவடிச்**

**சிலம்பு நக இயலிச் சென்ற என் மகட்கே (அகம்.பா.117:8-9)**

என்ற பாடல் அடிகள் மூலம் குறிப்பிடுகின்றது. மேலும், பெரும்புகழ் கொண்ட பாண்டியனின் வளம் பொருந்திய மதுரையைப் போன்ற அரிய காவலையுடைய எம் பெருமனையில், அவளுக்குச் சிலம்புகழி நோன்பும் செய்யப் பெறவில்லை. இதனை,

**பெரும்பெயர் வழுதி கூடல்அன்னதன்**

**அருங்கடி வியல்நகர்ச் சிலம்பும் கழியாள், (அகம்.பா.315:7-8)**

என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றது. மேலும், அன்னை அறிந்து கொள்வாள் என்று அஞ்சி, ஆராய்ந்து எடுத்து அணிந்து கொண்ட பரல் இட்டு மூடிய சிலப்பினைக் காலினின்றும் கழற்றியவளாய், மூங்கில் உயர்ந்து வளர்ந்த பக்கமலையையுடைய பெருமலையை என் மகள் தன் தலைவனுடன் கடந்து சென்றுவிட்டாள். இதனை,

**அரிபெய்து பொதிந்த தெரிசிலம்பு கழீஇ,**

**யாய்அறி வுறுதல் அஞ்சி**

**வேய்உயர் பிறங்கல் மலைஇறந் தோளே,(அகம்.பா.321:15-17)**

என்றபாடல் அடிகள் மூலம் அறிய முடிகின்றது. மேலும், என் மகளோ, அருஞ்சுரம் கடந்து அறியாத் தேயத்துக்கு அழைத்துச் சென்ற இளையானுக்கு மிகவும் பொருத்தமும் தகுதியும் உடையவள். அத்தகையாள், சீரும் சிறப்பும் இல்லாத சிற்றூரில் வறுமையால் வாழும் பெண்களின் ஒற்றைப்பசு கட்டப்பட்ட தூண் கொண்ட முகப்பினையுடைய புல்வேய்ந்த குடிசையான வறிய இல்லத்தில் சிலம்பினைக் காத்து அவனை மணஞ் செய்து கொண்டாளோ என எண்ணித்தான் யான் பெரிதும் வருந்துகின்றேன். இதனை,

**சிறியோற்கு ஒத்தளன் பெருமடத் தகுவி,**
**'சிறப்பும் சீரும் இன்றி, சீறூர்**
**நல்கூர் பெண்டின் புல்வேய் குரம்பை**
**ஓர்ஆ யாத்த ஒருதூண் முன்றில்**
**ஏதில் வறுமனைச் சிலம்புஉடன் கழீஇ,**
**மேயினள் கொல்?என நோவல் யானே(அகம்.பா.369:21-26)**

என்ற பாடல் அடிகள் மூலம் அறிய முடிகிறது. மேலும், தலைவன் ஊக்கம் தர, ஊக்கம் கொண்டவளாய் வழி வருத்தம் பாராது அவனுடன் சென்று விட்டாள் நம்தலைவி. முள் போன்ற கூர்மையான பற்கையும், பவளம் போன்ற சிவந்த வாயினை உடையவள் இவள். சிறிதும் அச்சமின்றித் தான் முன்பின் அறியாத நாடு பல கடந்து, சிலம்பு கழித்து அத்தலைவனை மணம் செய்து கொண்டது கொடுமையிலும் கொடுமை என செவிலித்தாய் கூறுவதிலிருந்தும் புலப்படுகின்றன.

**பரிசம் அளித்தல்**

பெண்ணுக்கு மணமகன் பரிசமளிக்கம் வழக்கம் தொன்று தொட்ட தமிழர் மரபாகும். அன்று இது 'முலைவிலை''சிறுவளைவிலை' 'பரியம்' என்று அறியப்பட்டது. இன்றுகூட கிராமப்புறங்களில் மணம் பேசும்பொழுது மணமகன் சார்பாக மணமகளுக்கு பரிசச்சேலை, நகை, அணிமணிகள் தந்து திருமணத்தை உறுதி செய்வது பழக்கத்தில் உள்ளது. ஆயினும், பழந்தமிழர் வாழ்வில் இல்லாத வரதட்சணை பூதாகரமாக வளர்ந்து பெண்ணின் நிலையை துன்பத்திற்குள்ளாக்குகிறது. இன்று பரிசம் போடுபவர்கள் சீர்செனத்தி என்ற பெயரில் பெருந்தொகையை மணமகள் மூலம் பெற்று விடுகின்றனர். சங்க காலத்தில் இருந்தது போல் ஆடவன் பெண்ணை மதித்து தம் கைப்பொருளால் வாங்கிய பரிசத்தை தந்து மணம் முடித்தால் நன்று அல்லவா.மணமகளின் பெற்றோர் வீட்டை அலங்கரித்து மணலைகுவித்து எமது மகளுக்கு திருமணம் செய்ய நிச்சயித்துள்ளோம் என்னும் செய்திக்கூறி திருமணத்தின் முன்னர் செய்யப்படும் திருமண உறுதி விழா ஒன்றும் நடத்தப்பட்டது.

**திருமணம்**

திரு என்னும் சொல் அழகு, செல்வம், செம்மை, சிறப்பு எனப்பல பொருள்படும். திருமண வாழ்வினால் தான் அன்பு, அறம், பண்பு, கலை, கூடி வாழ்தல்,விருந்தோம்பல், தியாக மனப்பான்மை முதலிய நற்பண்புகள் உண்டாகின்றன உழைக்க வேண்டும் என்ற மனப்பான்மையை வளர்ப்பதே திருமணம் ஆகும்.[16]

ஆணும், பெண்ணும் கணவன் மனைவியாகும் நிகழ்ச்சி அல்லது சடங்கு கல்யாணம் என திருமணம் பற்றி விளக்கம் தருகிறது களைக்களஞ்சியம்.[17] மணம் என்பது மக்களின் மனம் ஒத்ததாகும். வாழ்வு முழுவதும் மணம் பெற்றுத் திகழ்வதற்கு ஏதுவான இந்த நிகழ்ச்சியை மணம் என்பர்.[18]

ஒருத்தியை விட்டு ஒருவன் ஓடாமல் அவளையே மனைவியாகக் கொண்டு கடைசி வரைக்கும் வாழவேண்டும் என்ற விதிப்படி பெரியோர் முன்னிலையில் சாட்சியாகத் தாலி கட்ட வேண்டும் என்ற நிலையைப் பின்னர் வந்த பெரியவர்கள் ஏற்படுத்தியிருக்க வேண்டும். இதனை,

**பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**

**ஐயர் யாத்தனர் கரணம் என்ப**[19]

என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

தீய கோள்கள் நீங்கப் பெற்ற, வளைந்த வெண்மையான திங்களைத் தீமையற்ற சிறந்த புகழையுடைய உரோகிணி வந்து கூடும் நன்னாளாம் மணநாளாகும். அந்நாளிலே, மிக்க இருள் நீங்கப் பெற்று அழகு பெறப் பொழுதும் புலர்ந்தது. மணஞ் செய்து வைக்கும் ஆரவாரமுடைய முதிய மங்கள மகளிர், தலையில் நிறை நீர்க் குடத்தினைச் சுமந்தவராய்க் கைகளில் புதிய அகன்ற என்னும் கலத்தினை ஏந்தியவராய். ஒருங்கு வடினர். இதனை,

**கனை இருள் அகன்ற கவின்பெறு காலை;**

**கோள் கால் நீங்கிய கொடு வெண் திங்கள்**

**கேடு இல் விழுப் புகழ் நாள் தலைவந்தென,**

**உச்சிக் குடத்தர், புத்தகல் மண்டையர்(அகம்.பா.86:5-8)**

என்ற பாடல் அடிகள் மூலம் அறிய முடிகின்றது. மேலும், புள் நிமித்தம் பார்த்தனர். தெளிந்த ஒளியுடைய இடமகன்ற அழகிய பெரிய வானம் விளக்கமுறத் திங்களை உரோகிணி கூடிய நன்னாளில் மண்மனையினை அழகுபடுத்தினர். கடவுளை வழிப்பட்டனர். மணத்தை அறிவிக்கும் மணமுழவுடன் பெரிய முரசும் முழங்க, மங்கல மகளிர் தலைவிக்கு மன நீராட்டினர்.

**புள்ளுப்புணர்ந்து இனிய ஆக, தெள்ஒளி**

**அம்கண் இருவிசும்பு விளங்க, திங்கட்**

**சகடம் மண்டிய துகள்தீர் கூட்டத்து,**

**கடிநகர் புனைந்து, கடவுட் பேணி,**

**படுமண முழவொடு பருஉப்பணை இமிழ (அகம்.பா.136:3-7)**

என்ற பாடல் அடிகள் மூலம் மணவினைச் சடங்குகளைப் பற்றி அறிய முடிகின்றது.

கட்டுவிச்சியை “அகவன் மகள்” என்று கூறுவர். இவள் தெய்வங்களை அழைத்துக் குறி கூறும் இயல்பை உடையவள். வெள்ளிய நுனியை உடைய சிறுகோல் ஒன்றை, அதாவது வெள்ளிப்பூண் கட்டிய சிறிய கணுக்களோடு கூடிய முஞ்கிற் கோலைக் கையிலே பிடித்திருப்பர்.இவர்கள் முற்றத்தில் நெல்லை இட்டு அதனை எண்ணி, அதனால் போந்த சில நிமித்தங்களை அறிந்து கூறுவாள். தெய்வம் ஏறிக் குறி கூறுதலும் உண்டு. விறலியர் வளைந்த முன்கையினையும், பெரிய மூங்கில்களையுடைய குறுங்காட்டில் ஆராய்ந்து அறுத்தெடுத்த சிறிய கணுக்கள் கொண்ட நுண்ணிய கோலினையும் உடையவர்கள் என்று கூறியது. இதனை,

**இருங் கழை இரும்பின் ஆய்ந்து கொண்டு அறுத்த**

**நுணங்கு கண் சிறு கோல் வணங்குஇறை மகளிரொடு (அகம்.பா.97:9-10)**

என்ற பாடல் அடிகள் மூலம் அறிய முடிகின்றது. மேலும், தித்தன் வெளியன் என்பான் நுண்மையான கோலையுடைய பாணரைப் பாதுகாத்த பெரிய புகழையும், சினம் மிக்க படையையும் உடையவன்.

**நுண்கோல் அகவுநர்ப் புரந்த பேர்இசை, (அகம்.பா.152:4)**

என்ற பாடல் அடிகள் மூலம் அறிய முடிகின்றது. மேலும், பிரப்பங் கோலைக் கையிற் கொண்ட பாணர்கள் விரும்பினால், வெண்மையான கோடுகளையும் தலைமைத் தன்மையையும் உடைய யானைகளை வழங்கி மகிழும் வள்ளன்மை உடையவன். இதனை,

**நுண்கோல் அகவுநர் வேண்டின், வெண்கோட்டு**

**அண்ணல் யானை ஈயும் வண்மகிழ் (அகம்.பா.208:3-4)**

என்ற பாடல் அடிகள் மூலம் குறி கூறுதலைப் பற்றி அறிய முடிகின்றது.

**வெறியாட்டு**

மனிதர்மேல் தெய்வம் ஏறி வருவதுண்டு என்ற நம்பிக்கையில் இருந்து உருவானதே 'வெறியாட்டு','ஆவேசம்' என்று இதனைக் கூறுவர். சங்ககாலத்தில் முருகனோடு தொடர்புடையதாக இவ்வெறியாடல் நிகழ்ந்தது. வேலினைக் கையில் ஏந்தி ஆடியோன் வேலன் எனப்பட்டான். வேலனின் வெறியாடல் பற்றி அகப்பாடல்களே கூறுகின்றன. தலைவி தலைவனை நினைத்து வருந்தும் பொழுது தலைவியின் உடம்பு மெலிந்துபோவதை அறிந்து பெற்றோர் தம் மக்களுக்காக செய்யும் சடங்குகளுள் ஒன்று வெறியாட்டு.தொல்காப்பியர் இத்தகைய வழக்கத்தைக் "களம்பெறக் காட்டினும்" என்றும்

**"கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும்**

**ஒட்டிய திறத்தால் செய்திக் கண்ணும்"[20]**

என்றும் குறிப்பிடுகிறார்.

அச்சம் பொருந்திய அந்த நள்ளிரவில் நம் தலைவன் சந்தனம் மணம் கமழப் பக்க மலையில் உள்ள அரிய முழைஞ்சுகளில் செறிந்து மலர்ந்த பல்வேறு மலர்களையும் வண்டுகள் மொய்க்குமாறு சூடிக் கொண்டான்.

**முருகு ஆற்றுப்படுத்த உரு கெழு நடு நாள்,**

**ஆரம் நாற, அரு விடர்த் ததைந்த**

**சாரற் பல் பூ வண்டு படச் சூடி(அகம்.பா.22:11-13)**

என்ற பாடல் அடிகள் மூலம் அறிய முடிகின்றது. மேலும், வெறியாடும் பெரிய பெரிய களத்தினைப் போன்று காட்சி தரும் பெரிய மலையை அடுத்துள்ள சாரலின்கண், நீ நண்பகலில் வருதல் வேண்டும் என்று தோழி கூறுகிறாள். இதனை,

**வெறிஅயர் வியன்களம் கடுக்கும்**

**பெருவரை நண்ணிய சாரலானே. (அகம்.பா.182:17-18)**

என்ற பாடல் அடிகள் மூலம் வெறியாட்டுதலைப் பற்றி அறிய முடிகின்றது.

**இறப்புச் சடங்கு**

ஆஅய் அண்டிரன் வீழ்ந்தான். மிக்க விரைவுடன் களம் வந்த வேளிர் மகளிர் பலர், நிறம் மிக்க பூக்களாலான அழகிய மாலைகளை அழித்து விட்டுஅழுது அரற்றி ஆராவாரம் செய்தனர். அவ்வழுகை ஆரவாரத்தினை, பழிநீங்கப் பகையரசர் படைவெல்லும் விளங்குகின்ற பெரிய சேனையினையுடைய அகுதை என்பான் நீக்கினான். இதனை,

**பெருவிதுப் புற்ற பல்வேள் மகளிர்**

**குரூஉப்பூம் பைந்தார் அருக்கிய பூசல்,**

**வசைவிடக் கடக்கும் வயங்குபெருந் தானை**

**அகுதை களைதந் தாங்கு,மிகுபெயல் (அகம்.பா.208:15-18)**

என்ற பாடல் அடிகள் மூலம் மாலை, வளையல் களைந்த சடங்கினை அறிய முடிகின்றது.

**மழைச்சடங்கு**

கன்னி மகளிர் இளமையில் நோற்க்கும் நோன்புகளிலே ஒன்று அம்பாவாடல். இதனை தைந்நீராடுதல் என்றும் குறிப்பிடுவர். இது பூமியானது மழைவளம் பெற்று குளிர்வதற்காகவும் அக்கன்னியர் தமக்கு ஏற்ற கணவனைப் பெற்று அவனுடன் கூடி என்றும் இன்பம் பெற்று சுற்றமுடன் சிறந்து வாழ வேண்டும் என்பதற்காகவும் மேற்கொள்ளப்படும் சடங்காகும். அவர்களுக்கு சடங்கறிந்த முது பார்ப்பணிமார் நோன்பு நோற்கும் முறையை தெரிவிக்க, கன்னி மகளிர் மார்கழி மாதத்து நிறைமதிநாளாகிய திருவாத்திரையில் அதிகாலையில் நீராடி நோன்பு நோற்கின்றன.புகழ்மிகக் சிறப்பினை உடையது கொற்கைப் பட்டினம். தழையாடையை உடுத்தியமையால் பொலிவு பெற்றும் பக்கம் உயர்ந்த அல்குலினையுடையவர் நெய்தல் நிலப் பெண்கள்.அப்பட்டினத்தின் துறைமுகத்தில் விளங்குகின்ற ஒளியையுடைய

முத்துக்களோடு வல்புரிச் சங்கினைச் சொரிந்து, குளிர்ந்த துறையின்கண் தெய்வத்தினை வாழ்த்தி வணங்கினர். இதனை,

**தழைஅணிப் பொலிந்த கோடுஏந்து அல்குல்**

**பழையர் மகளிர் பனித்துறைப் பரவ,(அகம்.பா.201:6-7)**

என்ற பாடல் அடிகள் மூலம் அறிய முடிகின்றது.

**தொகுப்புரை**

- சங்க கால மக்கள் தம் அறியாமையால் செய்த செயல்களின் மூலமும், பிற செயல்பாட்டினால் வெளிப்படுகின்ற அச்சத்தின் காரணமாக நம்பிக்கையும், சடங்கும் கொண்டிருந்தனர் என்பதை ஆராயப்பட்டுள்ளன.சங்க கால மகளிர் இருவரிடமும் நம்பிக்கைகளும், சடங்குகளும் இருந்துள்ளமையை அறிய முடிகின்றது.

- சங்க கால மகளிர் இம்மை மறுமை பற்றிய நம்பிக்கைகள் கொண்டுள்ளனர். தலைவனின் மறுபிறப்புக் கோட்பாடு பற்றிய நம்பிக்கை வெளிப்படுகிறது.

- சங்க கால மகளிர் திருமணம் விரிச்சி கேட்டல் முதலானவற்றில் நம்பிக்கை கொண்டிருந்தனர் என்பதை உணர்த்துகிறது.

- நம்பிக்கைகளைப் போன்றே சங்க காலத்தில் சடங்குகள் மக்களிடம் நிலவியுள்ளது. சிலம்பு கழி நோன்பு, இறப்புச் சடங்கு மற்றும் மழைச்சடங்கு குறித்து ஆராயப்பட்டுள்ளன.

- சடங்குகளில் மனிதன் தன் வாழ்நாளில் பல்வேறு சடங்கு முறைகளைப் பின்பற்றுகிறான். சங்க கால சடங்கு முறை இன்றைய நடைமுறை வாழ்விற்கு தொடக்கமாக அமைகின்றது.

**சான்றெண் விளக்கம்**


1. பாக்கியமேரி, எ.ஃ.ப், தமிழர் பண்பாடும் பயன்பாடும், ப.எண்.23
2. க.காந்தி, தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், பக்.103-104
3. James Bissett Pratt, The Psychology of Religious Belief, P.32
4. Gustav Johoda, The Psychology of Supersition, P.4
5. க.கைலாசபதி, பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும், ப.44
6. சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வுகள், ப.153
7. க.காந்தி, தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், ப.104
8. சு.சத்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வுகள், ப.172
9. தே.லூர்து, நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், ப.296
10. சோமலெ (பு.பெ), தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்
11. தொல்காப்பயிர், தொல்காப்பியம், பொருள் 91:17
12. வாழ்வியர் களஞ்சியம், தொகுதி-7 ப.330
13. முனைவர் க.அழகர், விருதுநகர் மாவட்டப் பழியர்களின் வாழ்வியல், ப.129
14. ஆறு.இராமநாதன், நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல்,ப.193
15. நா.வானமாமாலை, தமிழர் பண்பாடும் தத்துவமும், ப.127 -128
16. க்ரியாவின் தற்காலத் தமிழர் அகராதி, ப.548
17. கலைக்களஞ்சியம், தொகுதி-8, ப.64
18. தமிழர் திருமண முறைகள், மதுரை தமிழ்ச்சங்க மலர், ப.105
19. தொல்.நூ.1089
20. தொல்.களவு.24

# முடிவுரை

## முடிவுரை

**'அகநானூற்றில் மகளிர் வாழ்வியல்'**என்னும் தலைப்பில் காணலாகும் அரிய செய்திகளும் மேற்கண்ட நான்கு இயல்களில் ஆராயப்பட்டுள்ளன. அவற்றில் கண்ட மெய்மைகள் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

- சங்க இலக்கியத்தில் அகம் சார்ந்த பாடல்களில் தலைவன், தலைவி இருவரும் சிறப்பிடம் பெற்றிருப்பினும், பாடுபொருள் அனைத்தும் தலைவியை மையமாகக் கொண்டுள்ளது.

- அகப்பாடலுக்கு உயிர் ஊட்டுபவளாகத் தலைவி திகழ்கிறாள்.

- தலைவி ஐந்திணைகளில் களவு, கற்பு என்னும் வாழ்க்கையில் ஏற்படுகின்ற அச்சம், சினம், ஏக்கம், தலைவனை நினைத்து இன்பம் கொள்ளுதல் ஆகியன குறித்து கண்டறியப்பட்டுள்ளன.

- தலைவி தன் குடும்பத்தின் வறுமையை ஏற்று வழி நடத்துபவளாகவும், தன்மானத்தைக் காத்தும், இரப்போர்க்கு கொடுக்கின்ற மனப்பான்மை உடையவளாகவும், திகழ்ந்துள்ளதை அறிய முடிகின்றது.

- உயிருடன் உயிர் கலந்து ஓருயிராய் ஒன்றிய தன்மையைக் கொண்ட தலைவியின் நட்பும், தோழியின் நட்பும் பேசப்பட்டுள்ளன என்பதைக் காண முடிகிறது.

- தலைவியின் மீது அக்கறையும் அவளை வளர்த்து ஆளாக்கும் பொருட்டும், தலைவனிடம் ஒப்படைக்கும் வரை தலைவியின் மீது அதிக கவனம் செலுத்தும் தன்மை உடையவளாக செவிலி திகழ்கின்றாள் என்பதைக் கண்டறியப்பட்டுள்ளது.

- சங்க காலத்தில் பரத்தை மருதத் திணைக்கு மட்டுமே உரியவள் என்பன சுட்டுகிறது. மக்கள் வாழிடங்களில் வாழாமல் தங்களுக்கென ஓர் இடத்தை அமைத்துக் கொண்டு வாழ்ந்துள்ளனர் என்பதை ஆராயப்பட்டுள்ளன.

- சங்க காலத்தில் பெண்பாற் புலவர்கள் தங்கள் அனுபவத்தாலும், பாட்டறிவாலும், தம் பாடல்களின் வழி வாழ்வையும் இயற்கையையும் எடுத்துக் கூறியள்ளனர்.

- பரத்தையர்கள் கணவன் மனைவியர்க்கிடையே பிணக்கை உண்டாக்குபவளாகவும், அப்பிணக்கை நீட்டிக்கச் செய்பவளாகவும் சென்ற

செல்வந்தர்கள் தம்மை விட்டுவிடக் கூடாது என்ற அவர்களின் மனப்பாங்கையும், கணவனோடு ஊடல் கொண்ட மனைவியை ஆற்றுப்படுத்துபவளாகவும், அதனைச் சார்ந்திருக்க வேண்டிய நிலையை எடுத்துரைக்கும் இயல்புடையவளாகவும், காமக்கிழத்தி உளப்பாங்கு வெளிப்படுவதை ஆராயப்பட்டுள்ளன.

- சங்க கால மகளிர் ஓவியக்கலை, கூத்துக்கலைகளில் தங்களை ஈடுபடுத்தியும், தங்களை மட்டும் அழகு செய்து கொள்ளாமல், தங்கள் வீட்டினைச் சுற்றி வேலியமைத்தும், பூக்கள் சூடியும் அழகுபடுத்தியுள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

- மகளிர் பல வகையான தொழில் முறைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருந்தனர். தங்களின் இல்வாழ்விற்குத் தேவையான பொருட்களைச் சேகரித்துக் கொண்டுள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.

- சங்க காலத்தில் மகளிர் பலவகையான விளையாட்டில் ஈடுபட்டுள்ளனர் என்பதும் ஆராயப்பட்டுள்ளன.

- திருமணம் பற்றிய நம்பிக்கைகளும், சடங்குகளான சிலம்பு கழி நோன்பு, கைம்மை நோன்பு ஆகிய சடங்குகள் குறித்து ஆராயப்பட்டுள்ளன.

- தமிழில் தோன்றிய இலக்கிய நூல்கள் செல்வாக்குடன் திகழ்ந்தது ஏனென்றால் அவ்விலக்கியங்கள் வாழ்க்கை நெறியை வலியுறுத்துகின்றன. அந்த வகையில் அகநானூறும் வாழ்வியலை மொழிந்தமையால் அவ்விலக்கியம் செவ்வியல் இலக்கியமாகத் திகழ்கிறது.

- மகளிரின் வாழ்க்கையை ஆராயும் போது அன்று முதல் இன்று வரை மகளிர் வாழ்வியல் போற்றுதலுக்கு உரிய பண்பாக அமைந்திருப்பதை அறிய முடிகிறது. மக்களின் பண்பாடு மனப்போக்கிற்கு ஏற்பக் காலந்தோறும் வாழ்வியல் முறைகள் மாறுபட்டு வளர்ச்சி அடைந்தள்ளமையைச் சங்க இலக்கியங்களின் வாயிலாக அறிய முடிகின்றது.

**முதன்மை ஆதாரங்கள்**

# துணைநூற்பட்டியல்

**துணைநூற்பட்டியல்**

**முதன்மை ஆதார்கள்**

1. செயபால்.இரா அகநானூறு தொகுதி 1 & 2

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்
41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்
அம்பத்தூர், சென்னை-600098.
முதற்பதிப்பு : 2004

**துணைமை ஆதாரங்கள்**

1. அருள்சீலி.ச.கே — சங்ககால மகளிரின் வாழ்வியல் மரபுகள்
சிவகுரு பதிப்பகம்,
சென்னை, 2011.

2. அழகர்.க, — விருதுநகர் மாவட்டப் பழியர்களின் வாழ்வியல்
வெண்ணிலா பதிப்பகம்,
இராஜபாளையம். 2004

3. அழகம்மை.கே.பி — சமூக நோக்கில் சங்க மகளிர்
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை, 2001

4. இரகுநாதன்.எஸ் — சமுதாய முன்னேற்றத்தில் மகளிர்
முருகானந்தா பதிப்பகம்,
சென்னை, 1997

5. இரபேல்.சு. — நம்பியகப்பொருள்
இரவிவேந்தர் வெளியீடு,
திருச்சிராப்பள்ளி.

6. இராசமாணிக்கம் — உளவியல் துறைகள் (தொகுதி-2)
திருமால் அன் கோ,
சென்னை.1999

7. இலக்குவனார்.சி — இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல்
வள்ளுவர் பதிப்பகம்,
புதுக்கோட்டை, 1966

8. .இளம்பூரனா — தொல்காப்பியம் பொருளதிகாரம்
சாரதா பதிப்பகம், சென்னை- 600018
நான்காம் பதிப்பு.

9. கலியாணசுந்தரம்.கெ — சங்க அகப்பாடல்களில் உணர்வுப் போராட்டம்
வாணி பதிப்பகம்,
கோவை, 2005.

10. கலைவாணி.இரா. — சங்க இலக்கியத்தில் இசை
ஏழிசைப் பதிப்பகம்,
மயிலாடுதுறை, 2005.

11. கிருட்டினன்.அ. — தமிழர் பண்பாட்டியல்
மணிவாசகர் பதிப்பகம்,
மதுரை, 1992.

12. கிருபானந்தவாரியார்.திருமுருகு — கம்ப இராமயண விரிவுரை
கார்த்திகேயன் பப்ளிகேஷன்ஸ்,
சென்னை, 1965.

13. குருமூர்த்தி.இராம — சங்க இலக்கியச் சிந்தனைகள் (தொகுதி-2)
மெய்யப்பன் பதிப்பகம்,
53, புதுத்தெரு, சிதம்பரம், 2009.

14. குமரிச் செழியன். — கற்றல்-மனித வளர்ச்சி,உளவியல்
சாரதா பதிப்பகம், சென்னை.

15. கைலாசபதி.க. பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்,
சென்னை, முதற்பதிப்பு- 1978.

16. சக்திவேல்,சு. நாட்டுப்புற இயல் ஆய்வுகள்
மணிவாசகர் பதிப்பகம், சென்னை,
இரண்டாம் பதிப்பு-1999.

17. சந்தானம்.எஸ். கல்வி உளவியல்
பழனியப்பா பிரதர்ஸ்,
சென்னை, 1987.

18. சரோஜினிதேவி.ந. இலக்கியப் பண்பாடு
மெர்க்குரி புத்தகக் கம்பெனி,
கோவை, 1923.

19. சிதம்பரனார் எட்டுத்தொகையில் தமிழர் பண்பாடு
இராயப்பேட்டை,
சென்னை, 2003.

20. சிதம்பரனார்சாமி பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும்
இலக்கிய நிலையம், சென்னை

21. சிவகாமசுந்தரி.சு தமிழ் இலக்கியம் காட்டும் மனையியல்
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை, 1992.

22. சிவப்பிரகாசம்.கு. இலக்கியம் காட்டும் வாழ்வியல்
அருள் பதிப்பகம்,
66,பெரியார் தெரு,

சென்னை,2007

23. சிவராஜ்.து. — சங்க இலக்கியத்தில் உளவியல்
சிவன் பதிப்பகம்,
விருப்பாட்சிபுரம், வேலூர்,
1994

24. சீனிவாசன்.ச. — திருக்குறள் (பரிமேலழகர் உரை)
கண்டோன் மென்ட்,
பல்லாவரம், சென்னை, 2007.

25. சுப்பிரமணியன்.ச.வே — தொல்காப்பியம் தெளிவுரை
மணிவாசகர் பதிப்பகம்,
பாரிமுனை, சென்னை, 2006

26. சுபாஷ் சந்திரபோஸ்.ச. — தமிழ் இலக்கிய வரலாறு
பாவை பப்ளிகேஷன்ஸ்,
சென்னை, 2005.

27. செங்கைப்பொதுவன் — பழங்கால விளையாட்டுகள்
செங்கைச்செல்வி,
தில்லை கங்காநகர்,
சென்னை, 2002.

28. செல்லம்.வே.தி — தமிழக வரலாறும் பண்பாடும்
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை, 1995.

29. செல்வகணபதி.இரா. — கம்பனில் பெண்ணியம்
வானதி பதிப்பகம்,
சென்னை, 2000.

30. சோமசுந்தரனார். — புறப்பொருள் வெண்பாமாலை

கழக வெளியீடு,

தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்

கழகம் (பி) லிட்,திருநெல்வேலி.

31. சோமலெ தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்

நேசனல் புக் டிரெஸ்டு, இந்தியா. 1975.

32. தட்சிணாமூர்த்தி.அ. பரிபாடல்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்

41-பி,சிட்கோ இண்டஸ்ட்டிரிஸ் எஸ்டேட்,

சென்னை-600098.

மூன்றாம் பதிப்பு- 2007.

33. தட்சிணாமூர்த்தி.அ தமிழர் நாகரிகமும் பண்பாடும்

வெற்றிச்செல்வி வெளியீட்டகம்,

தஞ்சாவூர்

3.4. தாயம்மாள் அறவாணன் மகடூ முன்னிலை பச்சைப்பசேல்
15,முனிரத்தினம் தெரு

அமைந்தகரை, சென்னை, 600029.

35. தாயம்மாள் அறவாணன் பெண் பதிவுகள்

பச்சைப்பசேல் பதிப்பகம்,

15,முனிரத்தினம் தெரு,

சென்னை, 2003.

36. திலகவதி.க. சங்க கால மகளிர் வாழ்வியல்

இறையருள் பதிப்பகம்,

திருச்சி, 2001.

37. தேவநேயப் பாவாணர் பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும்

பதிப்பகம்,

முதற்பதிப்பு-2009

38. நச்சினார்க்கினியார் தொல்காப்பியம் பொருளதிகாரம்

திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்

திருநெல்வேலி

முதற்பதிப்பு-1955

39. நடராசன்.திசு. திறனாய்வுக் கலை

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்

சென்னை-600098.

இரண்டாம் பதிப்பு-2003.

40. பலராமன்.க. உளவியல் துறைகள் (தொகுதி-2)

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்,

சென்னை.1999.

41. பாக்கியமேரி.எ.ப். தமிழர் பண்பாடும் பயண்பாடும்

அஞ்சனச்சிமிழ்ப் பதிப்பகம்,

சென்னை-600001,

முதற்பதிப்பு-1956.

42. பாலசுந்தரம்.திசு. நாலடியார்

வைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,

சென்னை-2007.

43. பாலசுப்பிரமணியன்.இரா. தமிழர் நாட்டு விளையாட்டுக்கள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,

அடையாறு, சென்னை.

44. பாலசுப்பிரமணியன்.சி. சங்க கால மகளிர்

பாரி நிலையம்,

சென்னை, 1983.

45. பாலசுப்பிரமணியன்.கு.வெ. நற்றிணை (மூலமும் உரையும்)
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல்

46. பாஸ்கரதாஸ்.ஈ.கோ. அகப்பொருள் பாடல்களில் தலைவி
திருமனை பதிப்பகம்,
கோவை-1980.

47. புலியூர்க்கேசிகன். சிலப்பதிகாரம்
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை, 1958.

48. புன்னைவனநாதன்.பு.சி. ஆசாரக்கோவை
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
சென்னை,
2007.

49. மணிமாறன்.கடவூர். தமிழ் பண்பாடும் வாழ்வியலும்
விடியல் வெளியீட்டகம்,
கிருட்டிணராயபுரம், கரூர் மாவட்டம்,
2002

50. மயிலை சிவமுத்து. தமிழர் திருமண முறை
சென்னை மாணவர் மன்றம்,
சென்னை-600001,
முதற்பதிப்பு-1956.

51. மணிமாறன்.கடவூர். தமிழ் பண்பாடும் வாழ்வியலும்
விடியல் வெளியீட்டகம்,

கிருட்டிணராயபுரம், கரூர் மாவட்டம்,

2002.

52. முத்துலட்சுமி.வே. பண்டைய தமிழ் இலக்கியங்களில் அறநெறிகள்

அனிதா பதிப்பகம்,

திருச்சிராப்பள்ளி.

53. முத்தையா.ஞ. பண்பாட்டுப் பதிவுகள்

காவ்யா பதிப்பகம்,

சென்னை-600024.

**முதற்பதிப்பு-2007.**

54. லூர்து.தே. நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள்

நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்,

பாளையங்கோட்டை,

1997.

55. வானமாமாலை.நா. தமிழர் பண்பாடும் தத்துவமும்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,

சென்னை,

முதற்பதிப்பு-1978.

56. வேங்கடசாமி நாட்டார மணிமேகலை மூலமும் உரையும்

3,ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு,

சென்னை- 14

நான்காம் பதிப்பு: 2013

57. .ஜானகி.த. செம்மொழித் தமிழல் மகளிர் மாட்சி (தொகுதி.1,2,3)

மெய்யப்பன் பதிப்பகம்,

சிதம்பரம்-608001,
முதற்பதிப்பு-2007.

## தமிழ் அகராதிகள்

1. க்ரியா
கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி
சென்னை – 600 020
முதற் பதிப்பு 1992

2. கலைக் களஞ்சியம்(தொகுதி-8)
தமிழ் வளர்ச்சிக் கழகம்,
சென்னை-5
முதற்பதிப்பு-1954.

**ஆங்கில அகராதிகள்**


| | | |
|---|---|---|
| 1. | James bissett praft | The psycology of religious belif<br>mamillan new York<br>1907. |
| 2. | Gustav johada | The psycology of superstition<br>Allen lane londan<br>1969. |


.

# பின்னிணைப்பு

| எண் | புலவர் பெயர் | அகம் | கூற்று | திணை |
|---|---|---|---|---|
| 1. | அஞ்சியத்தை மகள் நாகையார் | 352 | தலைமகன் தோழிக்கு சொல்லியது | குறிஞ்சி |
| 2. | அள்ளூர் நன்முல்லையார் பாடல்கள்-10 | 46 | தோழி தலைமகற்கு வாயில் மறுத்தது | மருதம் |
| 3. | ஒக்கூர் மாசாத்தியார் பாடல்கள்-7 | 324 | வினை முற்றிய தலைவன் கருத்துணர்த்து உழையர் கூறியது | முல்லை |
| | | 384 | வினை முற்றிய தலைவன் கருத்துணர்ந்து உழையர் கூறியது | முல்லை |
| 4. | ஔவையார் பாடல்கள்-26 | 11 | தலைவி தோழிக்குக் கூறியது | பாலை |
| | | 147 | தலைவி தோழக்குக் கூறியது | பாலை |
| | | 273 | தலைவி அறிவு மயங்கிச் சொல்லியது | பாலை |
| | | 303 | தலைவி நெஞ்சிற்குச் சொல்லியது | பாலை |
| 5. | கழார்க்கீரன் எயிற்றியார் பாடல்கள்-8 | 163 | தலைவி தோழிக்குச் சொல்லியது | பாலை |
| | | 217 | தலைவி தோழிக்குச் சொல்லியது | பாலை |
| | | 235 | தலைவி தோழிக்குச் சொல்லியது | பாலை |
| | | 294 | தலைவி தோழிக்குச் சொல்லியது | முல்லை |
| 6. | குமிழி ஞாழலார் நப்பசலையார் | 160 | தோழி வரைவு மெலிந்து சொல்லியது | நெய்தல் |
| 7. | குன்றியனார் பாடல்கள்-10 | 40 | தலைமகன் பொருள்வயிற் பிரிந்தவழி கிழத்தி தோழிக்குச் சொல்லியது | நெய்தல் |
| | | 41 | தலைமகன் கிழத்தியை நினைந்து சொல்லியது | பாலை |
| 8. | நக்கண்ணையார் பெருங்கோழி நாய்கன் மகள் (நக்கண்ணையார்)ள | 252 | தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழக்குச் சொல்லுவாளாய்த் தலைமகள் சொல்லியது | குறிஞ்சி |
| 9. | நல்வெள்ளியார் | 32 | தோழி தலைமகட்குக் குறை நயப்பக் கூறியது. தோழிக்குத் தலைமகள் சொற்றதூஉம்ஆம். | குறிஞ்சி |
| 10. | பொதும்பில் புல்லாளங்கண்ணியார் | 154 | வினைமுற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது | முல்லை |
| 11. | போந்தைப் பசலையார் | 110 | தோழி செவிலிக்கு அறத்தோடு நின்றது | நெய்தல் |
| 12. | முள்ளியூர்ப் பூதியார் | 173 | [illegible]கன் பிரிவின்கண் [illegible]பட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தியது | பாலை |

| | | | | |
|---|---|---|---|---|
| 13. | வெள்ளிவீதியார் பாடல்கள்-13 | 45 | வற்புறுத்தும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது | பாலை |
| | | 362 | இரவுக்குறிச் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது | குறிஞ்சி |
| 14. | வேறிபாடிய காமக்கண்ணியார் பாடல்கள்-3 | 22 | தலைமகன் இரவுக்குறி வந்து சிறைப்புறத்தானாகத் தோழியாற் சொல்லெடுக்கப்பட்டுத் தலைமகள் சொல்லியதூமாம் | குறிஞ்சி |
| | | 98 | தோழி தலைமகற்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது: (தோழிக்குத் தலைமகள் சொல்லியதூமாம்) | குறிஞ்சி |

# அகநானூற்றில் மகளிர் பாடல்கள்

**தலைவி**

| .எண் | திணை | பாடல்கள் |
|---|---|---|
| 1. | குறிஞ்சி | 8,52,58,82,102,128,138,252,292,298,328,332,348,378,398. |
| 2. | முல்லை | 74,194,294,364. |
| 3. | மருதம் | 6,16,36,56,66,144,196,206,236,266. |
| 4. | நெய்தல் | 40,260,290. |
| 5. | பாலை | 1,23,27,31,45,53,67,95,97,103,113,115,133,135, 139,141,147,151,155,157,163,183,185,217,229,233,237, 243,245,265,267,273,277,301,303,309,325,333,341,345, 347,349,355,367,375,389,391,395. |

**தோழி**

| வ.எண் | திணை | பாடல்கள் |
|---|---|---|
| 1. | குறிஞ்சி | 2,12,18,28,32,42,48,68,78,88,92,108,112,118,132,148,158,168, 172,178,182,188,192,202218,222,228,238,242,248,268,272,278,288,302,308,318,358,362,382,392. |
| 2. | முல்லை | 4,104,184,314,394. |
| 3. | மருதம் | 26,46,96,116,156,176,226,246,256,286,296,306,316,326,346,356,366,386. |
| 4. | நெய்தல் | 10,20,30,50,60,70,80,90,100,110,120,150,160,190,200,210,220,240,250,270,300,310,320,330,340,350,360,370,400. |
| 5. | பாலை | 11,13,25,60,61,65,69,71,73,81,85,91,107,111,125, 127,129,137,143,159,161,171,173,177,179,197,201,205,209,211,213,215, 221,223,231,247,249,251,253,255,259,269,271,281,283,285,295,307,311,313,317,319,323,331,357,359,363,387,393,399. |

**செவிலி**

| வ.எண் | திணை | பாடல்கள் |
|---|---|---|
| 1. | குறிஞ்சி | |
| 2. | முல்லை | |
| 3. | மருதம் | |
| 4. | நெய்தல் | |
| 5. | பாலை | 7,17,49,63,89,117,145,153,189,321,369,385,397. |

**நற்றாய்**

| வ.எண் | திணை | பாடல்கள் |
|---|---|---|
| 1. | குறிஞ்சி | |
| 2. | முல்லை | |
| 3. | மருதம் | |
| 4. | நெய்தல் | |
| 5. | பாலை | 15,35,55,105,195,203,207,219,263,275,315,383. |

**பரத்தை**

| வ.எண் | திணை | பாடல்கள் |
|---|---|---|
| 1. | குறிஞ்சி | |
| 2. | முல்லை | |
| 3. | மருதம் | 76,106,166,186,216,276,336,376,396. |
| 4. | நெய்தல் | |
| 5. | பாலை | |